

கல்கி
KALKI
30-7-1967
40
காசு



ஆனாலும், யோசித்துப் பார்த்தேன்... இந்த நிலைமைக்குப் பொறுப்பாளி என் மனைவி அல்ல ... தவறு என்னுடையதாகவே இருக்கலாம்... நானே எப்பொழுதும் சோர்ந்து களைத்திருந்தேன்.

டாக்டரின் ஆலோசனை மிகவும் உதவியாக இருந்தது. 'ஹார்லிக்ஸை அருந்துங்கள். எதையும் தாங்கும் அதிக சக்தியைப் பெற அது உதவும்' என்று அவர் சொன்னார்.



உண்மையிலேயே, நான் இப்பொழுது ஒரு புது மனிதன். ஹார்லிக்ஸ் தந்த அற்புத மாற்றம் எல்லோருடைய கவனத்தையும் கவர்கிறது!

மட்டற்ற மகிழ்ச்சி..

ஹார்லிக்ஸ் அருந்தியபின்!




வீட்டிலும், வேறெங்கும் தொல்லைக்குக் காரணம் களைப்புதான். இன்னும் அதிக சக்தி இருந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கலாம்! அதிக சக்திக்கு டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஹார்லிக்ஸ்! நீங்கள், செலவழிந்த சக்தியை மீண்டும் பெற்று, உறுதியும், தெம்பும் அடைந்து, எதையும் தாங்கும் திறனைப்பெற அது உதவும். மிகவும் விசேஷமானதொரு தயாரிப்புமுறையின் விளைவாக, சுலபமாக, விரைவில் ஜீரணமாகும் இயற்கை உணவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது ஹார்லிக்ஸ்.



ஆடைச் சத்து நிறைந்த பாலுடன், கோதுமை மாவு, மால்ட்டட் பார்லி இவற்றின் போஷாக்குச் சத்து கூடியது

ஹார்லிக்ஸ்

அதிக சக்தியை அளிக்கிறது!



கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, ஆடி 14 - ஜூலை 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

நினைவுத் திரையில்...

அன்பார்ந்த கல்கி நேயர்களுக்கு வணக்கம். க்ஷேமம். க்ஷேமாதி சயங்களுக்குப் பதில் எழுத வேணும். தபால் கார்டு விலை அதிகமாகி விட்டதே என்று தோன்றினால் தந்தி மூலம் தெரிவியுங்கள். மனத் தந்தி மூலம்தான்!

எட்டு வருஷத்துக்கு முன்னால் உங்கள் கல்கி பத்திரிகை பிரமாதமான தடபுடல்களுக்கு மத்தியில் உதயமாயிற்று. தடபுடல்களெல்லாம் எழும்பூர் எஸ். ஐ. ஆர். ரயில்வே ஸ்டேஷனில் வண்டிகள் வந்து புறப்பட்டதனால் ஏற்பட்டவை. ஸ்டேஷனும் கல்கி காரியாலயமும் சேர்ந்திருக்க முடியாது என்று விரைவிலேயே தெரிய வந்தது. எஸ். ஐ. ஆர். ஸ்டேஷன் அங்கிருந்து ரொம்ப மறுத்தபடியால் கல்கி காரியாலயம் மீப்பாக்கத்துக்கு வந்தது. அதற்குப் பிறகு மீப்பாக்கத்தின் பிரபலம் மிக அதிகமாகியிருப்பதை அனைவரும் அறிவார்கள். நிற்க......

— "ஒன்பதாம் ஆண்டு"
கல்கி, ஆகஸ்டு 7, 1949


"ஆனால் அது எங்களால் முடியாதே!"
"நீங்கள் பழங்காலப் பாத்தியதை கொண்டாடுவதை விட்டு விடுங்கள். நாங்களும் அதிலுள்ள குறைகளைக் கூறுவதை விட்டு விடுகிறோம்!"
மக்கள்
அஜாய் முகர்ஜி
ஹலோ.... பீகிங்கா? அடுத்து என்ன செய்ய வேண்டும்?
இடதுசாரி கம்யூனிஸ்ட்கள்
மேற்கு வங்கம்
மத்திய சர்க்கார்
தி.மு.
"அட, கொம்பைப் பிடி!"
மக்கள்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ✲ இதழ் 52

மூன்று முடிவுகள்

நாட்டைப் பாழாக்குவதற்குப் பேருபகாரம் செய்யும் மூன்று முடிவுகளுக்கு இந்திய சர்க்கார் வந்திருக்கிறது.

முதலாவதாக, அரசியல் சாஸனம் இந்தியப் பிரஜைக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகளை அடியோடு தகர்க்க அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. இந்த அடிப்படை உரிமைகளின் மீது கை வைக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் கிடையாது என்று சமீபத்தில் ஸுப்ரீம் கோர்ட்டின் பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்புக் கூறியது நினைவிருக்கும். நாட்டின் தலைமைப் பீடத்தின் கருத்தை மீறி, அடிப்படை உரிமைகள் பற்றிய சாஸன ஷரத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் உரிமை பெறும் வகையில் சாஸனத்தைத் 'திருத்துவது' என ஆட்சியாளர்கள் தீர்மானித்து விட்டார்கள். விரைவிலேயே இது குறித்துப் பார்லிமென்டில் சர்க்காரின் மசோதா வரவிருக்கிறது. ஜனநாயகத்தின் சவப் பெட்டி தயாராகிறது என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

இரண்டாவதாக, உயர் படிப்பும் தொழில் நுட்பப் படிப்பும் உள்படக் கல்வித் துறையின் சகல கட்டங்களிலும் அந்தந்தப் பிரதேச மொழியையே விரைவில் போதனை மொழியாக்குவதெனச் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. தேசத்தில் பெரும் குழப்பத்தை உண்டாக்கி, அறிவாளி சமூகத்தைச் சிதைப்பதற்கு இதைவிடச் சிறந்த திட்டம் ஏதும் இருக்க முடியாது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் எது போதனை மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றிப் பெருத்த சர்ச்சை நடைபெற்று வருகிறது. பள்ளிகளிலோ கல்லூரிகளிலோ போதிப்பதில் சிறிதும் அநுபவம் இராமல், சட்டம் இயற்றுவதற்கு மட்டும் ஆசைப்படுபவர்கள் இந்தச் சர்ச்சைகளில் விசேஷமாக இடம் பெற்றிருக்கிறார்கள்.

ஸயன்ஸ்களிலும் சரி, தொழில் நுட்பக் கல்வியிலும் சரி போதனை என்பது மொழி என்ற லட்சியத்துக்காக நடைபெறுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். மொழியைவிட **விஷயங்களைப்** புரிய வைப்பதையே லட்சியமாகக்கொண்டு அதில் கருத்தைச் செலுத்த வேண்டும். இந்த விஷயங்களை விளக்குவதற்கு எவ்வளவுக்கு மொழிநடை அவசியமோ அந்த அளவுக்கு அது உபயோகமாக வேண்டும். அது மாணவர்களுக்குப் புரிகிற மொழியாக இருக்க வேண்டும் என்பதுதான் அவசியமே ஒழிய, இந்த மொழியா அல்லது அந்த மொழியா அல்லது இரண்டும் கலந்த கலப்பு மொழியா என்பது முக்கியமல்ல. ஸயன்ஸ் போதிக்கும் விஷயங்களைக் குறித்த சொற்றொடர்கள் யாவும் உலக முழுவதற்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். மாணவர்கள் சந்தேக விளக்கத்துக்காகவும், மேல் ஆராய்ச்சிக்காகவும் பார்க்கக் கூடிய ஆதார நூல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. அதில் உள்ள சூத்திரங்களும் சொற்றொடர்களுமே எம்மொழியில் போதனை நடைபெற்றாலும் அதில் உபயோகமாக வேண்டும். இவற்றுக்குப் பதிலாகச் சிரமப்பட்டுச் சிருஷ்டி செய்யும் புதிய சொற்கள் தவறாகப் போகலாம்; அல்லது பயனற்றவையாகலாம். மேலும், வளர்ந்து வரும் விஞ்ஞானத்தில் உலகத் தொடர்பு கொள்வதற்கும் ஆங்கிலத்தில் படிப்பதொன்றுதான் உதவும்.

ஸயன்ஸ் மட்டுமின்றி, மற்றக் கலைகளிலும் கூட கலப்பு மொழியை உபயோகிப்பதே வரவேற்கத் தக்கது. அவசியமான போது பிரதேச மொழியில் விளக்கங்கள் தர வேண்டும். ஒரே மொழியில்தான் போதிக்க வேண்டும் என்பதை விடாப்பிடியாகப் பிடிக்க வேண்டியதில்லை. போதனை மொழி என்பது அறிவுத் தொடர்புக்கு உதவுகிற ஒன்றே ஒழிய, வீம்புக் கொள்கையோ ஸர்க்கஸ் வித்தையோ அல்ல.

போதனை மொழி சம்பந்தமாக எதனிடமும் இணடாமை மனப்பான்மை

உதவாது. நமக்கு உதவ வேண்டிய உபகரணமாகத்தான் போதனை மொழி இருக்கவேண்டுமே ஒழிய நம்மைப் பயமுறுத்திக் கட்டிப் போடுவதாக இருக்கக் கூடாது.

மூன்றாவதாக, மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்களைக் கட்டாயமாக மலடாக்க உத்தேசித்துவிட்டது பாரத சர்க்கார். மக்களின் பிரஜா விருத்திக்கு உச்சவரம்பு விதித்து அவர்களின் சொந்த விவகாரத்தின் மீது சர்க்கார் நேரடியாகத் தாக்குதல் செய்வதென்பது இதுவரை கேட்டிராத விஷயம். ஹிட்லரின் ஆட்சியில் இப்படி நடந்ததாகச் சொல்வதுண்டு. ஆயினும் அது எந்த அளவுக்கு உண்மையோ தெரியாது. பலவந்தம் செய்வதில் ருஷ்யாவையும் மீறுகிற ஓர் அற்புதத்தை இந்திய சர்க்கார் சாதித்துவிட்டது!

மலடாக்கும ஒவ்வொரு ஆபரேஷனுக்கும் எவ்வளவு செலவாகும் என்பதையும், எத்தனை லட்சக் கணக்கானவர்களுக்கு ஆபரேஷன் செய்யவேண்டியிருக்கும் என்பதையும் நினைத்து, மொத்தச் செலவைச் சிந்தித்தோமாயின் தலையைச் சுற்றும். குறைந்தபட்சம் ஆண்டொன்றுக்கு நூறு கோடி ரூபாயாவது செலவாகும். அதோடு இத்திட்டம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தோடு முடிகிற விஷயமல்ல என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையும் இந்த வரம்பை ஏற்றாக வேண்டுமாதலால் மலடாக்கும் திட்டமும் சாசுவதமாக நடந்தாக வேண்டும்.

இந்தச் செலவு போதாதென்று அறுவைச் சிகிச்சை பெறுபவர்களுக்கெல்லாம் ட்ரான்ஸிஸ்டர் பரிசு தரவும் மந்திரி ஸ்ரீ சந்திரசேகரனார் முன்வந்திருக்கிறார். கிராமம் கிராமமாக ஹெலிகாப்டரில் சென்று குடும்பக் கட்டுப்பாட்டை விஸ்தரிக்க வேண்டும் என்று முன்னர் அவர் கூறிய அற்புத யோசனையுடன் இதையும் சேர்க்க வேண்டும். மந்திரி அவர்களின் அறிவு எந்த லட்சணத்தில் வேலை செய்கிறது என்பதை இவையெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. அவரது திட்டம் அபத்தமாகத் தோன்றலாம். என்றாலும் நிர்ப்பந்தம் மூலம் 'மகத்தான முடிவு'கள் எடுப்பதற்குச் சர்க்கார் முன்வரும்போது அபத்தங்கள் குறுக்கே நிற்பதில்லை. 'சந்திரசேகரன் அவர்கள் தமது மாயப் பிரமையை மிகைப்படுத்திக் கொண்டே போவதில் மகிழ்ச்சி அடைகிறேன்; ஏனெனில் பிரமை நீங்குவதற்கு வழி அவற்றை மிகைப்படுத்துவதே' என்று ராஜாஜி முன்பே கூறினார். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தலைக்கனம் ஏற ஏற, அது தனது சுமையே தாங்காமல் முறிந்து விழும் என்று நம்பலாம்.

நாலாவது முடிவு

பாரத சர்க்கார் செய்துள்ள கண்டனத்துக்குரிய மூன்று முடிவுகளை முதலில் சொன்னோம். ஓரளவுக்குப் பாராட்டுக்குரிய நாலாவது முடிவு ஒன்றையும் அது செய்துள்ளது. திட்டக் கமிஷனின் அதிகாரத்தைக் குறைத்து அதை வெறும் ஆலோசனைக் குழுவாகவே மாற்ற அரசாங்கம் முன் வந்திருக்கிறது. சர்க்காருக்கும் மேம்பட்ட மகா சர்க்காராக இருந்து, பார்லிமென்ட் முதலிய மக்கள் மன்றம் எதற்கும் அடங்காமல், நாட்டுப் பொருளாதாரத்தில் பெரும் மாறுதல்களைச் செய்து வந்த திட்டக் கமிஷனின் பல் பிடுங்கப்பட்டது பற்றி மகிழாதார் இருக்க முடியாது. இன்றைய திட்ட முறையே மாற வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் கோரிக்கை ஏற்கப்படாவிடினும், அக்கட்சி உடனடியாக விரும்பியது போல் கமிஷனின் அதிகாரம் குறைக்கப்பட்டதே வரவேற்புக்குரியதுதான்.

திட்டத்துக்கு என்று தனியாக மந்திரி இராமல், பல இலாகா மந்திரிகளும் தத்தம் துறை சம்பந்தப்பட்ட திட்ட இனங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது புது ஏற்பாடு. நல்ல ஏற்பாடு.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே!

சென்னை சட்டசபையில் தமிழ் நாடு என்ற பெயர் ஏகோபித்த குரலில் வரவேற்கப்பட்டு, தமது ராஜ்யத்துக்குப் புதிய நாமகரணம் ஏற்பட வழி பிறந்து விட்டது.

புதிய நாமகரணமாவது? தமிழ்நாடு அதன் பூர்விகப் பெயரான தமிழ்நாடு என்பதை அதிகார பூர்வமாகப் பெறப் போகிறது. அவ்வளவுதான்!

புதுப் பெயர் சூட்டப்பட்டாலும், ''மெட்ராஸ்'' என்ற பழைய பெயர் உலக அரங்கில் எத்தகைய மகத்தான புகழ் எடுத்திருக்கிறது என்பதை நன்றியுடன் நினைவு கூர்வது இந்தச் சமயத்தில் அவசியமாகும். 'மெட்ராஸ்' பெற்றுள்ள பெயருக்குக் காரணம் நம் முன்னோர்களின் அறிவுத்திறனும் செயலாற்றலுமே. சர்வ தேசங்களும் அறிந்த இந்தப் பெயரை இழக்கலாமா என்று சிலர் வருந்துகிறார்கள். வருந்த வேண்டியதில்லை. நம்முடைய அறிவுத்திறனாலும் செயலாற்றலாலும், 'தமிழ்நாடு' என்ற பெயரும் நானிலம் முழுதிலும் பெயரெடுக்க முயல்வோம்.

செந்தமிழ்நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே-எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

ஜனநாயகமல்ல!

மத்தியப் பிரதேசத்தில் முப்பதுக்கு மேற்பட்ட காங்கிரஸ் அங்கத்தினர்கள் எதிர்க் கட்சி அணியில் சேர்ந்து விட்டதால் காங்கிரஸின் பெரும்பான்மை பலம் குறைந்து, அது சிறுபான்மையாகி விட்டது. எதிர்க் கட்சியினர் தங்களுக்குப் பெரும்பான்மை கிட்டி விட்டது என்பதைச் சட்டசபை மானியக் கோரிக்கையின் போது வெளிப் படுத்த முடிவு செய்திருந்தனர். ஆனால் இதற்கு இடம் தராமல் சட்டசபையின் கூட்டத் தொடரே திடுமெனக் கலைக்கப்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கெல்லாம் அதிர்ச்சியூட்டியிருக்கிறது.

காங்கிரஸிலிருந்து விலகியவர்கள் கபேச்சையாகவே அவ்விதம் செய்துள்ளனரா என்பதைக் கவர்னர் உறுதிப்படுத்திக் கொண்டு, பழைய மந்திரி சபையைக் கலைத்து விட்டு, எதிர்க்கட்சி அணியைப் புது மந்திரி சபை அமைக்கச் சொல்வார் என்றே எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் காங்கிரஸின் பெரும்பான்மை பலம் போன பின்பும் காங்கிரஸ் மந்திரி சபையின் முதல்வரான ஸ்ரீ மிச்ராவின் ஆலோசனைப்படியே கவர்னர் நடக்கிறாரோ என்ற ஐயம் இப்போது எழுந்துள்ளது. சட்டசபைக் கூட்டத்தை இப்போதைக்கு நிறுத்தி வைத்து, கட்சி மாறியவர்களை மீண்டும் காங்கிரஸுக்குள் இழுப்பதற்குப் போதிய அவகாசம் பெற வேண்டும் என்பதே ஸ்ரீ மிச்ராவின் திட்டம் என்றும் பரவலாகக் கூறப்படுகிறது. அது எப்படியாயினும், 'காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்ந்தால் மீண்டும் பொதுத் தேர்தல்கள் நடத்த வேண்டுமே ஒழிய எதிர்க்கட்சியிடம் உடனடியாக ஆட்சிப் பொறுப்பைத் தந்துவிடக் கூடாது' என்று மிச்ரா அவர்கள் கூறியிருப்பதிலிருந்து காங்கிரஸ் தனது ஆதிக்கத்தை இழக்கத் தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்கு ராஜ்ய கவர்னரும் உடன்பட்டிருப்பதாகத் தெரிய வருமேயாகில் அது மெத்த வருத்தத்துக்குரியது.



காமகோடியின் கருணை மொழி

அன்பை மூன்று வகையாகச் சொல்லலாம். மகான்கள், யோக்கியர்கள், பரோபகாரிகள் முதலியவர்களிடத்தில் ஒருவிதமான அன்பு உண்டாகிறது. இது அவர்கள் குணத்துக்காக ஏற்படுவது. பழக்கத்தால் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் அன்பு உண்டாகிறது. காரியத்துக்காகவும் அன்பு உண்டாவதுண்டு. நமக்கு ஒருவர் உதவுவார் என்றால் அந்தக் காரியத்துக்காக அவரிடம் அன்பு ஏற்படுகிறது. இம்மூவகை அன்பும் நிரந்தரமல்ல. குணத்துக்காக ஒரு மகானிடம் நாம் வைக்கின்ற அன்பு, அவரிடம் அந்தக் குணம் இல்லை என்று நமக்குத் தோன்றியவுடன் போய்விடுகிறது. பழகியவர்கள் நம்மை விட்டோ, உலகை விட்டோ போய்விட்டால் அவர்களிடம் வைத்த அன்பும் காலக்கிரமத்தில் போய் விடுகிறது. காரியத்துக்காக வைக்கிற அன்பு காரியம் முடிந்தவுடனேயே போய் விடும்.

இம்மூன்று அன்பும் பரமசிவ அன்பின் மாறுபாடுகள். அந்த அன்புதான் காரணமில்லாதது. குணம் — பழக்கம்— காரியம் என்ற காரணங்களில்லாத அன்பு அதுவே. இப்படிக் காரணமில்லாமல் யாராவது அன்பாக இருக்கிறார்களா என்றால் ஸ்வாமிதான் அப்படி இருக்கிறார். நம்மிடம் ஒரு காரணமும் இல்லாமல் அவர் அன்பு வைத்திருக்கிறார். அவர் காரணம் பாராட்டுவதாக இருந்தால் நமக்கு ஒரு வேளை சோறுகூடப் போட முடியாது!

இந்த அன்பு நமக்கும் வரவேண்டும். பாபி என்று ஒருவனை வெறுக்கக் கூடாது. மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷமில்லை. மகாபாபியிடமும் அந்த அன்பு இருக்க வேண்டும். அவனிடம்தான் நிறைய அன்பு வேண்டும். ஈசுவர கிருபையால் அநுக்கிரகம் பண்ணும் சக்தி படைத்தவர்கள் பாபியின் பாபத்தை நிவர்த்தி செய்யத்தான் அந்தச் சக்தியைப் பயன்படுத்த வேண்டும்.

தப்பு செய்கிறவர்களைத் தள்ளக் கூடாது. நாமே தப்புச் செய்தால் நம்மை உதறித் தள்ளுகிறோமா? நம்மை நல்லவராக்கிக் கொள்ள ஆயுள் முழுவதும் முயலுவது போலவே, மற்றவர்களையும் நல்லவராக்க முயல வேண்டும்.

காரணமில்லாத அன்பு எங்கும் பரவ வேண்டுமானால் குரு பக்தியில் ஆரம்பிக்க வேண்டும். பிறகு லோகம் முழுவதையும் குருவாக நினைத்து சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லா அன்பைச் செலுத்த வேண்டும். அப்பொழுது உண்டாகும் ஆனந்தம்தான் பரிபூரண நிலை. அதுவே பிரம்மானந்த நிலை.

ராஜாஜியின் கருத்துக்கள்



'கென்யா மந்திரி டாம் போயா அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடி ஆள்' என்று நைரோபியிலுள்ள சீன தூதரகம் அறிக்கை விட்டதன் பேரில், கென்யா அரசாங்கம் அந்தச் சீனத் தூதரை நாடுவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் சீனத்திலுள்ள தனது தூதரையும் தாய்நாட்டுக்கு அழைத்துக் கொண்டு விட்டது. பீகிங்கிலுள்ள நமது சிப்பந்திகளுக்குச் சீனம் இழைத்த கொடுமைகளைப் பார்த்த பின்பும் சாக்லா அவர்கள் கையாளும் 'சாத்வீக'த்துக்குக் கென்யாவின் நடவடிக்கை ஓர் அழுத்தமான மாறுபாடாகும்.

ஃ ஃ ஃ

பதினொன்று, அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகளில் யூனியன் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை நடத்துகிற யோசனை விபரீதமானது. இது அனைவரையும் சபலத்துக்கு ஆளாக்கும் ஒரு மோசடி. இந்த யோசனை அமுலுக்கு வந்தால், 'யூனியன் ஸர்வீஸ்' என்று அகில இந்தியப் பெயர் பெற்றிருந்தாலும், அது உண்மையில் பல ராஜ்ய ஸர்வீஸ்களாகவே பிளவுபடும். தகுதி என்ற அடிப்படை மறைந்து போகும். அரசியல் தலையீடுகளிலிருந்தும், சலுகைகளிலிருந்தும் நேர்மையான சிப்பந்திகள் பெறுகிற காப்பு நலிவடையும். பரீட்சைகளிலும், விடைத் தாள்களை மதிப்பீடு செய்வதிலும் ஊழல் பெருகும். பரீட்சையின் அங்கமான மாணவர்கள் பேட்டி பற்றிச் சொல்லவே வேண்டாம். இஷ்டப்படியும் சட்டவிரோதமாகவும் தேர்வு செய்வதற்கு இந்தப் பேட்டிகள் சர்வ சுதந்திரம் தரும்.

ஃஃஃ

ஆங்கிலத்தில் ஒரு பதத்துக்குப் பல பொருள்கள் இருக்கும் போது, அதே போல் அந்தப் பல பொருள்களையும் குறிப்பிடக் கூடிய ஒரே பதம் இந்திய மொழிகளில் இல்லாமற் போவதுண்டு. உதாரணமாக 'கவர்ன்மெண்ட்' என்ற ஆங்கிலப் பதம் நிருவாகம் என்ற செயலையும் குறிக்கும், 'நிருவாக இயந்திரம்' என்ற கருவியையும் குறிக்கும். 'நிருவாகம்' என்ற சொல்லுக்குத் தமிழ் வார்த்தை 'அரசு'. நிருவாக இயந்திரத்தை—தஸ்தாவேஜிகள், செப்புநாடா இவற்றை—'அரசு' என்று குறிப்பிடுவது முழுதும் சரியல்ல. நிருவாக இயந்திரத்தை 'அரசாங்கம்' அல்லது 'சர்க்கார்' என்றே சொல்ல வேண்டும். 'கவர்ன்மெண்ட் பஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லி வந்ததை 'சர்க்கார் வண்டி' என்ற எளிய வார்த்தைகளால் குறிப்பிடலாம். சென்னையில் போகிற பஸ்களில் 'தமிழக' சர்க்கார் என்று ராஜ்யத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. சென்னையில் பல மத்திய சர்க்கார் ஆபீஸ்கள் இருப்பதால், பெரிய ஆபீஸ்களில் மட்டும் தமிழக சர்க்காரைச் சேர்ந்தது என்று குறிப்பிட வேண்டியது அவசியம்.

ஃஃஃ

மொழியிடம் உள்ள அன்பிலும் காரியத்தில் அவசரம் ஏற்பட்டு விடுகிறது. புது வார்த்தைகள் தேர்ந்தெடுப்பதில் இந்த அவசரத்தைக் காண்கிறோம். மொழி பெயர்க்க வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளதே ஒழிய, அதற்கேற்ப மொழிபெயர்ப்பு முற்றிலும் சரியாக இருக்க வேண்டும் என்பதில் ஆர்வம் இல்லை. மிகவும் திட்டவட்டமாக ஒரு விஷயத்தைச் சொல்வது ஆங்கிலச் சொற்றொடர்களின் தனிச் சிறப்பு. இச்சிறப்பை மொழி பெயர்ப்பில் நாம் புறக்கணிக்கக் கூடாது. தெளிவாகவும், சுருக்கமாகவும் புதுச் சொற்றொடர்கள் இருக்க வேண்டும்.

போலீஸ் ஸ்டேஷனைக் 'காவல் நிலையம்' என்று சொல்கிறார்கள். காவல் வேறு. காப்பு வேறு. குற்றவாளி என்று சந்தேகிக்கப் படுபவரைத்தான் காவலில் வைப்பது வழக்கம். சட்டத்தைக் காக்கும் போலீஸ் ஸ்டேஷன் காப்பு நிலையமே ஒழிய, காவல் நிலையம் அல்ல. காப்பு நிலையம் அல்லது காவல் நிலையம் என்று சொல்லாமல் 'போலீஸ் ஸ்டேஷன்' என்றே கூறி வந்தால் போதும்; அதுவே அனைவருக்கும் புரியும்.

அந்நியர் சிலைகளை அகற்றி விடுவது போல் எல்லாவற்றையும் அகற்றிவிட முடியாது. சரித்திரத்தை நிச்சயம் அகற்ற முடியாது.

ஃஃஃ

'உண்மை ஜனநாயகத்தை உருவாக்குவது யாதெனில், ஆட்சியாளர்களை நம்பாமலிருப்பதற்கு மக்கள் பெற்றுள்ள உரிமையே. இவ்வாறு நம்பாமல் இருப்பதன் தேவையை ஆட்சியாளர்கள் அங்கீகரிக்க வேண்டும்' என்று காரி ஹெர்மன் கீப்ளாக் கூறுகிறார். சமீபத்தில் நமது பார்லிமெண்டில் நடைபெற்றுள்ள நடப்புக்கள் இந்த அடிப்படை உண்மையை வலியுறுத்துகின்றன. பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் கண்டிப்பதற்கு அரசாங்கம் இடம் தரவேண்டும். அரசாங்கத்திடம் நம்பிக்கை போதாமல் கண்டனங்கள்

எழுப்பப்படும் போது, 'எங்கள் நடத்தை பற்றி அவதூறு சுமத்திக் கொலை செய்கிறார்கள்' என்று மந்திரிமார்கள் கூக்குரலிடக் கூடாது. ஜனநாயகம் என்பது யதேச்சாதிகாரமாகாமல் இருக்க வேண்டுமாயின் இந்த அவநம்பிக்கை அதற்கு ஓர் அடிப்படையாகும்.

இது ஓர் எளிய உண்மை. ஆனால் எளிய உண்மைகளை ஏற்கச் செய்வதற்குத்தான் பெரிய விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

ஃஃஃ

பாகிஸ்தான், இந்தியா இருநாடுகளுக்குமே வல்லரசுகள் ஆயுதங்கள் உதவுவதைப்பார்த்து வருகிறோம். இப்போது அமெரிக்கா இந்தக் கொள்கையை மேற்காசியாவிலும் விஸ்தரிக்கப் போவதாகத் தெரிகிறது. இஸ்ரேலைப் போலவே அரபுநாடுகளுக்கும் அது உதவுமெனத் தோன்றுகிறது. அரபு நாடுகளுடன் நட்புக் கொண்ட ருஷியா மேற்காசியாவில் அதிக செல்வாக்குப் பெற்றுவிடக் கூடாதென்றே அமெரிக்கா இவ்வாறு செய்யலாமெனக் காரணம் காட்டப்படுகிறது. சுய நன்மையைக் காரணம் காட்டினாலும் இந்த நியாயம் எடுபடவில்லை. இரண்டு பகை நாடுகள் போரிடுவதற்காக இரண்டுக்கும் ஆயுதம் அளித்துவிட்டு அதற்காக நன்றியோ நல்லெண்ணமோ எதிர்பார்ப்பது வியர்த்தம். இது இஸ்ரேலுக்குப் பாதகமாகவே முடியும். விரைவிலேயே இஸ்ரேலும் அரபுநாடுகளும் சமாதான சக வாழ்வு பெற்று ஒத்துழைக்காவிடில், இம் முடிவு அமெரிக்க நலனுக்கே பாதகம கிவிடும்.

ஃஃஃ

உழவுத் தொழிலாளர்கள் யாவரையும் நிலச் சொந்தக்காரர்களாக்கி விட்டால் எல்லாம் சரியாகப் போகும் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் இது நடைமுறையில் பலிக்கவில்லை. தொழிலாளரைச் சொந்தக்காரராக்குவதாலோ, சொந்தக்காரரைத் தொழிலாளராக்குவதாலோ எதுவும் சாதிக்க முடியாது. சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள் இருவரையும் இணங்கி ஒத்துழைக்கச் செய்தால்தான் நல்ல பலன் பெறலாம். நாம் பேசுகிற மொழியில் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் இணங்கி யிருப்பது போல இவ்விரு சாராரும் சேர்ந்து செயலாற்ற வேண்டும்.

காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்ட்களும் இவ்விரு தரப்பினரையும் பேதப்படுத்தி வருகிறார்கள். இதன் விளைவாக உணவுக்கு இறக்குமதியையே நம்பி வாழ்கிறோம். துவேஷத்தை விதைத்து அதிலிருந்து வோட்டுக்களை அறுவடை செய்ய வேண்டும் என்பதே சர்க்கார் கொள்கை. இந்தக் 'கலை'யைக் கைவிட்டு ஒத்துழைப்புக்கான கொள்கையை மேற்கொண்டால் தவறுகள் யாவும் சீர்திருந்தும். உழுவதும் விதைப்பதும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் முதலீடும் மேற்பார்வையும். இவை யாவும் பரஸ்பர விசுவாசத்தில் நெருக்கமடைய வேண்டும்.

ஃஃஃ

சுபீட்சத்தைப் பற்றியே அரசியல்வாதிகள் ஓயாமல் பேசுகிறார்கள். ஆனால் யாராவது சுபீட்சமாக இருப்பதைக் கண்டால் ஆத்திரம் அடைகிறார்கள். சுபீட்சமாக இருப்பவரைக் காணவே அவர்களுக்குச் சகிப்பதில்லை. சுபீட்சத்திலிருந்துதான் சுபீட்சம் பிறக்கும், சட்டங்களிலிருந்தோ அரசியலிலிருந்தோ அல்ல என்பதை மறந்து விட்டார்கள்.

ஃஃஃ

நமது அந்நியக் கொள்கை காரணமாகப் பாதுகாப்புச் செலவு ஆயிரம் கோடி ரூபாயை நெருங்கிவிட்டது. வியட்நாமிலோ, ஜோர்டானிலோ, சிரியாவிலோ போர் வலுப்பதைப் போலவே, அமைதியிலும் சுபீட்சத்திலும் அக்கறையுள்ள நமது நாட்டின் பாதுகாப்புச் செலவு உயர்வதும் பயங்கரமாகும். பாகிஸ்தானுடன் நாம் ஆயுதப் போட்டியிடுவதை அடியோடு நிறுத்த இயலாவிடினும், இதனைக் குறைப்பதற்காவது முயலுகிற விவேகமான அந்நியக் கொள்கையே நம்முடைய சுபீட்சத்துக்கு வழி. இவ்விஷயத்தில் சர்க்கார், மக்கள் இருவருமே நல்லுணர்ச்சி பெற்று மனப்பான்மையை அடித்தளத்திலிருந்து திருத்திக் கொள்ள வேண்டும்.

ஃஃஃ

ஒவ்வொரு நாடும் சுதேச உணர்வைப் பெரிதாகக் கருதுவது 'உலகம் ஒன்றே' என்ற கருத்துக்கு அநுசரணையாக இல்லாவிடினும் நியாயமானதே என்று கூறலாம். ஆயினும், 'உலகம் நாசமுறக் கூடாது, தேசங்கள் யாவும் உறுதியான அடிப்படையில் சமாதானமாக இருக்க வேண்டும்' என்பதை மறப்பதற்கில்லை. இதற்கு இரண்டு மகத்தான இலட்சியங்கள் உண்டு.

(1) அணு ஆயுதங்களையும், ரசாயனப் பொருட்களையும், விஷ பாக்டீரியாக்களையும் பரப்பி ஜீவராசிகளைக் கொல்வதை அடியோடு நீக்கியாக வேண்டும். (2) சுங்க வரிகளையும் சர்வதேச வர்த்தகத் தடைகளையும் ரத்து செய்து, உலகை ஒரு குடும்பமாக்குவதில் முன்னேற வேண்டும்.

ஃஃஃ

அரசியல்வாதிகள் 'புரோகிதர்'களாகிக் கலியாணம் செய்து வைப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் இது நடைமுறைக்கு வந்து விட்டது.

கலியாணச் சடங்குகளைச் சுருக்கமாகவும் எளிதாகவும் செய்வது நல்லது. இப்போது பலவிதமான திருமணங்கள் பற்றிப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. முறைப்படி திருமணங்களை ரிஜிஸ்தர் செய்யாவிடில், இதனால் பல பிரச்னைகள் எழும்பக்கூடும். சமயச் சடங்குகள் கூடாது எனில், அவற்றுக்குப் பதிலாக ரிஜிஸ்தர் செய்வது இடம் பெற வேண்டும்.

அவசரம் வேண்டாம்!

பஸ்களைச் சர்க்கார் உடைமையாக்க வேண்டும் என்பது இப்போதைய தமிழக அரசாங்கத்தின் பொதுக் கொள்கை. இதை முற்றிலும் புதிய கொள்கை என்று கருத வேண்டியதில்லை. முந்திய அரசாங்கம் நிர்வாகம் நடத்தியபோதே பஸ் போக்குவரத்துத் தொழிலில் சர்க்காரும் தலையிட்டு, சர்க்கார் பஸ்களும், தனியார் பஸ்களும் பல வழிகளில் சேர்ந்தே ஓடிக் கொண்டுதான் இருந்தன. ஆனால் இப்போதைய அரசாங்கம் தனியார் பஸ் போக்குவரத்தைச் சர்க்காரின் ஏகபோகமாக்க முனைந்திருக்கிறது.

அரசாங்கத்தின் புதிய திட்டத்தைக் குறித்த எல்லா அம்சங்களையும் சென்னையில் சென்ற 16ம் தேதி கூடிய பஸ் உரிமையாளர்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் விரிவாக, அமைதியாக, தெளிவாக விவாதித்தார்கள்.

மகாநாட்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பஸ் உரிமையாளர்கள் ஒரு குழுவினராக வந்திருந்தனர். அவர்கள் சார்பில் ஒருவர் அல்லது இருவர் பேசினர். தலைமை வகித்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தவர் திரு கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார். மகாநாட்டின் சிறப்பு என்று மூன்று அம்சங்களைக் குறிப்பிட வேண்டும். யாருடைய பேச்சிலும் துவேஷமோ, கோபமோ, பரபரப்போ எந்த நிலையிலும் காணப்படவில்லை. சர்க்கார் மீது யாரும் கண்டனம் கூறவில்லை. கொள்கைகளைப் பற்றிக் குறைகூறவும் இல்லை. கஷ்டங்களுக்கு உட்பட்டவர்கள் இவ்வளவு அமைதி காட்டியது ஆச்சரியமாகவே இருந்தது. தவிரவும், சர்க்காருடன் ஒத்துழைப்பதே தங்களின் இலட்சியம் என்று வார்த்தைக்கு வார்த்தை மாநாட்டினர் வலியுறுத்தியது அவர்களது பண்பையும், பணிவையும் நன்றாக எடுத்துக் காட்டின.


ஆயிரத்துக்கு மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள் தமிழகத்தில் பஸ் ஓட்டிக் கொண்டிருக்கின்றனர். 4600 பஸ்கள் தனியாருடையவை. 2400 பஸ்கள் சர்க்காருடையவை. (பதினொரு வருடங்களுக்கு முன் 2500 பஸ்களே நம் மாநிலத்தில் இருந்தன.) ஒவ்வொரு பஸ்ஸுக்கும் சராசரி அறுபத்தைந்து இருக்கைகள். 50,000 சதுர மைலில் 330 லட்சம் மக்களின் தேவையை 7,000 பஸ்கள் நிறைவேற்றுகின்றன. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இது பெருமைக்குகந்தது.

தமிழகத்தைவிட விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் பெரியது ஆந்திரப் பிரதேசம். அங்கே சர்க்கார் பஸ்கள் இரண்டாயிரமும், தனியார் பஸ்கள் இரண்டாயிரத்து நூறும் தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பஸ்ஸின் சராசரி இருக்கை ஐம்பதுதான். அதாவது 380 லட்சம் மக்களுக்கு 4100 பஸ்கள்தாம் சேவை புரிந்து வருகின்றன.

மிகவும் தொழில் முன்னேற்றமடைந்ததும் நீண்ட நாட்களாகச் சர்க்கார் துறை ஈடுபட்டு வருவதுமான மஹாராஷ்டிரத்தில், 96,000 சதுர மைல் விஸ்தீரணத்துக்கும் 460 லட்சம் ஜனத்தொகைக்கும் சேவை புரிவது 4500 பஸ்கள்தான். பஸ்ஸுக்குச் சராசரி நாற்பத்தைந்து இருக்கைகள்தாம்.

உத்தரப் பிரதேசத்திலோ 900 லட்சம் மக்கள் கொண்ட மாநிலத்தில் 7000 பஸ்கள் தாம் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இவையெல்லாவற்றையும்விட அளவில் சிறியது தமிழகம். எனினும், இங்கே 7000 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. எல்லாம் உயர்ந்த ரக பஸ்கள். 'சீட்டு'களைத் தட்டிப் பார்த்துப் பிரயாணிகள் உட்கார்ந்து சுகமாகப் பிரயாணம் செய்ய வசதியாக உள்ளன. இங்கே ஸ்தாக்களும் சீரான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக



மாநில அரசாங்கத்துடன் பஸ் சொந்தக்காரர்களும் சந்தோஷப்பட உரிமையுள்ளவர்கள். ஆண்டுக்கு பஸ் உரிமையாளர்கள் பதினெட்டு கோடி ரூபாய் வரியாகச் செலுத்துகின்றனர். இதில் ரஸ்தா விஸ்தரிப்புக்காகவும் பராமரிப்புக்காகவும் செலவழிக்கப்படுவது மிகவும் குறைவுதான். மிச்சம் எல்லாம் பொதுநல முன்னேற்றத்துக்காகவே செலவழிக்கப்படுகிறது. இதைப் பற்றிப் பஸ் உரிமையாளர்கள் பெருமையே கொள்ளுகின்றனர். தாங்கள் பொதுமக்களின் விரோதிகள் அல்லர்; அவர்களிடமிருந்து சுரண்டுபவர்கள் அல்லர் என்பதை அவர்கள் புள்ளி விவரங்களுடன் எடுத்துச் சொல்லியதைப் பாராட்ட வேண்டும்.

ஒருவர் சொன்னார்: ''சர்க்காருக்கு ஒருவித செலவும் இல்லாமலே வரி மூலம் பெரும் வருமானம் அளிப்பது பஸ் போக்குவரத்து. முன் பணமாகவே வரிகள் செலுத்தப்படுவது இத்துறை ஒன்றில்தான். 'கியூ' வரிசையில் நின்று தேதி தவறாமல், தொழிலில் லாபம் கிடைத்தாலும், நஷ்டம் கிடைத்தாலும் வரிப் பணத்தைக் காலண்டர் பார்த்துக் கட்டுவதை வேறு எங்கே காண முடியும்? அப்படியிருந்தும் எங்கள் மீது என்ன குறை கண்டார்கள் ?''

மற்றொருவர் எங்கேயோ யாருக்கோ அமித லாபம் கிடைத்து விட்டதாக எழுந்த வதந்தியைப் பற்றிக் குறிப்பிட்டு, ''ஆயிரத்தில் ஒருவருக்கு, ஏதோ ஒரு 'ரூட்'டில் ஏதோ ஒரு சமயத்தில் (திருவிழா போன்ற காலங்களில்) அபரிமிதமாக வருமானம் கிடைத்திருக்கலாம். ஆனால் இதுதான் எல்லாருக்கும் உள்ள நிலை என்று கொள்ளக் கூடாது. அவ்விதம் கருதுவது தவறே ஆகும்'' என்று கணக்குப் போட்டுச் சொன்னார்.

மேலும் ஒரு பிரதிநிதி, ''கால அட்டவணை, 'ஓவர்லோட்' என்ற கட்டுப்பாடுகள் எல்லாம் தனியார் பஸ்களுக்கு மட்டும்தானா? தாற்காலிக பர்மிட் பெற்ற சர்க்கார் பஸ்களுக்குக் கிடையாதா?'' என்று வருத்தத்துடனே கேட்டார்.

மற்றொரு பிரதிநிதி பஸ் உரிமையாளர்களின் நிதிவசதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''ஒரு பஸ் வைத்திருப்பவர் முதல் நூறு பஸ்கள் வைத்திருப்பவர்கள் வரையிலும் எல்லாரும் கடன் வாங்கித்தான் தொழில் நடத்துகிறார்கள். சாதாரணமாகப் பதினைந்து அல்லது பதினெட்டு சதவீத வட்டிக்குத்தான் பணம் எழுப்ப முடிகிறது. ஆகையால், சர்க்கார் கடன் பத்திர வட்டி விகிதங்களைக் கொண்டு இந்தத் தொழில் நிலைமையையும் லாப நஷ்டத்தையும் மதிக்கக் கூடாது'' என்று வெளிப்படையாகவே எடுத்துச் சொன்னார்.

மேலும் ஒருவர், ''பர்மிட்டைப் புதுப்பிக்காமலிருப்பதன் மூலம், முதலீடு செய்து கடன் வாங்கி ஓட்டிக் கொண்டிருக்கும் பஸ்களை முடங்கிக் கிடக்க விட்டால் நாங்கள் கடன்களை எப்படி அடைப்பது? சர்க்கார் உடைமையாகத்தான் ஆக்குவது எனில், அப்போதைக்குக் கணக்கில் காட்டிய மதிப்புக்கு ரொக்கமாகவோ, கடன் பத்திரங்களாகவோ ஈடு கொடுத்து, எங்கள் பஸ்களையும் சர்க்காரே எடுத்துக் கொள்ளட்டும். அதுதான் முறை'' என்றார்.

மற்றொருவர், ''எங்களுக்குப் பஸ் தொழில் நடத்த உரிமை இல்லையா? அரசாங்கம் விதிக்கும் சட்டதிட்டங்களுக்குட்பட்டுத் தொழிலை நடத்தும் உரிமை எங்களுக்குப் பிரஜா உரிமைச்சட்டப்படி இல்லையா? எங்களுக்குப் பிழைப்பு வேண்டாமா? பொதுமக்களில் நாங்களும் சேர்ந்தவர்கள் இல்லையா?'' என்று உரிமைப் பிரச்னையைக் கூடப் பிரஸ்தாபம் செய்தார்.

மேலும் ஒருவர், ''பஸ் போக்குவரத்தைச் சர்க்கார் தேசிய உடைமையாக்குவதைவிட, மிக மிக முக்கியமான, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன'' என்றார்.

பிரச்னைகளைப் பல கோணங்களிலிருந்தும் விளக்கிய பின்னர் மூன்று தீர்மானங்களை மகாநாட்டினர் ஏகமனதாக நிறைவேற்றினர். முதலாவது: பஸ் போக்குவரத்தை அரசாங்க உடைமையாக்கும் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்குமுன் ஒரு விசேஷக் கமிட்டியை நியமித்து இந்தப் பிரச்னையை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து அறிக்கை வெளியிட வேண்டும். இரண்டாவது: இதன் பேரில் பொதுமக்கள் அபிப்பிராயம் சொல்ல அவகாசம் அளிக்கப்பட வேண்டும். மூன்றாவது : தாற்காலிக பெர்மிட்டுகளினால் புதிதாக விடப்பட்ட பஸ்களையும், விசேஷ காலங்களுக்கான பஸ்களையும் நீடிக்க விடாமல், கொள்கை உருவாகும் வரையில் இப்போதுள்ள நிலைமையை நீடிக்கச் செய்வது.

கமிட்டி போட்டுப் பிரச்னையை அரசாங்கம் ஆராயலாம் என்று பஸ் உரிமையாளர்கள் கூறுவதிலிருந்து அவர்கள் அரசாங்கத்திடம் எவ்வளவு மதிப்பும், நம்பிக்கையும் வைத்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

பஸ் போக்குவரத்தை மேற்கொள்வதில் அரசாங்கம் அவசரம் காட்டிப் பின்னர் வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதை மாநாடு தெற்றென உணர்த்தியது.






தர்மாத்மா பாய்ஜி

— கே. எம். முன்ஷி —

● கோடிக் கணக்கில் செல்வம் ஈட்டிய ஜுகல் கிஷோர் பிர்லா அவர்கள் அதைவிடப் பெருஞ் செல்வமாகிய பக்தியும், ஈகையும், எளிமையும் பெற்றிருந்தார். சமீபத்தில் மறைந்த அந்த மாமனிதரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். — ஆசிரியர்

பிர்லா சகோதரர்களில் மூத்தவரான ஜுகல் கிஷோர்ஜி பிர்லா அவர்கள் ஜூன் 23ந் தேதியன்று நம்மைவிட்டு மறைந்துவிட்டார். குடும்பத்தாராலும், நண்பர்களாலும், 'பாய்ஜி' என்று அழைக்கப்பட்ட அவர், மதிப்புக்குரிய முதுமையில் எண்பத்தைந்தாம் பிராயத்தில் காலமாகி விட்டார்.



கிருஷ்ண மந்திர், பிருந்தாவன்

அவரை நான் முதலில் சந்தித்தது 1942 அல்லது 1943ல். புதுதில்லியில் அல்புகெர்க் சாலையில் ஐந்தாம் நம்பர் கொண்ட 'பிர்லா ஹவுஸி'ல் அவரை முதலில் கண்டேன். அதிலிருந்து, நான் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினராகி 1948ல் எனக்கு விண்ட்ஸர் ப்ளேஸில் அளிக்கப்பட்ட விடுதிக்குச் செல்லும் வரையில் — தில்லி சென்ற போதெல்லாம் பிர்லாக்கள் எனக்குத் தங்களது உபசரணையை அளித்திருக்கிறார்கள்.

'பிர்லா ஹவுஸ்' என்பது விஸ்தாரமான மாளிகை. சுற்றிலும் அழகான பூங்கா. சிறப்பாகவும் கலை எழிலுடனும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நவீனமாக இருக்கும். இத்தனையிலும் ஆடம்பரம் தெரியாது. கட்டப்பட்ட நாளாக 'பிர்லா ஹவுஸ்' நவபாரதத்தின் மகத்தான சிற்பிகள் பலருக்கு இடம் தந்திருக்கிறது. லாஜபதி ராய், மாளவியா அவர்கள், காந்திஜி, ஸர்தார் வல்லப பாய் படேல் ஆகியோர் இவர்களில் சிலர். நாம் சுதந்திரம் பெறும் வரையில் தேசத் தலைவர்கள் கூடி முக்கியமான முடிவுகள் எடுத்த கேந்திரம் அதுவே எனலாம்.

அந்த வீட்டுக்கு விதிவிலக்காக ஓர் அறை அங்கு உண்டு. அங்கு அலங்காரம் ஏதும் கிடையாது. நாற்காலிகள் முதலியவையும் கிடையாது. மகாநாடுகளும், பிரமுக விருந்தினர்களுமாக எப்போதும் செயல் துடிப்பில் இயங்கிய பிர்லா ஹவுஸின் பரபரப்பு இந்த அறையின் எளிமையைத் தொட்டதேயில்லை. அங்கு வாழ்ந்தவர் விரும்பியேற்ற ஏகாந்தத்தையும் தொட்டதில்லை.

அந்த அறைதான் பாய்ஜியுடையது.

மற்ற பிர்லாக்கள் ஹிந்து வாழ்முறையிலேயே நவநாகரிகத்தையும் கலந்து வாழ்ந்தவர்கள். அவர்களிடமிருந்து பாய்ஜி தனித்து நின்றார். உண்ணும் போதுகூட அவர் தலையில் குல்லாய் வைத்திருப்பார். முழங்காலுக்குச் சிறிதே கீழாகத் தழைய மார்வாரி பாணியில் வேஷ்டியை உடுத்தியிருப்பார். அவரது கண்கள் சிறியவை. ஆயின் அவற்றில் தீட்சண்யம் உண்டு. சில சமயங்களில் நகைச்சுவையோடு அவர் அவற்றைச் சிமிட்டும் போது ஓர் ஒளி மிளிரும். அவர் கொஞ்சமாகத்தான் பேசுவார். அப்படிப் பேசும்போதெல்லாம் அது அவர் மிகவும் விரும்பிய ஓர் இலட்சியத்தைப் பற்றித்தான் இருக்கும். ஹிந்துக்களின் வாழ்முறைக்கும் வழிபாட்டுக்கும் புத்துயிர் தருவதுதான் அந்த லட்சியம்.

பாய்ஜியின் மனைவி 1929-ல் காலமாகிவிட்டார். மறுமணம் பற்றி பாய்ஜி நினைக்கவேயில்லை. அவருக்குக் குழந்தைகள் கிடையாது. உலகைத் தோளில் தாங்கிய 'அட்லஸ்' போல் அவர் தனியாளாக ஹிந்து சமுதாயத்தின் பாரத்தைத் தோளில் தாங்கி வந்தார். அவர் இதை எப்போதும் வெளியுலகுக்குக் காட்டிக் கொண்டதில்லை. தாம் சேவை செய்வதாகப் பாத்தியதை கொண்டாடியதில்லை. அதற்காகத் தனிப் பெயர் பெற முயன்றதுமில்லை.

எளிமையாகவும், நெறி வழுவாமலும் வாழ்ந்தார் பாய்ஜி. இலட்சியத்திலேயே ஊறிய வாழ்வு அவருடையது. ஒரு காலத்தில் அவர் வெகு சாமர்த்தியமாகத் தொழில் செய்து வெற்றி கண்டவர் என்று எவரும் நினைக்க முடியாதபடி பிற்காலத்தில் வாழ்ந்தார்.

இருபது வயதுக்குள்ளேயே அவர் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார். அப்போது அவரது தந்தை சேத் பலதேவ்தாஸ் பிர்லா வியாபாரம் செய்து வந்தார். அந்நாளில் அதைப் பெரிய வியாபாரம் என்று சொல்வதற்கில்லை. பதினெட்டாம் வயதில் பாய்ஜி கல்கத்தாவில் தொழில் தொடங்கச் சென்றார். இரண்டாண்டுகளில் அங்கு தமக்கென ஓர் அலுவலகத்தை ஆரம்பித்து விட்டார். சாதுரியமும் அறிவுக் கூர்மையும் செயல் துடிப்பும் கொண்ட அவர் வலுவான பருத்தறிவு, திடமான லட்சிய நோக்கம் என்ற இரு வரப்பிரசாதங்களையும் பெற்று முன்னேறினார்.


கல்கத்தாவில் தொழில் தொடங்கிய போது அவர் பிரிட்டிஷாரின் வியாபார நலன்களோடு போட்டி போட நேர்ந்தது. அப்போது இந்தியாவின் ஜவுளித் தொழில் மாஞ்செஸ்டரின் ஏகபோக்கியமாக இருந்தது. பாய்ஜி மற்ற ஆசிய நாடுகளோடு வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்துவதில் முதல்வராக நின்றதோடு, ஜப்பானின் ஜவுளி உற்பத்தியாளருடனும் தொடர்பினை உண்டாக்கிக் கொண்டார்.

அந்த நாட்களில் சீனம் ஒரு மர்ம நாடாக இருந்தது. (இப்போதும் அது மர்மநாடாகத் தான் இருக்கிறது — ஆனால் வேறுவிதத்தில்.) சீனத்துடனும் வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளச் சாத்தியக்கூறு உண்டா என பாய்ஜி ஆராய்ந்தார். இதற்காக இருவரை அந்நாட்டுக்கு அனுப்பினார். அவர்கள் திரும்பியவுடன் சீனத்துடனும் வர்த்தகம் புரியத் தொடங்கி விட்டார் பாய்ஜி.

அர்ஜென்டைனாவின் கடுமையான போட்டியையும் பொருட்படுத்தாமல் முதன்முதலாக எண்ணெய் வித்துக்களை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தவரும் பாய்ஜியே.

அவர் எவ்வளவு சம்பாதித்திருப்பார் என்பது எனக்குத் தெரியாது. ஆயின், அவர் சமயத்துக்காகவும் தான தருமத்துக்காகவும் எவ்வளவு செலவிட்டிருப்பார் என்பது எனக்கு ஓரளவு தெரியும். இந்த இனங்களில் அவர் செலவிட்டது கோடிக்கணக்கில் இருக்கும்.

அவர் ஆசார ஹிந்துவாயினும், தீண்டாமையில் மனிதத் தன்மையே இல்லை என்று



லக்ஷ்மி நாராயணர் கோவில், புது தில்லி


கண்டார். தீண்டாமை ஹிந்து சமூகத்தின் ஜீவாதாரத்தையே உறிஞ்சுவதாகக் கண்டார். காந்திஜி தீண்டாமை ஒழிப்புக்காக இயக்கம் தொடங்குவதற்கு நீண்ட நாட்கள் முன்பே, ஹரிஜனங்களுக்காகப் பாய்ஜி பள்ளிகள் கட்டினார், கிணறுகள் வெட்டினார், ஆலயங்கள் எழுப்பினார்.

பழைய கோயில்களைப் புதுப்பிப்பதற்காக அவர் பிர்லா ஜனகல்யாண டிரஸ்ட் என்பதை நிறுவினார். இந்நாட்டிலும் அயல் நாட்டிலும் உள்ள ஹிந்துக்களுக்கு உதவி புரிவதற்காக அகில இந்திய ஆரிய (ஹிந்து) தர்ம சேவா சங்கம் என்பதைத் தோற்றுவித்தார். அயல் நாடுகளில் குடியேறியுள்ள ஹிந்துக்களின் பொருட்டு இந்த ஸ்தாபனம் சமய போதகர்களை அனுப்பி வைத்தது.

அவரது நீண்ட கால வாழ்வில் அவர் புதிதாக எழுப்பிய கோயில்கள், புதுப்பித்த பழங் கோயில்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கணிப்பது கடினம். ஆயினும், அவர் கட்டுவித்த பெரும் கோயில்களைக் கூறலாம் — புதுதில்லியில் உள்ள லக்ஷ்மி நாராயணர் ஆலயம், மதுராவிலுள்ள ஸ்ரீக்ருஷ்ண ஆலயம், காசி இந்து சர்வகலா சாலையிலுள்ள விசுவநாதர் ஆலயம், புது தில்லியிலும் வொர்லி (பம்பாய்)யிலுமுள்ள புத்தர் கோயில்கள், பிலானியில் உள்ள சரஸ்வதி கோயில், கல்யாணிலுள்ள விடோபா ருக்மிணி ஆலயம், போபாலிலுள்ள ஸ்ரீலக்ஷ்மி நாராயணர் கோயில், விரஜராஜ நகரில் உள்ள (ஒரிஸ்ஸா) ஸ்ரீ சிவாலயம் முதலியன அவர் நிர்மாணித்த மாபெரும் ஆலயங்கள்.

கலை உணர்வற்றோரால் சிதைக்கப்பட்ட ஏராளமான ஆலயங்களைப் பதினெட்டாம்

சரஸ்வதி மந்திர், பிலானி



நூற்றாண்டில் புதுப்பித்த அஹில்யா பாயைப் போல நமது பாய்ஜி தமது பொருள், சக்தி, காலம் அனைத்தையும் ஆலயப் பணியில் செலவிட்டார்.

அவர் எழுப்பிய கோயில்களிலெல்லாம் அவரது தனித்தன்மை பிரதிபலிப்பதைக் காணலாம். அவை நல்ல முறையில் திட்டமிடப்பட்டிருக்கும்; நல்ல முறையில் கட்டப்பட்டிருக்கும். பெரும்பாலான ஹிந்துக் கோயில்களில் காணும் 'சம்பிரதாய'த்துக்கு மாறாக அவை சுத்தமாகவும், துப்புரவாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் இருக்கும்.

புதுதில்லியில் உள்ள லக்ஷ்மிநாராயணர் ஆலயம் தனித்து நிற்பதாகும். விஸ்தாரமானவெளியில் அது கட்டப்பட்டுள்ளது. பரந்த நந்தவனம் அதைச் சுற்றியுள்ளது. தர்மசாலைகள் அதன் அங்கமாயுள்ளது. கோயில் கட்டிய நாளன்று எப்படியிருந்ததோ அதே போல் இன்றளவும் ஒரு தூசி துரும்பு இல்லாமல் பரம பரிசுத்தமாகப் பராமரிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

இக்கோயிலைப் பற்றிப் பேசுகையில் எனக்கு ஒரு விந்தையான சம்பவம் நினைவு வருகிறது. அக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள சரித்திரக் காட்சிகளில் ஒன்று, செங்கோட்டையை வெற்றி கண்டு உள்ளே பிரவேசிக்கும் ஒரு ஜாட் வீரரைச் சித்திரிக்கிறது. 'ஹிந்துமத சம்பந்தமான எதனிடமுமே 'அலர்ஜி' உள்ளவரும், மதச் சார்பின்மையில் தீவிரம் கொண்டவருமான ஒருவர், இந்தக் காட்சி கோயிலில் இடம் பெறலாகாது என்று காந்திஜிக்குக் கடிதம் எழுதினார். காந்திஜி ஏறக்குறைய பின்வரும் வாசகத்தில் பதில் எழுதினார்: ''ஜுகல் கிஷோர்ஜியை அவரது மனச்சாட்சிக்கு மாறாக ஏதோ ஒன்றைச் செய்யும்படி நான் எப்படிக் கோர முடியும்?'' இவ்வாறு எழுதியதோடு கடிதத்தின் பிரதியொன்றை பாய்ஜிக்கு அனுப்பி வைத்தார் காந்திஜி.

மதனமோகன மாளவியாவின் நெருங்கிய நண்பர் பாய்ஜி. மாளவியாவின் ஆலோசனைப்படி ஹிந்து மகாசபை இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காக ஏராளமாகப் பொருளுதவி புரிந்தார். புதுதில்லியில் ஹிந்து மகாசபைக்கென ஓர் இருப்பிடம் இருப்பதற்குப் பெருமளவில் காரணம் பாய்ஜியின் தாராளமே.

பொதுவாக ஹிந்துக்களுக்கும், குறிப்பாகப் பஞ்சாபில் வகுப்புக் கலவரங்களுக்கு ஆளானவர்களுக்கும் பணி புரிந்துவந்த கோஸ்வாமி கணேஷ் தத்துக்கு பாய்ஜி நிரம்ப நிதி உதவியிருக்கிறார்.

ஹிந்து மதம் பற்றி பாய்ஜி பரந்த எண்ணம் கொண்டிருந்தார். ஜப்பானிலுள்ள புத்தமதத் தலைவர்களுடன் அவர் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்து, அவர்கள் மூலம் ஹிந்து மதத்தின் முக்கியமான கிரந்தங்களை ஜப்பானிய மொழியில் பெயர்க்கச் செய்தார். ஜப்பானிலுள்ள பௌத்த லாமாக்களும், இந்தியாவிலுள்ள புத்தபிட்சுக்களும் தொடர்பு கொள்ளச் செய்தவர் பாய்ஜி.

இந்தியாவும் தாய்லாந்தும் சமய ரீதியில் தொடர்பு கொள்ளப் பாங்காக்கைச் சேர்ந்த ஸ்வாமி சத்தியானந்தர் அவர்களின் துணையுடன் நற்பணி புரிந்தார் பாய்ஜி. ஹிந்துமத நூல்கள் தாய்லாந்து மொழியில் பெயர்க்கப்பட்டன. தாய்லாந்து மத நூல்கள் இந்தியருக்குப் பயனுறுமாறு ஆங்கிலத்தில் ஆக்கப்பட்டன. தாய்லாந்து மாணவர்கள் இந்தியாவுக்கு வந்து ஹிந்து மதத்தைப் பற்றிப் படிக்கவும் உதவிபுரிந்தார் பாய்ஜி.

இந்தியா — ஜப்பான்—சீனம்—கம்போடியா இவற்றிடையே ஒருமைப்பாடு உண்டாவதற்காக உழைத்தவர் பாய்ஜி. பௌத்த ஆலயங்களில் வழிபடுவதற்காகவரும் யாத்திரீகர்களுக்காகப் பல தருமசாலைகளைக் கட்டினார் அவர்.

ஃ ஃ ஃ

அவரது தாராளப் பான்மை என்றுமே நலிந்ததில்லை. அவரிடம் நிதி உதவிக்காக வந்து, வெறுங் கையுடன் திரும்பியவர் எவருமே கிடையாது. தமது மனைவியின் நினைவாகக் கல்கத்தாவில் குடும்பக் கலைக் கல்லூரியும், மார்வாரி கஷ்ட நிவாரண சங்கமும் நிறுவினார். குருதேவ் டாகுர் ஜப்பானுக்குப் போக நிதி உதவி அளித்திருக்கிறார் நமது பாய்ஜி.

இடைவிடாமல் செயலாற்றிக் கொண்டேயிருந்தவர் அவர். எனினும், ஒரு போதும் தடபுடல் செய்யமாட்டார். தமது தாராளம் பற்றிப் பெருமை பேசமாட்டார். எதையோ சாதித்ததாக உரிமை கோரமாட்டார். பின்னணியில் இருப்பதையே அவர் விரும்பினார். ஹிந்து மதத்துக்குப் புனர்ஜீவனம் அளிக்கும் இலட்சியத்தைத் தமக்கு முன்பாக வைத்துக்கொண்ட அவர், என்றும் சலிப்படையாமல், பாட்டையிலிருந்து பிறழாமல் நோக்கத்தைப் பின்பற்றி வந்தார்.

ஹிந்துவாக இருப்பதற்காக அவர் ஒரு நாளும் வெட்கப்பட்டதில்லை. ஹிந்துமதத்திடம் அவர் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தார். அது முன்னாட்களில் இருந்தாற் போன்ற ஜீவசக்தியுடன் ஆற்றல் வாய்ந்த மதமாக — வளருகின்ற மதமாக — மீண்டும் உருவாக முடியும் என்ற நம்பிக்கையிலேயே அவர் வாழ்ந்தார்.

ஓர் இலட்சியத்துக்குப் பூரணமாக ஆன்மார்ப்பணம் செய்து கொள்வதும், அகம்பாவமற்ற சேவையில் என்றும் உத்வேகத்துடன் ஈடுபடும் பான்மையும், மகத்தான திட்டங்களை மாண்புற நிறைவேற்றும் ஆற்றலுமே மானுடரின் மகிமைக்குப் பரீட்சையெனில் பாய்ஜி உண்மையிலேயே மகிமை பொருந்தியவர்தான்.

தமது முந்தையரின் சமயமாகிய ஹிந்து மதம் புதுமை பெற்றுப் புத்துயிர் பெற வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் செலவிட்டவர் அவர்.

சொல்லாலும் செயலாலும் அவர் ஒரு தர்மாத்மா.

(நன்றி: 'பவன்ஸ் ஜர்னல்')

கேராவ் என்னும் கோரம்

வங்காளத்துக்குக் கேராவ் ஒன்றும் புதிதில்லே. 1964-ல் இருநூறு கேராவ்களும் 1965-ல் முந்நூறும், 1966-ல் அறுநூறும் நிகழ்ந்துள்ளன !

மேற்கு வங்கத்தில் கடந்த நாலு மாதங்களாக நடந்து வரும் பல ரக கேராவ்களினால் இதுவரை ஏற்பட்ட தேசிய நஷ்டம் எவ்வளவு தெரியுமா? முப்பது லட்சம் "வேலே நாட்கள்" பாழாகியுள்ளன ! ஒரு மனிதன் செய்யும் ஒரு நாள் வேலே ஒரு "வேலே நாள்" எனப்படுகிறது. ரூபாய்க் கணக்கில் இது இருபது கோடி நஷ்டமாகும்.

வங்காளத்துக்குக் கேராவ் ஒன்றும் புதிதில்லே. 1964-ல் இருநூறு கேராவ்களும், 1965-ல் முந்நூறும், 1966-ல் அறுநூறும் நிகழ்ந்துள்ளன. இவற்றில் பல வன்முறைச் செயல்களில் முடிந்துள்ளன.


இந்த ஆண்டு ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த பிறகு கேராவ்கள் மிக அதிகமாகியுள்ளன. இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் கூட்டுடன் உள்ள இந்த ஐக்கிய முன்னணி சர்க்கார், யூனியன் நடவடிக்கைகளில் போலீஸ் தலையிடக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. இதனால் அரசாங்கத்திலேயே உள்ள இடதுசாரியினர் இந்தக் கேராவ்களுக்கு வேண்டுமென்றே ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறார்களோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. கேராவ் என்பது என்ன ? முறைகேடாக, சட்ட விரோதமாகச் சிறைப் படுத்துதல் என்பதே இதன் பொருள். மேற்கு வங்கத்தில் இப்போது கேராவ் என்ற பெயரில் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரைச் சிறிய அறைகளில் ஆறு நாட்கள் வரையில் அடைத்து வைப்பது சர்வ சாதாரணமாகி விட்டது. சிலர் கடும் வெய்யிலில் நீண்ட நேரம் நிறுத்தி வைக்கப் படுகிறார்கள். வேறு சிலரை உட்கார்த்தி வைத்து மிகப் பிரகாசமான விளக்குகளைக் கண்களுக்கு நேராக எரிய விடுகிறார்கள். இதைத் தவிர முரட்டுத்தனமாக நடத்துவதும் அடி உதைகள் கொடுப்பதும்கூட சகஜமாகி விட்டன. அண்மையில், எழுபத்தைந்து நாட்களுக்குள் இருநூறு கேராவ்கள் நிகழ்ந்திருக்கின்றன.





இதையெல்லாம் பற்றி மேற்கு வங்க மக்கள் மிகவும் கவலே கொண்டுள்ளனர். செல்வந்தர்கள் புதிய தொழிலகங்களே இனி மேற்கு வங்கத்தில் தொடங்குவார்களா என்பது சந்தேகமே. அந்த ராஜ்யத்தில் உள்ள முதலீடு செய்யப்படக்கூடிய செல்வமெல்லாம் பிற ராஜ்யங்களில் தொழிலகங்கள் ஆரம்பிக்கப் பயன்படுத்தப்படலாம். இப்போதே பொறி இயல் நுணுக்கங்களில் திறமைசாலிகளான பலரும் நிர்வாகத் திறன் மிக்கவர்கள் பலரும் அந்த ராஜ்யத்திலிருந்து வெளியேறி வேறிடங்களில் வேலேவாய்ப்புகளேத் தேடி வருகின்றனர். இதனால் இன்று மேற்கு வங்கத்தில் நிர்வாகத் திறன், செயல் திறன், தொழில் திறன் மிக்கவர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது. இந்த ஆபத்துக்களே உணர்ந்து அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லே.

விலேவாசிகள் குறையவும், மக்களின் அவசியத் தேவைகள் பற்றாக்குறை இன்றிக் கிடைக்கவும் வழி செய்தால்தான் தொழிலாளர்கள் திருப்தியுற்று, கேராவ் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பார்கள். அதே சமயத்தில் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளே யெல்லாம் முதலாளிகள் மதித்து நடக்கிறார்களா என்பதையும் அரசினர் கவனிக்க வேண்டும். இந்தக் கடமையை உணர்ந்து செயலாற்றிக் கேராவ் போன்ற மிருகத்தனமான காரியங்களே மேற்கு வங்க அரசாங்கம் ஒழித்துக் கட்ட வேண்டும். — கே. ஓ. சாக்கோ

(ஐ. பி. எஸ்.)








தூத்துக்குடி டாக்டர் (கேப்டன்) எஸ். பத்மரூபன் அவர்கள் குமாரத்தி சௌ. பிரேமா B.A., க்கும், சேலம் டாக்டர் என். ராமமூர்த்தி அவர்கள் குமாரரும், ஹிராகுட், I. I. T. பிரின்ஸிபாலுமான சிரஞ்சீவி R. ரெங்கராஜன் B.Sc., B.Sc. (Engg.) அவர்களுக்கும் தூத்துக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.


வாழ்க மணமக்கள்!



வடசேரி திரு ராம்சாமி குருக்களின் புதல்வன் வேலுமயில் L.C.E.க்கும் தூத்துக்குடி திரு நெல்லையப்ப பிள்ளை புதல்வி பார்வதிக்கும் அண்மையில் மதுரையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்குப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர். ஸ்ரீ ராஜாஜி அவர்களிடமிருந்தும், மற்றும் பெரியோர்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துக்கள் வந்தன. மணமகன் திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்களின் மைத்துனர்.

வாழ்க மணமக்கள்!







கோடம்பாக்கம் ஸ்ரீ ராஜேஸ்வரி பாடசாலையில் ஸ்ரீ ஜகத்குருவின் பீடாரோகண வைரவிழா.


அமெரிக்காவில் நம் இசையைப் போதிக்கச் சென்றுள்ள ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்களுக்குத் திருவல்லிக்கேணி பாரதி கலாசாலையினர் பிரிவுபசாரம் நடத்தினர். மூசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் இசைக் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சான்தோம் ஆர்ட்ஸ் அகாதமி ஆரம்ப விழாவின் போது நடனமாடிய குமாரி ஜெயஸ்ரீக்குத் தங்கப் பதக்கம் அளிக்கிறார் செம்மை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர்.






திருவண்ணாமலை ரமணாச்ரமத்தில் ஸ்ரீ ரமணேச்வர மகாலிங்கத்துக்குக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.



சென்னை மத்திய நூலகத்தில் 'அமெரிக்க நகர அபிவிருத்தி' கண்காட்சியைச் சென்னை சுகாதார மந்திரி ஜனாப் சாதிக் பாட்சா அவர்கள் தொடங்கி வைத்தார்.

ராஜகம்பீரனுக்கு ராஜகோபுரம்






வடபழனி ஆலயத் திருக்குளம்

வடக்கே உள்ள கைலாசத்தின் பெருமையை நினைந்து திருவையாற்றை தட்சிண கைலாசம் என்கிறோம். வடக்கே உள்ள காசியின் பெருமையை நினைந்து தமிழகத்தில் ஒரு தலத்தைத் தென்காசி என்கிறோம். வடக்கே உள்ள மேருவின் மகிமையைப் போற்றித் தஞ்சை ஆலயத்தில் தட்சிணமேரு என்ற விமானத்தை எழுப்பினான் ராஜராஜன். தென்னகத்திலுள்ள பல புண்ணிய தீர்த்தங்களை தட்சிண கங்கை என்பதுண்டு.

இதற்கு மாறாகத் தெற்கே உள்ள திருத்தலத்தின் பெயரில் புதிதாக வடக்கே ஒரு க்ஷேத்திரம் அமைந்திருக்கும் அருமை வடபழனிக்கு உரியது. தென் பழனியில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணியே இங்கு நாளுக்கான சென்னை நகரவாசிகளின் சௌகரியத்தை முன்னிட்டு மலை மீது உறையாமல் புவி மீது எழுந்தருளியிருக்கிறான்.

சென்ற ஒரு நூற்றாண்டாக உலகம் முழுவதிலுமே லோகாயத சக்திகள் பரவி, சமய உணர்ச்சியை நலியச் செய்து வருகிறது. இந்தப் பொது விதிக்கு ஒரு விலக்காக, சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு எழுப்பப்பட்ட வடபழனி ஆலயம் நாளுக்குநாள் சீரும் சிறப்பும் பெற்றுப் பொலிந்து வருகிறது.

ஆலயம் அமைந்து ஆண்டுகள் நூறே ஆயினும், ஆலயம் எழும்பியுள்ள பேட்டை புராதனமான புண்ணிய பூமியாகும். திரிபுர தகனத்தின் போது மேரு மலையை வில்லாக்கிய சிவபெருமான் அதற்கு அம்புஜக் கண்ணனை அம்பாக்கிப் பூட்டிய இடம் இதுவே என்று சொல்கிறார்கள். கோடு என்றால் மலை. கோட்டில் அம்பை ஆக்கிய இடமே 'கோடம்பாக்கம்'. கார்க்கோடகன் எனும் நாகராஜன் நாராயணனைப் பூஜித்த இடமாகையால் கோடகன் பாக்கம் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவதும் உண்டு. அழகுணர்ச்சி உள்ளவர்களோவெனில், 'கோடல்' எனப்படும் காந்தள் மலர் மண்டிப் பூத்த



உத்ஸவ மூர்த்தங்கள்



பழனி ஆண்டவன் லீலை — கதை வேலை


அழகிய பாக்கமே கோடல் அம்பாக்கமாயிற்று என்பர். எழுநூறு ஆண்டுகளுக்குமுன் இரண்டாம் ராஜாதி ராஜன் காலத்தில் வாழ்ந்தவரும், 'ஞானாமிர்தம்' என்ற சைவ சித்தாந்தப் பெருநூலை இயற்றிய மகானுமாகிய வாகீச முனிவர் இக்கோடம்பாக்கத்தில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இந்த வாகீச முனிவர்,

இருள்நெறி மாற்றித்தன் தாள்நிழல்
 இன்பம் எனக்களித்தான்
அருள்மொழித்தேவன்நற் கோடலம்
 பாகை அதிபன் எங்கோன்

என்று தமது ஞானாசிரியராகிய அருண்மொழித் தேவர் எனும் பரமானந்த முனிவரைப் பாடுவதிலிருந்து, அம்மகானும் இப்பதியில் வாழ்ந்ததாக அறிகிறோம். தொண்டை நாட்டின் தொன்மை வாய்ந்த புலியூர்க் கோட்டத் தலைநகராக விளங்கியதும் இதுவே.

ஆயினும் இந்தப் பழம் பெருமைகளையெல்லாம் சின்னஞ் சிறிதாகச் செய்து விடுவது இத்தலத்துக்குப் புதிதாக வந்து சேர்ந்துள்ள ஒரு பழத்தின் பெருமை. சாதாரணப் பழமில்லை அது. வித்து என்றும், தோது என்றும், கோது என்றும் ஒதுக்குவதற்கு ஏதுமில்லாமல் முழுக்க முழுக்க ஆனந்தரஸம் நிறைந்த ஞானப் பழமான முருகனல்லவா அக் கனி? அப்படி முருகனைப் பழம் என்று பெயர் சூட்டியதோ சாட்சாத் மகாதேவன்அல்லவா?

உலகை முதலில் சுற்றி வரும் பிள்ளைக்குத் தெய்விக மாதுளங் கனியைத் தருவதாகப் பரமேசுவரன் கூற, மயில் மீதேறி விரைந்தான் சுப்பிரமணியன். அன்னையும் தந்தையுமே மகனுக்கு உலகம் என்ற தத்துவப்படி மூஷிகவாகனன் பார்வதி – பரமேசுவரர்களை வலம் வந்து கனியைப் பெற்று விடுகிறான். உலகைச் சுற்றி வந்த குகன் கனியை இழந்த கோபத்தில் கோவணாண்டியாகிப் புறப்பட்டு ஆவினன்குடி அடைகிறான். "பழம் வேண்டுமென்று நீ கோபிக்கலாமா? பழம் நீயே அல்லவா?" என்று பரமனார் பரிந்து பேச, சாந்த சந்நியாசியாகி, பழனியாண்டவனாகி அருள் புரிகிறான் குமரகுருபரன்.




ஸ்ரீமன் நடராஜ மூர்த்தி

கதை அனைவரும் அறிந்ததாயினும் அதன் உட்கிடை அறியாதவொன்றுதான். தாய் தந்தையரே உலகம் என்பது ஞானபண்டிதனாகிய முருகனுக்குத் தெரியாத விஷயமல்ல. அதற்கும் மேலாக, தனது தாயும் தந்தையுமான சக்தியும் சிவமுமே சகல உலகுமாகி, அவ்வுலகிலுள்ள சகல உயிர்களுமாகியிருப்பதை அறிந்தவன் அவன். உலகமெலாம் சிவ – சக்தியில் ஒடுங்கியுள்ளது என்பதை விநாயகன் உலகுக்கு உணர்த்த முற்படுகையில், கந்தனோ உலகம் முழுவதிலும் சிவ–சக்தியே நிரம்பியிருப்பதை உணர்த்த விரும்பி உலகைச் சுற்றி வந்தான். எவனைத் தெய்வமாகப் போற்றி உலகம் பிரதட்சிணம் செய்கிறதோ, அவனே எளிமையிலும் எளிமையாகி உலகைப் பிரதட்சிணம் வந்தான். அந்தப் பிரதட்சிணம் முடிந்தபின் அவனுக்குத் தெய்விக மாதுளங்கனி உட்பட எந்தப் போக்கிய வஸ்துவும் தேவைப்படாததால் துறவியாகக் கிளம்பி விட்டான்!

அத்துறவியையே உறவினில் பேர் உறவாகக் கொண்டு தங்களிடம் இழுத்துத் தமது அன்பைச் சுரந்தும், அவனது அன்பைச் சுரக்கச் செய்தும் ஆனந்தித்த அடியவர் பலர்.

அவர்களில் ஒருவர் சென்ற நூற்றாண்டில் கோடம்பாக்கத்தில் வாழ்ந்த அண்ணாசாமி



கோபுரத் திருப்பணி நடக்கிறது



ஆறுமுகன்

நாயகர். செல்வம், கல்வி இரண்டுமற்ற அவருக்கு இவற்றின் பயனை பக்தியோ எல்லையற்று இருந்தது. திருத்தணிகைப் பிரானுக்குத் தமது நாவை அரிந்து பலி தந்து பாவாடம் தரித்தார். அந்த நாக்கை வளர்த்ததோடு மட்டுமின்றி அவரது நோக்கையும் வளர்த்தான் சரவணபவன். அதனால் முக்காலமும் நோக்கும் ஆற்றல் பெற்ற அவர் ஆயிரமாயிரம் மக்களுக்கு வருங்காலம் உணர்த்திய குறி பீடம் தான் பிறகு வடபழனியாண்டவன் ஆலயமாயிற்று.

நாயகர் தென் பழனி சென்று தண்டாயுதபாணியைத் தரிசனம் செய்து திரும்புகையில் இறைவன் ஆணையால் அவருக்குச் சித்திரக் கடைக்காரர் ஒருவர் தந்த பழனியாண்டியின் படமே முதலில் பூஜிக்கப்பெற்றது. குறி பீடத்தைக் கோவிலாக்குவதற்கு அக்காலத்தில் கைங்கரியம் புரிந்த தேனாம்பேட்டை ரத்தினசாமிச் செட்டியார் அவர்கள்தாம் படத்தின் இடத்தில் இன்றைய படிமம் இடம்பெறக் காரணமானவர். வண்ணையம் பதி ஸ்தபதி ஒருவர் கல்லை வெண்ணெயாக்கி வடித்தெடுத்த வடிவழகு ரூபமான வடபழனி ஆண்டவனை ஸ்தாபித்தவர் செட்டியார் அவர்களே.

கண்டார்தம் மனங்கவரும் முண்டிதமாம்
சிரத்தழகும், காணக் காணக்
கொண்டாடத் தக்கதிரு நீற்றழகும்,
கண்டிகையின் கோலச் சீரும்,
பண்டாய நான்மறைக்கோ வணச்சிறப்பும்
கொண்டு,வட பழநி மேவும்
தண்டாயு தப்பெருமான் திருவடிக்கே
அகங்குழைந்து தழைந்து வாழ்வாம்

என்று அன்பர்களைப் பாட வைக்கும் கோலம் அது! குழந்தையின் உடலில் காணும் குழைவும், யோகியின் உடலில் காணக்கூடிய முறுக்கும் ஒருசேர இழைந்த சிலாவடிவம் அது! வைராக்கியமும், கருணையும் கலந்து மிளிரும் பிம்பம் அது! கண்டவுடன் தண்டமிட வைக்கும் அந்தத் தண்டாயுதபாணிதான் இவ்விதம் அட்டையில் அருள்பொழிகிறார்.

அண்ணாசாமி நாயகர் ! அண்ணாசாமித் தம்பிரானாகி, 1865-ல் அண்ணலின் அடிநிழல் அடைந்தபின், அவர் போலவே பாவாடம் தரித்துக் குறி கூறி வந்தார் ரத்தினசாமிச் செட்டியார் அவர்கள். கோடம்பாக்கம் குறிமேடையை மக்கள் 'வடபழநி ஆண்டவர் ஆலயம்' என்று சொல்லுமாறு செய்தவர் செட்டியார் அவர்களே. இவர் தம்பிரானாகி, 1886ல் எம்பிரான் இணையடி சேர்ந்தபின் இவ்விருவரின் பாவாடப் பணியையும், பூசையையும், குறி சொல்லுதலையும் தொடர்ந்தவர் பாக்கியலிங்கத் தம்பிரான் அவர்கள். இப்போதுள்ள வடபழநி ஆலயத்தின் கர்ப்பக் கிருகத்தையும் உட்பிராகாரத் திருச்சுற்றையும் கருங்கல் திருப்பணியாக்கியவர் இப்பெரியவரே. ஐம்பதாண்டு அரும்பணிக்குப் பின் இவர் 1931ல் காலமானார். காலமாகுமுன்பே வடபழநியை ஞாலம் புகழும் பதியாக்கி விட்டார்.

இன்று இக உலகின் அலைக்கழிப்புக்களுக்கெல்லாம் ஒரு தேக்கம் போன்ற திரை உலகத் தலைநகராயிருப்பது கோடம்பாக்கம் தான். அங்கு உலகையே திரைப்படமாகக் காட்டும் நாயகன் ஆசாபாசங்கள் யாவும் களைந்த பாலசந்நியாசியாக நிற்கிறான். ஆனால் இவன் துறவியாயிருந்தும் மக்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு ராஜாதி ராஜனாக விளங்குகிறான். 'ராஜ கம்பீர நாடாளு நாயக' என்று அருணை முனிவர் பழனியாண்டவனைப் பாடிய தற்கேற்ப, அன்பர்கள் செய்யும் கோலாகலத் திருப்பணிகளை ஏற்று — ராஜ உடையும்கூடத் தரித்து — ஆட்சிபுரிகிறான். இந்தத் திரிலோக சக்கரவர்த்திக்கு உரிய மகத்தான வாசஸ்தானமாக வடபழனி ஆலயத்தை விஸ்தரிக்கப் பெரிய அளவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. ராஜாதி ராஜனின் திருப்பணிக்குத் தலைமை தாங்குபவரும் ஒரு ராஜன்தான். மதுரை மீனாட்சிக்கு மாநிலம் புகழத் திருப்பணி புரிந்த திரு பி. டி. ராஜன் அவர்கள் அவனது அருமந்தப் புதல்வனுக்குத் திருப்பணி புரிய, சான்றோர்கள் பலர் அடங்கிய குழுவின் துணையுடன் ஆர்வத்தோடு முன்வந்திருக்கிறார். அந்த மீனலோசனியும் சொக்கநாதருடன் வடபழனியின் சுற்றுச் சந்நிதிகளில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மூர்த்தங்கள் உறையும் சந்நிதிகளையும் மற்றும் பாலசுப்பிரமணியர், ஆறுமுகர் முதலியவர்களின் சந்நிதிகளையும் புதுக்கவும், புது விமானங்கள் எழுப்பவும், மூலவரான தண்டபாணி சந்நிதியை மன்னர் மன்னனின் சபாமண்டபம் போல் மகாமண்டபமாக விஸ்தரிக்கவும், சமயச் சொற்பொழிவுக்காகக் கந்தர் அநுபூதி மண்டபம் கட்டுவிக்கவும், யாத்திரிகர் விடுதி—கல்யாண மண்டபம் முதலியன எழுப்பவும் திருப்பணியில் திட்டமிடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் முக்கியமாக, கோயிலின் கிழக் கோபுரத்தைப் புதுப்பிப்பதோடு, தென் புறத்தில் ஐந்தடுக்குகள் கொண்ட எழுபதடி ராஜகோபுரம் ஒன்றும் நிர்மாணிக்கத் திட்டமிட்டு, இப்பணி செயலுருவில் தொடங்கப்பட்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் அளவில் திருப்பணியின் எல்லா அம்சங்களும் பூர்த்தியாகும் என நம்பப்படுகிறது. இருபது லட்சத்துக்கு அதிகமாகிவிட்ட சென்னைவாசிகளே இதை நிறைவேற்றித் தந்துவிட முடியும். ராஜன் அவர்களும் முக்கியமாக அவர்களையே எதிர்பார்க்கிறார். இருப்பினும், மற்ற நகரங்களில் வசிப்பவர்கள் முருகன் பணியில் பங்கு கொண்டு புண்ணியம் பெறுவதற்கு ஆட்சேபமில்லை. பொருளைக் கொடுத்துப் பிரதியாக அருளைப் பெறுவது பேரத்தில் ஆண்டவனையே வெற்றிகொள்வதல்லவோ? ஆடிக் கிருத்திகை இதோ வருகிறது. ஆடு மயிலோனுக்குப் பணி செய்து கோடிப் புண்ணியம் பெற வெகு நல்ல சந்தர்ப்பம். கந்தன் அன்பர்கள் முந்த வேணும்.

பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: திருப்பணி கமிட்டி, வடபழநி ஆண்டவன் ஆலயம், கோடம்பாக்கம், சென்னை — 26.



இன்றைய உங்கள் வருமானம் என்ன என்பதல்ல... நாளைய உங்கள் தேவைக்கான சேமிப்பு என்ன என்பதுதான் முக்கியம்!

ASP/UCO-11/66

பணம் சேமிக்கவும், கரண்ட், ஸேவிங்ஸ், பிக்ஸெட்—ரெக்கரிங்-டிபாஸிட்டுகள் ஆகிய கணக்குகள் வைத்துக்கொள்ளவுமான எல்லா வசதிகளையும் வழங்குகிறோம்.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா



மீண்டும் சங்க காலம் தோன்றியிருப்பதாகத் தோன்றுகிறது. எங்கு பார்த்தாலும் சங்கங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஒரே சங்கமாக விளங்க வேண்டிய நமது பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் தங்களிடையே இரண்டு குட்டிச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பார்லிமெண்டில் உள்ள குண்டர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பீமர்கள் சங்கம் என்று ஒன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தில் சேர வேண்டுமானால் எடையில் 200 ராத்தலுக்கும் குறையாமல் இருக்க வேண்டும். தங்களுக்கு அதிகப்படி ரேஷன் கொடுக்கப்பட வேண்டும் என்றும், இன்னும் மற்ற சலுகைகள் வேண்டும் என்றும் இந்தப் பீமர்கள் கேட்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இதைப் பார்த்து விட்டு, பார்லிமெண்டில் உள்ள ஒல்லியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு ''சுதாமா சங்கம்'' என்று ஒன்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். குசேலரின் இன்னொரு பெயர்தான் சுதாமா என்பது. இந்தச் சங்கத்தில் சேர வேண்டுமானால் 121 ராத்தலுக்கு மேல் எடை இருக்கக் கூடாது. இந்தச் சங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீ பாலச்சந்திரனின் எடை 99 ராத்தல்தான். காரியதரிசி ஜகந்நாத் பகாடியாவும் 99 ராத்தல்தான். தங்களுக்கு ஹோட்டல்களில் பாதிக் கட்டணம்தான் வாங்கப்பட வேண்டும் என்றும், ரயில்வேக் கட்டணங்களும், விமானக் கட்டணங்களும் எடையைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

என்னைக் கேட்டால் நாட்டில் உள்ள உணவு நெருக்கடியை உத்தேசித்துச் சர்க்கார் சுதாமா சங்கத்துக்குத்தான் உதவி அளிக்க வேண்டும் என்று கூறுவேன். ஒல்லியர்களுக்குச் சலுகைகள் கிடைக்கிறது என்று தெரிந்ததும், எல்லாருமே சுதாமாக்களாக மாற முற்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இவர்கள் பழைய சுதாமா காட்டிய இன்னொரு வழியைப் பின்பற்றாமல் இருக்க வேண்டுமே என்றுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. பழைய சுதாமாவுக்கு,—அதாவது குசேலருக்கு 27 குழந்தைகள் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

ஒல்லியர்கள் ஒரு சங்கமும், குண்டர்கள் ஒரு சங்கமும் அமைத்துக் கொண்டு விட்டதால், இந்த

இரண்டிலும் சேராதவர்கள் என்ன செய்வது என்று கேட்கலாம். இவர்கள் ''இரண்டும் கெட்டான் சங்கம்'' என்று ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிடில் உலகில் சங்கங்களுக்கு என்ன பஞ்சம்?


உதாரணமாக மேற்கு ஜெர்மனியில் நெட்டையர்கள் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. இச் சங்கம் சமீபத்தில் தான் தனது பதின்மூன்றாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. இந்தச் சங்கத்தை ஆரம்பித்து வைத்து, இன்றும் அதன் தலைவராக விளங்கும் வெர்னர் ஷ்னீடர்

லேயே உயரமான மனிதர் ரஷ்யாவில் இருக்கிறார் என்றும், அவருடைய உயரம் 7 அடி அல்ல; 8 அடி அல்ல; 9 அடியும் அல்ல; 9 அடி 2 அங்குலம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேற்கு ஜெர்மனியில் மட்டும் 40,000 நெட்டையர்கள் இருக்கின்றனர் என்றும், அவர்களில் 22,000 பேர் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சங்கத் தலைவர் கூறுகிறார்.

நெட்டையர்களுக்கு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. முதலில் அவர்களுக்கு வாழ்க்கைச் செலவு மற்றவர்களை விட அதிகம். இவர்களுக்கு ஆடைகள்,

'சங்க' காலம்!



நாடோடி

என்னும் பிராங்க்போர்ட் போலீஸ்காரரின் உயரம் 6 அடி 10 அங்குலம். ''ஆ! அத்தனை உயரமா?'' என்று ஆச்சரியப்படாதீர்கள்! ஜெர்மனியில் மிக நெட்டையான மனிதரின் உயரம் 7 அடி ஒன்பதே முக்கால் அங்குலம்! இத்தனை உயரமான மனிதர்களும் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்படுகிறவர்களுக்கு இவரை விட உயரமான மனிதர்கள் இருக்கிறார்கள் என்றும், உலகத்தி

கால் ஜோடுகள் முதலியன ரெடிமேடாகக் கிடைப்பதில்லை. தனியாக ஆர்டர் கொடுத்துத் தயார் செய்ய வேண்டியிருப்பதால் செலவு அதிகமாகிறது.

இன்னும் இவர்களுக்குப் போதிய நீளமுள்ள கட்டில்கள், குளிக்கும் தொட்டிகள் கிடைப்பதில்லை. ரயில்களிலும், பஸ்களிலும், கார்களிலும் இவர்கள் சௌகரியமாக உட்கார முடிவ



பஞ்சா மிர்தம்

''ஜோக்கி''

''பதவி ஏற்று நூறு தினங்களாகியும், பழைய பைல்களைத் தோண்டி எடுத்து ஆராய்வதற்கே நேரம் போதவில்லை!'' — சென்னை முதல்வர் திரு அண்ணா.



ஏற்கனவே மேற்கொண்டிருக்கிற பொறுப்புக்கள் போதாதென்று புதை பொருள் ஆராய்ச்சியிலும் இறங்கி விட்டாரா அண்ணா?

ஃ ஃ ஃ

பிரபல நடிகை விவியன் லே தமது 53வது வயதில் மறைவுற்றார் என்று ஒரு லண்டன் செய்தி கூறுகிறது.



அவர் மறைவுக்காக மட்டுமல்ல, ஒரு நடிகையின் வயதை இப்படி வெளியிட்டதற்காகவும் வருத்தம் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

ஃ ஃ ஃ

லோக சபையில், வெளிவிவகார மந்திரி திரு சாக்ளா அளித்த பதிலைக் கேட்டுச் சில அங்கத்தினர்கள் ஆத்திரத்துடன் இரைந்தார்களாம். அப்போது மந்திரி அவர்களைப் பார்த்து, ''எனக்குக் கொஞ்சம் மரியாதை காட்டக் கூடாதா?'' என்று கேட்டிருக்கிறார். இது மேலும் கூச்சலைக் கிளப்பி விட்டது. சாக்ளாவைப் பார்த்து ஓர் அங்கத்தினர் பற்களை நறநற வென்று கடித்தாராம்.



''நாம் காட்டச் சொன்னது மரியாதையை தவிர, பற்களை அல்ல!'' என்று திரு சாக்ளா அந்த அங்கத்தினருக்கு ஏனோ அறிவிக்கவில்லை. அவ்வாறு கூறினால் இன்னும் பலரது பற்கள் கடிபடக்கூடும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

ஃ ஃ ஃ

''பூமிக்கு, வேறு கிரகங்களிலிருந்து பறக்கும் தட்டுகள் வந்து இறங்குவது உண்மை தான். ஆனால் இதை வேண்டுமென்றே அதிகாரத்தில் உள்ளவர்கள் மறுத்து வருகிறார்கள். சமீபத்தில்கூட எங்கோ ஒரு தட்டு வந்து இறங்கி யிருக்க வேண்டும்!'' என்று அமெரிக்க விஞ்ஞானப் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார்.



''அவை, நிதி வசூலுக்காகப் பூமிக்கு அனுப்பப் படும் தட்டுக்களானால் அவை இந்நாட்டில் இறங்காத வரையில் நல்லதுதான். வேறு எங்கேயாவது இறங்கி விட்டுப் போகட்டும்'' என்று இந்திய நிதிமந்திரியின் சார்பாக ஒருவர் கூறுவது கேட்கிறதல்லவா?

இல்லை. அதோடு நெட்டையர்களுக்கு மற்றவர்களை விட 15 சதவிகிதம் அதிக உணவு தேவைப்படுகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இக் குறைகளைப் போக்கத்தான் இச் சங்கம் வேலை செய்கிறது. அங்கத்தினர்கள் தங்களுக்கு வேண்டிய ஆடைகள், படுக்கைகள், ஜோடுகள் முதலியன பற்றிச் சங்கத் தலைவருக்குத் தெரிவித்தால் அவர் இவர்களுடைய தேவைகளையெல்லாம் ஒன்று சேர்த்துச் சில குறிப்பிட்ட கம்பெனிகளுக்கு ஆர்டர் அனுப்பி வைப்பார்.

நெட்டையர்களில் ஸ்திரீகளுக்கெனச் சில தனிப்பட்ட தொல்லைகள் உள்ளன. நெட்டை ஸ்திரீகளும் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்படாதீர்கள்! ஒரு டச்சு ஸ்திரீ 7 அடி 7 அங்குலம் இருக்கிறாள். நெட்டை ஸ்திரீகள் ஏதாவது கிளப்புகளுக்குச் சென்றால், அவர்களோடு நடனம் ஆட ஆண்கள் யாரும் முன்வருவதில்லை. இதனால் கல்யாணம் ஆகும் வாய்ப்புக்கள் இவர்களுக்கு மிகவும் குறைந்து வருகின்றன. இப்பொழுது நெட்டையர்கள் எல்லாரும் ஒரு சங்கமாகச் சேர்ந்து விட்டதால், இவர்களுக்குள் காதல் ஏற்பட, சங்க அங்கத்தினர்களுக்கிடையில் முந்நூறு கலியாணங்களுக்கு மேல் நடந்திருக்கின்றனவாம்.

ஆக, இதுமாதிரி எத்தனையோ சங்கங்களைப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், ஒன்று மாத்திரம் கேட்டுக் கொள்ளுகிறேன். ''உலகில் உள்ள சங்கங்களை ஆராய ஒரு சங்கம்'' என்று ஒன்று ஆரம்பித்து, ஊர் சுற்றப் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.


முகத்தின்
முறுவலுக்குத்
தேவை
முழுப் பாதுகாப்பு...
கிருமிகள் அணுகாதவாறு உங்கள் வாய்க்கு
முழுப் பாதுகாப்புத் தருவது ஸிக்னல்
அதன் செவ் வரிகளிலிருப்பது
கிருமிகளைத் தாக்கும் ஹெக்ஸாக்ளோரபீன்
ஸிக்னல் பற்பசையின் செவ்வரிகளே சொல்லும்: கிருமிகளைத் தாக்கும் ஹெக்ஸாக்ளோரபீன் அடங்கியுள்ளதற்கு சாட்சி. முகத்தின் முறுவலை முத்தெனப் போற்றிக் காப்பீர்.... கிருமிகள் அணுகாது வாய் முழுவதையும் காத்துக்கொள்ள ஸிக்னல் உபயோகியுங்கள். புதுமையின்பச் சுவை, மிதமிஞ்சிய நுரை...வாயார உங்கள் பற்கள் வெண்மை பொங்கும்; வாய்நிரம்பும் தூய்மையோடு உங்கள் வாய் மலரும். ஸிக்னல் புன்னகையே ஆரோக்கியப் புன்னகை!
Signal
THE RED STRIPES CONTAIN HEXACHLOROPHENE
Signal
கண்கூடாகக் காணும்படி
ஓர் நச்சுநாசினி
அடங்கிய பற்பசை
இது ஒன்றே
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SG. 5-140 TM



புரொட்யூஸர் ஜயலக்ஷ்மி.

"அப்பாவும் தாத்தாவும் எனக்கு அளித்த பள்ளிப் படிப்பு குறைவு தான். ஆனால் அளித்த கல்விச் செல்வம் ஏராளம். அந்தச் செல்வத்தைக் கொண்டு, படிக்காத மேதையான நான் படித்த மனைவியாகி விட்டேன்!" என்று சினிமா பரிபாஷையில் பேசும் இவரைத் தெரிந்து கொள்ளலாமே?

'ஓ.கே' சொல்லும் ஒருவர்

"ஓ. கே. மானிடர்."
"மணி அடிப்பா!"
"டண், டண், டண், டண்!"
"ஸைலன்ஸ்!"
"மேக்கப்!"
"காமிரா!"
"எஸ்! ஸ்டார்ட்!"
"கிளாப்!"
"இண்டர்வியூ! ஸீன் நம்பர் ஒன். டேக் நம்பர் டூ."

"என்ன எதற்கு இப்படி அம்பலத்துக்கு இழுக்கிறீர்கள்?"

"நீங்கள் ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்?"

"வரக் கூடாதா? பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு இந்தத் தொழில் ஆகாதா?"

"அப்படி யார் சொல்லுகிறார்கள்? பெண்ணாய்ப் பிறந்தும் நீங்கள் இந்தத் திரைப்படத் தயாரிப்பாளர் தொழிலுக்கு வந்த கதையை அல்லவா கேட்கிறோம்?"

"கதையா?...கட், கட், கட்!" என்கிறார் டைரக்டர்.

"என்ன சார், கட்கட்கட், டொக், டொக், டொக்?"

"கதையே அல்லவா தெரியாது என்கிறீர்கள்? காமிரா சும்மா ஓடினால் கச்சா பிலிம் என்னத்துக்கு ஆகும்? அதனாலே முதலில் கதையைக் கேட்டுக் கொள்ளுங்கள். அப்புறமா 'டயலாக்' பேசிக் கொள்ளலாம்!" — இடையே குறுக்கிட்டு மீண்டும் இண்டலக்'கட்' செய்கிறார் டைரக்டர் கிருஷ்ணஸ்வாமி.

"சரி சார், கதையைச் சொல்கிறேன், கேளுங்க!" என்கிறார் தயாரிப்பாளர். பின்னர் தொடங்குகிறார். "ஒரு பெண்; பெயர் ஜயலக்ஷ்மி. அவள் ஒரு சினிமாப் புரொட்யூஸர் என்றாலே ஆச்சரியமாயிருக்கிறதில்லையா? அப்படியானால் கதை களை கட்டி விட்டது. ஒரு பெண் எப்படித் திரைப்படத் தயாரிப்பாளர் ஆனாள் என்று தானே கேட்கிறீர்கள்? இவர் ஒரு சினிமா டைரக்டர்; காமிரா மேனும்கூட. ஜெமினி ஸ்டுடியோவிலே 1947 முதல் 1954 வரை காமிராமேனாகப் பணியாற்றியிருக்கிறார். காலஞ்சென்ற காமிரா நிபுணர் கே. ராமநாத்திடம் உதவியாளராக இருந்து பல நுணுக்கங்களைப் பயின்றவர். ஜெமினியிலிருந்து விலகிய இவர் சொந்தமாகவே படங்கள் தயாரிக்க ஆசை கொண்டார். இவருக்கு வாழ்க்கைப்பட்ட தோஷம், — தோஷமா அது? சந்தோஷம்! — நான் சினிமாத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்கும்படி ஆயிற்று! எங்கள் தாத்தாவைத் தெரியுமோ? நாகசுப்பிரமணிய ஐயர் என்று பெயர். தஞ்சை மாவட்டத்திலேயே பல கல்விக்கூடங்கள் அமையக் காரணமாயிருந்தவர் அவர். எங்கள் அப்பா — ராஜகோபாலய்யர் ரயில்வேயில் உதவி என்ஜினீயராக இருந்தவர். அப்பாவும் தாத்தாவும் எனக்கு அளித்த பள்ளிப் படிப்பு குறைவுதான். ஆனால் அளித்த கல்விச் செல்வம் ஏராளம். அந்தச் செல்வத்தைக் கொண்டு படிக்காத மேதையான நான் படித்த மனைவியாகி விட்டேன். இதோ அமர்ந்திருக்கும் இவரது காரியம் யாவிலும் கை கொடுத்து உதவியதனால் இவருக்குப் பிடித்த மனைவியாகவும் ஆகி விட்டேன். இந்தத் திரைப்படத் தொழில் இருக்கிறதே, இது பெரும் பணம் விழுங்கித் தொழில். ஆனால் நான் போட்ட முதல் மூவாயிரம் தான். அதை முப்பது லட்சமாக

நிறக்கச் செய்த பெருமை இவரையும் இவருடைய தொழுத் தொழிலாளர்களையுமே சாரும்.''

''நீங்கள் முதலில் தயாரித்த படம்....?''

''சொல்லாமல்தான் சொல்லி விட்டானே சார்! விளங்கவில்லையா உங்களுக்கு? முதற்படம் பாலா மூவிஸின் **படிக்காத மேதை**. இரண்டாவது படம் **படித்த மனைவி**.''

''யாருடைய கதையோ?''

''வங்காளத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் ஆஷா பூர்ணாதேவியினுடையது. — ஆனால் திரைக் கதை — 'ஸீனரியோ' இவருடையது. ஒரு கதையை எடுத்துக் கொள்வதற்கு முன் அதைப் பற்றி 'டிஸ்கஷன்' செய்வதுண்டு. 'கான்பிரன்ஸ்' கூட்டுவதுண்டு. இதற்கெல்லாம் என்னைச் சேர்த்துக் கொள்ளாமல் விடமாட்டார். இவர் விட்டாலும் நான் விடமாட்டேன். ஏன், தெரியுமா ?''

''பணம் போட்ட முதலாளி. அதனால்தானே?''

''இல்லை. பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது போலப் பெண்ணின் மனம் பெண்ணுக்குத் தான் தெரியும் என்பதனால். பெண்கள் மட்டும் திரைப்பட ரசிகைகள் ஆகவில்லையென்றால், இந்தத் தொழில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியுமா?''

''முடியாதுதான். படிக்காத மேதை பிரமாதமாக ஓடியதற்குக் காரணம் முழுக்க முழுக்க நீங்கள்தானே?''

''அப்படிச் சொல்லிவிட முடியுமா? கதை ஒரு காரணம். கதைக்கேற்ற வசனம் ஒரு காரணம், வசனத்துக்கேற்ற நடிப்பு ஒரு காரணம். நடிப்புக்கேற்ற படப்பிடிப்பு ஒரு காரணம். இப்படியாகக் காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். ஆபர் பாய், லைட் பாய் ஒவ்வொருவருக்குமே பங்கு உண்டு. திரையுலகம் பலருடைய கூட்டு முயற்சியினால் வளம் பெறுவது. யாரும் இதில் தனித்து இயங்க முடியாது. சொல்லப் போனால், ஸ்ரீ கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் வளமையான வசனம், சிவாஜி கணேசனின் உணர்ச்சி பூர்வமான நடிப்பு, 'குருவிக்கேற்ற இராமேசுவரம்' என்பது போல், எங்களது பொருளாதாரத்துக்கேற்ற காட்சி ஜோடனைகளைத் திறம் படப் பதிவு செய்த காமிரா — எல்லாமே படத்தின் வெற்றிக்குக் கைகொடுத்து உதவியிருக்கின்றன.

இன்னும் கேட்பீர்களானால் மூன்று வயது கூட நிரம்பாத எனது மகன் சுரேஷுக்கும் பங்கு உண்டு.''

''என்ன, அவனுமா முதல் போட்டான்?''

''ஆமாம், தனது நடிப்பை முதலாகப் போட்டான். நல்ல பெயரும் வாங்கினான்.''

''பேஷ்! கலைத் தொழிலில் உங்கள் குடும்பத்துக்குள்ளேயே இவ்வளவு போட்டியா?''

''நடிப்புத் துறையில் சிவாஜியின் புகழுக்குப் புகழ் சேர்த்த படம் படிக்காத மேதை. அடுத்த படமான படித்த மனைவியும் பாலா மூவிஸின் புகழுக்குப் பங்கம் விளைவிக்கவில்லை.''




ஜயலக்ஷ்மி - கிருஷ்ணசாமி தம்பதி

''அது சரி! திரையுலகத் தொழிலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''தொழில் சிறந்ததுதான். மக்களை மகிழ்விக்கக்கூடிய தொழில், அறிவாக்கத்துக்கும் பயன்படக்கூடிய தொழில். தானும் வளர்ந்து மக்களையும் வளர்க்கக்கூடிய தொழில். சுருங்கக் கூறினால் சிறந்த கலைத் தொழில்.''

''ஆனால் நடைமுறையில் அப்படி இருப்பதாகத் தோன்றவில்லையே !''



மகன் சுரேஷும் நடித்த 'படிக்காத மேதையில்' ஒரு காட்சி

''காரணம், இதில் முதலீடு செய்பவர்கள் இதைக் கலையாகக் கருதாமல் தொழிலாகக் கருதுவதுதான்; முதலீடு செய்த பணத்தைப் பல மடங்காக்கித் திரும்பப் பெற வேண்டும் என்று ஆசைப்படுவதுதான். எனவே என்ன என்ன செய்தால் போட்ட பணம் லாபத்தோடு திரும்பி வரும் என்று யோசனை செய்கிறார்கள். பலன் கதை போய் விடுகிறது, கருத்துப் போய் விடுகிறது. பணத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒரு படத்தைப் பார்த்தால் இன்னொரு படத்தைப் பார்க்க வேண்டாம் என்ற நிலை ஏற்படுகிறது. இப்படி ஒரு தொழில் உணர்வு நஷ்டத்துக்கும் காரணமாகிறது. இதில் உள்ள கலைத் தன்மையை மனத்தில் கொண்டால், இந்த நஷ்டம் ஏற்படாது. கலையினால் பயன் கிட்டுமே ஒழிய விபரீத பலன் நேராது.''

''ஆமாம், போட்டா போட்டி காரணமாக யார் என்ன படம் எடுக்கிறார்கள், எந்த நடிகரைப் போட்டு எடுக்கிறார்கள் என்பதை ஊர்க் குருவியின் வாயிலாக அறிந்து கொண்டு விடும் தயாரிப்பாளர்கள், 'சப்ஜெக்ட்' பிடித்து விட்டால் முந்திக் கொண்டு விடுகிறார்களே ? சிற்சில மாறுதல்களுடன் சட்டென்று எடுத்து வெளியிட்டு விடுகிறார்களே? முந்திய ஆசாமி தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார வேண்டியதாகிறதே? கதைக்காக வங்காளத்தையும் மகாராஷ்டிரத்தையும் நாடுவதனால்தானே இப்படி ஒரு நிலை உருவாகிறது?''

''நீங்கள் நினைப்பது தவறு. ஒரிஜினலாயிருந்தாலும் இந்தக் கதிதான். கொஞ்சம் ஏமாந்தவருடைய பிலிம் சுருள் பெட்டியைச் சரணடையும், பண நஷ்டத்தோடு. இதற்கு ஒரு வரன்முறை வகுத்துக் கொள்ள வேண்டும்.''

''ஆமாம், ஒரு படம் எடுப்பதென்றால் ஆட்சியினரிடம் அனுமதி பெற வேண்டிய நிர்ப்பந்தம் கிடையாதா?''

''உண்டு. பர்மிட் வாங்க வேண்டும்; படத்தின் பெயரைச் சொல்லி, நடிகர்களின் பெயரைக் கூறி.''

''அப்படியானால் ஆட்சியினரே இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குச் சுலபமாக உதவலாமே!''

''எப்படி ?''

''அனுமதி தருவதற்கு முன்னால், 'படத்தின் பெயர் என்ன? கதை என்ன? பங்கு பற்றும் நடிகர்கள் யார் யார்? அவர்கள் எந்த எந்தப் படத்தில் நடிக்கிறார்கள்? ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திட்டிருக்கிறார்களா?' என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். ஒரே மாதிரிப் படங்கள் இரண்டு மூன்று வெளி வருவதைத் தவிர்க்கலாம். தேவையானால் ஒருவர் ஒரே சமயத்தில் இத்தனை படங்களுக்கு மேல் நடிக்கக் கூடாது என்றும் விதிமுறை வகுக்கலாம். இப்படியெல்லாம் செய்தால் அது ஒரு பயனுள்ள செயலாக இருக்குமல்லவா?''

''எல்லாவற்றுக்கும் சர்க்கார் அல்லது சட்டத்தின் துணையை நாடுவதைவிட நமக்கு நாமே சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்வது சிலாக்கியமில்லையா? வடநாட்டில் ஒருசில நடிகர்கள் ஒரே சமயத்தில் இத்தனை படங்களுக்கு மேல் நடிப்பதில்லை என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை தமிழ் நாட்டுப் பெரிய நடிகர்களும் பின்பற்றினால், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிறிய தயாரிப்பாளர்களுக்குப் பேருதவியாயிருக்கும். அதிக வட்டிக்குக் கடனை வாங்கி இந்தத் தொழிலில் பணம் போடும் அவர்கள், நடிகர்களின் கால்ஷீட்டுக்காகத் தவம் கிடக்க நேரிடாது. சொன்னால் சொன்னபடி குறிப்பிட்ட காலத்தில் படத்தை 'ரிலீஸ்' செய்ய முடிந்தால் வட்டிப் பணமாவது மிஞ்சும் அல்லவா ?''

''மெய்தான்! 'ரிலீஸ்' என்று சொல்லும் போது ஒன்று நினைவுக்கு வருகிறது. தியேட்டர்களுக்குச் சென்று கியூவில் நின்று படம் பார்ப்பதென்றால் எவ்வளவு ரூபாய் செலவாகிறது? இதைக் குறைக்க முடியாதா?''

''எப்படிக் குறைக்க முடியும்? ஏராளமான பொருட் செலவில் தியேட்டர் கட்டும் ஒருவர் தாம் போட்ட முதலுக்கு வருமானத்தை எதிர்பார்க்க மாட்டாரா ? தியேட்டரை நிர்வகிக்க எத்தனையோ சிப்பந்திகள் தேவைப்படுகிறார்களே, இவர்களுடைய ஊதியத்துக்கு என்ன வழி? அதோடு டிக்கெட் கிரயத்தின் பெரும் பகுதி வரிதான் என்பதை மறந்துவிடக் கூடாது. இவ்வளவும் சினிமா ரசிகர்களின் தலையில் தானே சுமையாக விழுகிறது? அதற்குத்தான் இவர் ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார், நம் நாட்டுக்குத் திறந்தவெளி அரங்குகள் உகந்தவை என்று ! சினிமா டெக்னீஷியன்கள் சங்கத்துச் செயலாளராக இருந்த நாள் முதற்கொண்டே இவருக்குத் தமது யோசனையைச் செயலாக்கிப் பார்க்க வேண்டும் என்று ஆசை. சென்னையிலும் தில்லியிலும் பொருட்காட்சிகளில் திறந்தவெளி அரங்குகள் நிர்மாணித்துப் படங்கள் போட்டுக் காட்டியிருக்கிறார். பெரும்பாலான மக்கள் குறைந்த செலவில் கண்டு களித்திருக்கிறார்கள். அதோடு திறந்தவெளி அரங்கு நல்ல லாபமும் தந்திருக்கிறது.''

''திறந்தவெளி அரங்கு பற்றி ஸ்ரீராஜாஜி சொன்னதைச் சொல்ல மறந்துவிட்டாயே!''

''மறப்பேனா? 'தியேட்டர்களைக் காட்டிலும் திறந்தவெளி அரங்குகளே நம் நாட்டுக்கு உகந்தவை; ஆரோக்கியம் பயப்பவை. குறைந்த செலவில் காற்றோட அமர்ந்து ஏழைகளும் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழலாம்' என்றாரே அவர்.''

''யாரோ உங்களைப் பார்க்க வந்திருக்கிறாற்போல் இருக்கிறதே !''

''நாங்கள் எடுக்கப் போகும் புதுப் படத்துக்கு ஒரு புது முகத்தைப் போடவிருக்கிறோம். இரண்டு நாட்களுக்குமுன் 'கேமிரா டெஸ்ட்' நடத்தினோம். அதைப் பற்றிக் கேட்டுப் போக வந்திருக்கிறார் போலும்!''

''ஓகோ ! அவருக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?''

''நான் பார்த்து 'ஓ. கே.' செய்தாகி விட்டது. இனி இவர்.....''

''ஏன் மிஸ்டர் கிருஷ்ணஸ்வாமி! நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?''

''இனி அப்பீல் ஏது? டபிள் ஓ. கே. தான்!''

— ரா. கி.



அத்தியாயம் 17

சந்தானத்தின் அலுப்புக் குரலைக் கேட்டதும் ஞானு, "ஏன், உங்களுக்கு இந்த வெறுப்பு இன்னிக்கு ?" என்றான்.

"எனக்கா? வெறுப்பா...? வெறுப்பு இல்லை. புத்திக் கொள்முதலைக் கணக்குப் பார்க்கிறேன். அவ்வளவுதான்; மூளை குழம்பிப் போறது. உங்கள் வீட்டிலே இருக்கிறேனே, இல்லியோ, தொத்திக் கொண்டு விட்டது."

"சரி, சரி ! போதும், கொஞ்சம் நிறுத்துங்கள். உங்களுக்கு என்ன தோணறது ?"

"எதைப் பற்றி ?"

" இந்தக் கலியாணத்தைப் பற்றி ! நடக்குமா ?"

"நடக்கணும்னுதானே எல்லா ஏற்பாடும் மும்முரமாக நடக்கிறது. ஏன், உனக்குத்தெரியுமே, இன்னிக்கு என்று."

"இந்த மாசக் கடைசியிலே இருபத்தெட்டாம் தேதி !"

"ரெஜிச்சேன்....!"

"ஆமாம். நீங்கள் பணம் கொடுக்கப் போகிறீர்களா?"

"நீ கேட்பானேன் ?"

"உரிமையில்லையா ?"

"இல்லேன்னே வைத்துக் கொள்."

"நான் எதற்குக் கேட்கிறேன்னு, அம்மா உங்க பணத்தைத்தான் நம்பியிருக்கான்னு தெரியும். இப்போ நீங்க கொடுக்காமல் தவிக்க விட்டால்..."

ஞானு பேச்சை முடிக்கவில்லை.

"முட்டாள் மாதிரிப் பேசாதே. உனக்கு மற்றவர்களைவிடக் கொஞ்சம் அதிகம் புத்தி இருக்குன்னு எண்ணியிருந்தேன்...."

"உங்களுக்கு இன்னிக்கு என்னமோ, ரொம்பக் கோபம், ஆத்திரம் எல்லாம் வர்றது....!"

"அப்போ வாயை மூடிண்டு வா!"

வீட்டை அடைந்ததும், ஞானு முன்னே செல்ல, டாக்ஸிக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு மெதுவாகப் பின்னால் சென்றான் சந்தானம். முதலாளி வீட்டில் அவருடன் சேர்ந்து கம்பெனி வேலையில் ஈடுபட்டிருந்ததிலிருந்து அவனுக்கு ஓய்வே இல்லை. ரகுபதி வந்தபின், மன அமைதியும் குலைந்தது. எந்த வீட்டில் அவனுடைய தாயும் சகோதரிகளும் இருக்கிறார்கள் என்று இத்தனை நாட்கள் எண்ணி வந்தானோ, அந்த வீட்டில் அவனுடைய 'தாயார்' அவனைப் பிள்ளையாகப் பாவிப்பதை நிறுத்தி விட்டாள். ஒவ்வொரு கணமும், அவன் ஒரு மூன்றாம் மனிதன் என்பதை நினைவு படுத்திக்கொண்டே வந்தாள் அவள்.

இவ்வளவு நடந்தும், நிலைமை மாறும் என்று எண்ணியே அவனும் முகம் கோணாமல் நடந்து வந்தான். பாகீரதி இன்னும் பழக்க தோஷத்தினாலோ அல்லது நிர்ப்பந்தத்தாலோ காப்பி கொடுத்து, சாப்பாடும் பரிமாறி வருகிறாள். ஆனால் பரிமாறலிலேயே, அவளுடைய மன எழுச்சிகளும், உணர்ச்சிகளும் பிரதிபலித்தன. அவள் தன் வாயால் 'அறையைக் காலி செய்' என்று இன்னும் சொல்லவில்லை. அதற்குக் காரணம் அதற்கு வேண்டிய துணிவு அவளிடம் இல்லை. பாகீரதி சொல்லி விட்டால் போதும், சந்தானம் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்க மாட்டான்! ஏன் சொல்லவில்லை ?

பணத்தை அவனிடமிருந்து பெறும் வரை அவன் அதே வீட்டில் இருக்க வேண்டும் என்ற அவசியத்தினால் தான் பாகீரதி இன்னமும் வெளியேற்றாமல் இருக்கிறாள் என்றே அவன் நினைக்கவில்லை.

'பாகீரதி, அப்படி மோசமான குணமுடையவள் அல்ல! பணத்தை அவன் கொடுத்த பின்னும், அதனால் மனம் மாறிப் போய் விடுகிறவளும் இல்லை ! எப்போதுமே ஒன்று மட்டும் அவன் நிச்சயமாக நம்பலாம் ! பாகீரதி அம்மாள் ஒரு நாளும், 'வெளியே போ !' என்று அவனை விரட்டியடிக்க மாட்டாள்.'

சீதாவின் கலியாணத்தை நடக்க வொட்டாமல் அடிக்க அவன் முழுமூச்சாக இருக்கிறான் என்பதினால் தான் அவளுக்கு அவன் மீது கோபமும் ஆத்திர

மும் ஏற்பட்டன. இந்தக் கோப தாபங்களே அவனை மாற்றியிருக்கின்றன. தரித்திரத்திலே மாய்ந்து மடிந்து, புதை மணலில் அகப்பட்டுக் கொள்ளுகிறவள் தப்புவோமா என்று தவிப்பது போல, ஏழைமை மணலில் ஆழ்ந்து போயிருந்த அவள் தனது பெண்களின் மண வாழ்க்கைதான் லட்சியம் என்று இரவும் பகலும் இயாவித்து வருகிறாள். இருபத்து ஏழாவது வயதில் பெண்ணுக்கு ஒரு வரனும் கிடைத்திருக்கிறது. சந்தானத்துக்குத் திருப்தியில்லா விட்டாலும், அவளுடைய மனத்துக்கு ஏற்றதாகப்பட்டிருக்கிறது! அலமேலு அம்மாள் தூண்டி விட்டாளோ, தூபம் போட்டாளோ, அது வேறு விஷயம்! இந்த ஒரு கலியாணத்தால் தன்னுடைய வாழ்க்கையின் லட்சியம் முழுதுமே, பூர்த்தியாக நிறைவேறி விடும் என்று பாகீரதி நம்புகிறாள். அந்த நம்பிக்கையையே சந்தானம் தகர்க்கப் பார்க்கிறான் என்று அவளுக்குத் தோன்றும் போது, அவளுடைய மனத்தில் எரிச்சலும் கோபமும் வெறுப்பும் வெடிப்பதில் ஆச்சரியமோ, தவறோ என்ன இருக்கிறது?

சந்தானம் நாற்காலியிலேயே உட்கார்ந்து தன் சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்தான்.

''மணி ஒன்பது ஆகிறது. சாப்பிடலாமா?'' என்று கேட்டவாறு வந்தாள் சீதா.

''சரி.....!'' என்று எழுந்த அவன் மெதுவாகக் கூடத்தின் வழியே சமையலறையை நோக்கி நடந்தான். அப்போதே அவன் மனத்தில் அசைக்க முடியாத ஒரு முடிவும் பிறந்து விட்டது.

ஃ ஃ ஃ

மறு நாள் அதிகாலையில் எழுந்து வழக்கம் போல் பால் புட்டிகளுடன் கிளம்பினான் சந்தானம். சீதாவின் கலியாணத்தை என்னதான் மறக்க முயன்றாலும் அவனால் முடியவில்லை. முதல் தடவையாக அவன் இந்த விஷயத்தில் பிரவேசித்ததிலிருந்து முந்தின நாள் சாயங்காலம் ரகுபதி அவனைச் சந்தித்தது வரை எல்லா நிகழ்ச்சிகளும் நிழலாட்டம் ஆடின அவன் மனத்தில். தான் நடந்து கொண்ட விதம் சரியில்லையோ என்ற கேள்விகூட அவனுள் எழுந்தது.



ரகுபதி ! இப்போது அவனை நினைத்த போது சிரிப்பதா அழுவதா என்று கூடச் சந்தானத்துக்குப் புரியவில்லை. முன்தினம் அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தவனாய், குழைந்து கொண்டே வார்த்தைக்கு வார்த்தை 'ஸார்' போட்டுக் கொண்டே கெஞ்சாத கெஞ்சல் எல்லாம் கெஞ்சினான். தேவி கம்பெனியில் அவன் ஒரு காலத்தில் குமாஸ்தாவாக இருந்த விவரம் தன் நிகழ்கால அமைதிக்குப் பங்கம் விளைவித்து, எதிர்கால சுபிட்சத்துக்கும் எதிராக இருக்கிறது என்று அவன் மன்றாடினான். அவனைச் சம்பந்தப்பட்ட பைல்களில், அவனுடைய நடத்தையைச் சந்தேகிக்கக்கூடிய அளவுக்குச் சில காகிதங்கள் இருக்கின்றன என்றும் அவற்றைச் சந்தானம் தயைகூர்ந்து தந்துவிட வேண்டும் என்றும் இறைஞ்சினான்.

''இந்தப் பத்து வருஷங்களாக உங்களைப் பாதிக்காத அந்த 'பேப்பர்கள்' இன்னமே என்ன செய்யும்னு பயப்படுகிறீர்கள்?'' என்று கேட்டான் சந்தானம்.

''சார்! இத்தனை நாட்கள் நான் ஓண்டிக்கட்டை. எது வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம்ங்கிற அசட்டுத் தைரியத்தில் ஓட்டி விட்டேன். ஆனால் என்னை நம்பி ஒரு பெண் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாளே!''

''ஆமாம்... ஆனால் உங்களை 'நம்பி'த் தான் செய்து கொள்ளுகிறாளோ, என்னமோ யார் கண்டார்கள்? ஏதோ நிர்ப்பந்தத்தின் பேரிலும் இருக்கலாம், இல்லியா ?'' என்றான் சந்தானம்.

அவன் இடக்காகப் பேசியது துளிக்கூட ரகுபதியை உறுத்தியதாகத் தெரியவில்லை.

''எப்படி வேணும்னாலும் இருக்கட்டும் சார்! எங்கள் மண வாழ்க்கையை உத்தேசித்தாவது தாருங்கள்'' என்றான் அவன்.

''முதல்லே கலியாணமாகட்டும். இந்தச் சீதாவுக்கு நீங்கள் தாலியைக் கட்டுங்கள். அன்னிக்கே முதலாளியைக் கொண்டு, நீங்கள் கேட்கிற தஸ்தாவேஜுகளையெல்லாம் பரிசாகத் தரச் சொல்கிறேன்.....''

ரகுபதி தன் ஆசனத்தில் இருக்கை கொள்ளாமல் தயங்கித் தவித்தான்.

''இப்போதே கொடுத்து விடுங்களேன், சார்.....!''

''எதற்கு? ஏதாவது தொல்லை உண்டாகி விடும் என்று பயமாயிருக்கா?''

''ஆமாம்....''

''அப்படித் தொல்லை கொடுக்கிறவன்னு யாராவது இருக்கணும்னா, அது நான்தான். நான் கம்பெனி ரகசியங்களைச் சொந்த நலனுக்கு எப்போதுமே அம்பலப்படுத்த மாட்டேன். ஏன் உங்களைப் போல் சுயநலத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும் எனக்குத் தெரியாது....''

எந்தக் குற்றத்துக்காகத் தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டானோ, அதே குற்றத்தை இப்போது பத்து வருடங்களுக்குப் பின்னால் அவனைக் காட்டிலும் பத்து வயது சிறியவனான், சந்தானம், தான் கம்பெனியின் உதவி மானேஜர் என்ற திமிரில் இடித்துக் காட்டுகிறான் என்று மனத்துக்குள் குமுறினான் ரகுபதி. ஆனால் கெஞ்சலும் இளிப்புமே அவனிடம் செல்லாத போது, மிரட்டல் எப்படி அவனை வழிக்குக் கொண்டு வரும்? திடீரென்று புது அஸ்திரம் ஒன்றை ரகுபதி பிரயோகப் படுத்தினான்.

''ஸார்! இது உங்களுக்கும் எனக்கும் மட்டும் தெரிந்தால் போதும்.... அந்தப் பைலை இப்போது முதலாளி மறந்தே போயிருப்பார். அது இருக்கா இல்லியா என்கிற கேள்விகூட அவர் மனசிலே தோணாது. அதை என்னிடம் கொடுத்து விட்டால்....'' மேலே எப்படித் தொடருவது என்று ரகுபதிக்குத் தெரியவில்லை.

அவன் ஏதோ புதிதாகப் பிரஸ்தாபிக்கிறான் என்பதைக் கண்டு கொண்ட சந்தானம், அதில் தனக்கு அக்கறை இருக்கிறது என்று முக பாவத்தால் காட்டிக் கொண்டான். கண்கள் அகல விரிந்தன. அவனுடைய உதடுகள் ஏதோ சொல்ல முயல்வது போலத் துடித்தன.

சந்தானத்துக்கு ஆர்வம் இருக்கிறது என்பதை உணர்ந்த ரகுபதி, ''புரியலையா, ஸார் ?'' என்றான்.

''எத்தனை ரூபாய்....!''

''ஆயிரம்!''

''பூ! என்னுடைய ஒன்னரை மாசச் சம்பளம்!''

''இரண்டு மாசச் சம்பளம்?''

''என்ன ஏலம் போடுகிறீர்களா?''

''இரண்டாயிரம் ஸார். நீங்கள்கூட சீதாவின் கலியாணத்துக்கு ஏதோ பண உதவி செய்யப் போறதாகக் கேள்விப் பட்டேன். என்னால் நேரடியாகச் செய்ய முடியாது. அது உங்கள் மூலமாகச் செய்ததாக இருக்கட்டும். ஆனால் இது யாருக்கும் தெரியாது. நீங்களும் உபகாரம் செய்தீர்கள் என்ற நன்றி விசுவாசம் சீதாவின் அம்மாவுக்கு இருக்கும்.''

''நான் செய்யறது உதவின்னு எனக்குப் பட்டாத்தானே நான் நன்றி

யையோ விசுவாசத்தையோ எதிர் பார்க்க வேண்டும்? நான் பணம் கொடுத்தால் அது என் பணமாக இருக்கும். உங்க பணத்தை வைச்சுண்டு, நான் என்னை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய அவசியமில்லை.''

அதன்பின் ரகுபதி வெகுநேரம் மௌனம் சாதித்தான். பிறகு இன்னொர் உபாயத்தையும் பார்த்துவிடலாம் என்று தோன்றியது அவனுக்கு.

''ஸார்.... நான் மெட்ராஸிலே பிஸினெஸ் சர்க்கிளிலே கொஞ்சம் பாபுலர் ஆசாமி!''

'' அப்படியா, தெரியாதே ! நானும் பிஸினெஸ் சர்க்கிளிலேதான் இருக்கிறேன்.....''

'' பெரிய பெரிய மனிதர்களையெல்லாம் தெரியும்.''

''வெரிகுட்....''

''அதே போல, மெட்ராஸிலே கொஞ்சம் பேரைப் பார்த்தாலோ, அவர் பெயரைச் சொன்னாலோ பயப்படுகிறோமே, அவர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள்....''

''அதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை.''

''நான் என்ன சொன்னாலும் அவர்கள் ஒரு ராத்திரியில் காதும் காதும் வைச்ச மாதிரி செய்து முடித்து விடுவார்கள். போலீஸ் நாய் வந்தால்கூட மோப்பம் பிடிக்க முடியாது. உங்களுக்குக் கொடுக்கிற இரண்டாயிரம்கூடத் தேவையிருக்காது.....''

''....ஐ... ஸீ....'' என்ற சந்தானம், ''மிஸ்டர் ரகுபதி, நீங்கள் ஒரு 'ஏ' கிளாஸ் ரௌடியும் கூட என்று எனக்குத் தெரியாது. ஏதோ கம்பெனியிலே இருந்து கொண்டு, இன்னொரு கம்பெனிக்காக, உளவு வேலை செய்தீர்கள், பித்தலாட்டம் பண்ணினீர்கள் என்றெல்லாம்தான் நினைச்சண்டிருந்தேன். உங்க வட்டாரம் எது, மூர்மார்க்கெட்டா அல்லது......'' என்று பரிகாசமாக இழுத்தான்.

''நான் இந்தக் கம்பெனியிலே இருக்கும் போது, நீங்கள் கோதண்டராமனிடம் இருந்திருக்கிறீர்கள்...''


''என்னைப் பயமுறுத்துகிறாயா? இன்னிக்கே அவர்கிட்டே போய் என்னைப் பத்திக் கேளு....''

''மரியாதை குறைகிறது....''

''உனக்கு ஏகவசனம்கூட லாயக்கில்லை.''

''ஸார்....!''

''சரித்தான் போ ஐயா....இன்னும் ஒரு நிமிஷம் இங்கே உட்கார்ந்தே, என் கை உன் கழுத்திலே இருக்கும்...கெட் அவுட், யூ ரோக்....''



ஒரு ரஷ்யப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மாணவனைப் பார்த்து, ''உன் தந்தை யார்?'' என்று கேட்டார்.

''ஸ்டாலின்'' என்று பதில் வந்தது.

''உன் தாயார் யார்?''

''மாபெரும் சோவியத் யூனியன்.''

ஆசிரியருக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. புன்முறுவல் பூத்தபடி, '' இப்பொழுது சொல், நீ எப்படி இருக்க விரும்புகிறாய்?'' என்று கேட்டார்.

''அனாதையாக!'' என்று அச்சிறுவன் கூறியதும் ஆசிரியர் மௌனமானார்.

அடுத்த நிமிஷம் ரகுபதி அறையை விட்டுக் கறுவிக் கொண்டே வெளியேறினான்.

ஃ ஃ ஃ

இப்போது அந்த ரகுபதியைப் பற்றி நினைத்தபோது சந்தானத்துக்கு அமைதி மீண்டும் குலைந்தது. இந்த அயோக்கியனுக்குத்தான் தன் பெண்ணைக் கொடுப்பேன் என்று பாகீரதி அம்மாள் பிடிவாதமாக இருப்பதற்குக் காரணம் அவனைப் பற்றிய உண்மையான விவரங்கள் அவளுக்குத் தெரியாமல் போனதுதான். அவன் சொல்லுவதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம்தான் கிடைத்தது. அப்போது அவன் மறைமுகமாகத்தான் சொன்னான். ஆனால் பாகீரதி அலமேலுவின் ஆதிக்கத்தில் தன்னை மூழ்கடித்துக் கொண்டு விட்டாள். சீதாவிடம் சொன்னால் எந்த விதத்திலும் பிரயோசனம் இருக்காது. மேலும், இவ்வளவும் தெரிந்த பிறகு, ஓர் அயோக்கியனைக் கலியாணம் பண்ணிக் கொள்கிற வேதனை தவிர்க்க முடியாததாகப் போய்விடும்! தாயாரைத் தன் முடிவு சோகத்தில் ஆழ்த்தி விடும் என்று தெரிந்தால், அவள் மனத் திருப்திக்காகத் தானே சோகத்தில் விழத் தயாராகி விடுவாள் சீதா! மேலும், என்னதான் அவன்மீது மரியாதையும் அபிமானமும் இருந்தாலும், சீதாவுக்குத் தன் தாயார் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் நம்பிக்கையும்

உண்டு. ஏன், தாயார்தான் தெய்வம் என்று நினைக்கிறவள் அவள்.

ஃ ஃ ஃ

அன்றும் மறுநாளும் சந்தானம் யாருடனும் அதிகம் பேசவில்லை. தான் ஆபீசுக்கு வந்து போன விவரத்தைச் சீதா அவனிடம் சொன்ன போதுகூட, தலையை மட்டும் ஆட்டிவிட்டுச் சென்றான். ரகுபதி வந்து போன விஷயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம் என்று ஜானுவிடம் அவன் சொல்லி வைத்திருக்கவே, சீதா அதைப் பற்றி அவனிடம் பேசவும் சந்தர்ப்பம் எழவில்லை. சர்ப்பம் அழுவது போல, அவன் தன்னுள்ளேயே அழுது, மனம் சோம்பிக் கிடந்தான். ஒரு பெண் நரகம் போன்ற மண வாழ்க்கையில் விழப் போகிறதை அறிந்தும் அதைத் தடுக்கத் தன்னால் ஒன்றும் செய்ய இயலாமற்போகிறதை எண்ணி மனம் அவன் மீதே கோபம் கொண்டது. அவளை அந்த மண வாழ்க்கையில் தள்ளுவதற்கு, அவனும் ஒரு காரணம் என்பதை நினைத்துப் பார்த்த போது, அது விதியின் கோர விளையாட்டு என்றுகூட நம்பினான்.

ரகுபதி ஆபீஸுக்கு வந்து போன மூன்றாம் நாள், மத்தியானம் மூன்று மணிக்குச் சந்தானம் கிளம்பினான்.

''சேஷன்! நான் போகிறேன். முதலாளிக்குப் போன் செய்து விட்டேன். ஆபீஸைப் பார்த்துக் கொள்.''

''சரி, ஸார்!'' என்ற சேஷன், ''ரகுபதி விஷயம் என்ன ஸார் ஆச்சு?'' என்று கேட்டான்.

''அதுதான் அன்னிக்கே சொல்லிவிட்டேனே, நீ ஒண்ணும் விவரம் தேட வேண்டாம்னு....!''

''அதற்கில்லை, ஸார்! முந்தா நாள் வந்துட்டுப் போனாரேன்னு கேட்டேன். அவ்வளவுதான்!''

''அவன் எதற்கோ வந்தான், போனான். நான் வருகிறேன்....''

''என்னிக்குக் கலியாணமாம்?''

''இருபத்தெட்டாம் தேதி.''

''நான் ஆபீஸைப் பார்த்துக் கொள்கிறேன், ஸார்!''

சேஷன் உண்மையைத்தான் சொல்கிறான் என்ற நம்பிக்கையில், சந்தானம் மயிலாப்பூருக்குப் புறப்பட்டான்.

ஃ ஃ ஃ

வீட்டை அடைந்த போது மணி மூன்றே முக்கால். பாகீரதி அம்மாளைத் தவிர வீட்டில் யாருமில்லை. அவளும் சில நிமிஷங்களுக்கு முன்தான் வெளியே போய் வந்திருக்கிறாள் என்பதை, வாங்கி இன்னும் திறக்கப்படாமல் வைத்திருந்த பால் பாட்டில்கள் சுட்டிக் காட்டின.

அவன் உடுப்புக்களை மாற்றிவிட்டு, கைகால்களைக் கழுவியபின் அறைக்கு வந்தான். வரும்போது கொண்டு வந்திருந்த காகித உறை ஒன்றை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். நாற்காலியில் உட்கார்ந்து காத்திருந்தான்.

பதினைந்து அல்லது இருபது நிமிஷங்களுக்குப் பின் பாகீரதி அம்மாள் காப்பி டம்ளருடன் கூடத்துக்கு வருவது தெரிந்தது.

அடுத்த கணம், அவன் அவளைக் கூடத்தில் சந்திக்க, தன் அறையினின்றும் வெளியே வந்தான்.

அவள் குனிந்து தம்ளரையும் டபராவையும் கீழே வைத்து விட்டு நிமிர்ந்தாள் அப்போது அவள் முன், வெகு சமீபத்தில் சந்தானம் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள். தலை தானாகக் குனிந்தது.

''மாமி! இதை வாங்கிக் கொள்ளுங்கள். இது நான் மனசாரச் சீதாவுக்குக் கொடுக்கிற பரிசு...''

பாகீரதி தவித்தாள். அலமேலு அம்மாள் சொன்னதெல்லாம் நினைவில் தோன்றியது. தொண்டையை அடைத்துக் கொண்டது அவளுக்கு. இப்போது சந்தானம் கைநீட்டிப் பணம் அளிக்க நிற்கிறான். அலமேலு அம்மாள் சொன்னதெல்லாம் உண்மையானால், சந்தானம் தான் சொன்னபடி வாக்கைக் காப்பாற்ற முன்வருவானா? கடந்த பத்து நாட்களாக அவள், வாழ்க்கையிலேயே பேசாததெல்லாம் பேசிவிட்டாள் அவனைப் பற்றி! அது தெரிந்தும் இப்போது சீதாவுக்குப் பரிசு என்று பணம் தருகிறானே! ரகுபதி மேலுள்ள பொறாமையாலும், துவேஷத்தாலும் தான் சந்தானம் வேறு வரன் பார்க்கலாம் என்று சொன்னான் என்றே அவள் நம்பியிருக்கிறாள். அந்த எண்ணமே எரிச்சலையும் ஏற்படுத்தி யிருக்கிறது. ஆனால் அவன் மீது வெறுப்பைத் தூண்டும் அளவுக்கு அலமேலு அம்மாள் பாகீரதிக்குத் தெரியாத ரகசியங்களை யெல்லாம் அவனைப் பற்றிச் சொல்லி யிருக்கிறாளே?

இப்போது பாகீரதி அம்மாளுக்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அவளுடைய தவிப்பையும் கண்களில் பிரதிபலித்த சோகத்தையும், சஞ்சலத்தையும் உணர்ந்த சந்தானம்,— ''இதை

'சோ'

எழுதும்

நகைச்சுவை நவீனம்

யாரோ இவர் யாரோ?



ஆகஸ்டு 6

கல்கி

ஆண்டு மலரில்

ஆரம்பமாகிறது

வாங்கிக் கொள்ளுங்கள் மாமி...'' என்றான்.

''இது கடனாக இருக்கட்டும்.'' பாகீரதியின் நா தயங்கித் தயங்கிப் பேசியது.

''இல்லே...இல்லே...இது என் பரிசு!''

''எவ்வளவு இருக்கு...?'' இப்போது அவள் கைநீட்டினாள்.

''இருபது நூறு ரூபாய் நோட்டுகள். செலவுக்கு இது காணாதுன்னு பட்டால் சொல்லுங்கள். இல்லே .... ஜானு விடமோ கமலாவிடமோ சொல்லி அனுப்புங்கள்...''

அவள் மேலே தொடர்ந்து பேசுவதற்குள், தன்னுடைய நன்றியைத் தெரிவிக்க ஆரம்பிப்பதற்குள், சந்தானம் காப்பியை எடுத்துக் கொண்டு, தன் அறைக்குத் திரும்பி வந்தான்.

ஃ ஃ ஃ

நாட்கள் ஒவ்வொன்றாகப் பிறந்து இறந்து மறைந்தன. பொங்கலும் வந்து சென்றது. இருபத்தெட்டாம் தேதி, பழநியில் ஆண்டவன் சந்நிதியில் ரகுபதிக்கும் சீதாவுக்கும் கல்யாணம் என்று நாளும் நிச்சயிக்கப்பட்டது.

அதன் பின் நாட்கள் விரைவாக இறந்து பிறந்து மறைந்தன. இருபத்திரண்டாம் தேதி, ஜானு தன் அக்காவுக்குச் செய்திருந்த இரண்டு ஜோடி வளையல்களையும் ஒரு நெக்லஸையும், மாங்கல்யத்தையும் எடுத்துக் கொண்டு சந்தானத்திடம் வந்தாள்.

''இதையெல்லாம் பார்த்து நன்றாக இருக்கான்னு சொல்லுங்கள்.. அம்மா தான் முதன் முதலா நீங்க பார்க்க வேணும்னு சொன்னா...''

''நெக்லஸ் ரொம்ப அழகா யிருக்கு. இந்த மயில் பதக்கத்தில், முருகனுடைய வாகனம் கனஜோர்... வளையல் இன்னும் காத்திரமாக இருந்திருக்கலாம்.''

''ஒரு ஜோடி ஒண்ணரைப் பவுன் தானே.... இதுக்கு மேலே எப்படிக் கெட்டியாக இருக்கும்?'' என்றாள் ஜானு.

அதன் பின் மாங்கல்யத்தைப் பார்த்தான். ஒரு விநாடி அவன் நெஞ்சம் கலங்கித் தவித்தது. இனிமேல் யாராலும் ஒன்றும் செய்ய முடியாது.

''அக்கா பாவம்... பதினேழு வயசிலே அவளுக்குக் கல்யாணம் ஆகியிருக்கணும்!''

''ஆமாம்... அதுதான் விதின்னு சொல்லறோம், ஜானு. அப்போ நகை நட்டு ஏதும் பண்ணிக்கலையா?''

''பண்ணக் கொடுக்கலாம்னு இருக்கறப்போதானே தந்தி வந்தது!''

''ஓகோ!''

''அன்னிக்கு மாங்கல்யத்தைப் பண்ணி யிருந்தால் ஒருவேளை இந்தக் கல்யாணம் நடந்திருக்குமோ என்னமோ?'' என்றாள் ஜானு.

சந்தானம் தனக்குள் சிரித்துக்கொண்டான். ஜானு குருட்டு நம்பிக்கையில் மூழ்குபவள்!

''என்றைக்கு எல்லாரும் புறப்படுகிறீர்கள்?''

''இருபத்தெட்டாம் தேதி கல்யாணத்துக்கு இருபத்தேழாம் தேதி காலையிலே பழநியில் இருந்தால் போதும்னு மாப்பிள்ளை அபிப்பிராயப்படறார்னு அலமேலு மாமி வந்து சொன்னாள். நாங்களும் அதைத்தான் சொன்னோம். மொதல்லே அம்மா இன்னும் ஒரு நாள் முன்னதாகவே போகணும்னு அவசரப்பட்டா...''

''அப்போ, இருபத்தாறும் தேதி புறப்படுகிறீர்களா?''

''புறப்படுகிறீர்களா என்ன? புறப்படுகிறோம்னு சொல்லுங்கள்!''

சந்தானம் சிரித்தான்.

''என்னாலே எப்படி வர முடியும்?''

''திருநெல்வேலி எக்ஸ்பிரஸுக்கு உங்களுக்கும் சேர்த்து டிக்கட் வாங்கியாச்சு. ரகுபதிதான் எல்லாருக்கும் டிக்கட் வாங்கி யிருக்கிறார்!''

''என்ன!''

''ஆமாம், ரகுபதி தாம் விரும்பியதால்தான் முகூர்த்தத்தைப் பழநியில் வைத்திருக்கிறார்கள் என்று பிரயாணச் செலவைத் தாமே ஏற்றுக் கொண்டு விட்டார். ஏன், பழனியில் செய்யற ஏற்பாடுகளும் அவருடையதுதான்!''

''என்னால் வர முடியாது, ஜானு!''

''ஏன்?''

''ஆபீசை விட்டு வர முடியாது!'' வேறு என்ன சொல்லுவான் அவன்?

''ரெண்டு நாட்களுக்கு அந்தப் பூசணிக்காய் பார்த்துக் கொள்ளட்டுமே!''

''நோ... நோ... அதெல்லாம் முடியாது...''

''நீங்க வராவிட்டால் அம்மா வருத்தப்படுவாள். சீதா மனசு உடைஞ்சு போவாள்.''

'வந்தால் என் மனசு உடைஞ்சு போகுமே!' என்று தன்னுள் கசிந்த சந்தானம், ''சரி, பார்க்கலாம்!'' என்று சொல்லி வைத்தான். **(தொடரும்)**

அத்தியாயம் 20


கிரிப்ஸ் தூது

1942ம் ஆண்டு உலக வரலாற்றில் மிக முக்கியமான காலம். இரண்டாவது உலகப் போரில் புதுத் திருப்பம் ஏற்பட்ட காலம். கிழக்குத் திசையில் நேச நாடுகளுக்கு எதிராக ஜப்பான் போரிட்டு வெற்றிக் கொடி நாட்டியது அப்போதுதான். மலேயா, சிங்கப்பூர், ரங்கூன் எல்லாம் ஜப்பானியர்களின் வசமாகி விட்டன. எந்தச் சமயத்திலும் ஜப்பான் இந்தியாவில் நுழையலாம் என்ற பீதி இருந்தது.

அந்தச் சமயத்தில் இந்தியாவில் பெருந் தலைவர்கள் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தியா முழு மனத்துடன் போரில் பங்கு கொண்டால்தான் ஜப்பானியர்களை விரட்டியடிக்க முடியும் என்ற நிலையை உணர்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்தியாவுக்கு சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவரைத் தூது அனுப்பியது. அதாவது இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கவும், போர் முடிந்த பிறகு இந்தியாவின் பூரண சுதந்திரம் பற்றிச் சிந்திக்கவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தியாவைப் போரில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தியா வந்தார் கிரிப்ஸ்.

அந்தச் சமயத்தில்தான் ரங்கமணி தில்லியில் இருந்தான்.

முதன் முதலாக ஒரு நிருபர் என்ற முறையில் ஒரு பெரிய ராஜதூதரிடம்



கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்

வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

செல்லுகிறோம் என்ற நினைவு அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. நிருபர் தொழில் அவனுக்குப் புதிதுதான் என்றாலும், நிருபர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றியும், கடமைகளைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தான். உள்ளூறப் பயமிருந்தாலும், சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியத்துடன் புறப்பட்டான் ரங்கமணி.

இரிப்ஸ் தங்கியிருந்த மாளிகையில் நுழைந்த பொழுது வாசலில் ஓர் அதிகாரி அவனைத் தடுத்து நிறுத்தினர். சுயேச்சைப் பத்திரிகையின் நிருபர் என்பதை நிரூபிக்கத் தன்னோடு கொண்டு



வந்திருந்த அடையாளச் சீட்டைக் காண்பித்துவிட்டு உள்ளே சென்றான். முன்னால் உள்ள பிரம்மாண்டமான அறைக்குள் நுழைந்தபோது, அங்கு ஏராளமான நிருபர்கள் குழுமியிருந்தார்கள். சற்றுத் திகைப்புடன் பரக்கப் பரக்க விழித்துக் கொண்டு நின்றான். தோளை யாரோ தொடுவதுபோல் தோன்றவே திரும்பினான். மில்லர் சிரித்துக் கொண்டே நின்றார்.

"எனக்குத் தெரியும், நாம் இங்கே சந்திப்போமென்று" என்றார் மில்லர்.

"எங்கே தங்கி யிருக்கிறீர்கள்?" என்று மில்லர் தொடர்ந்து கேட்டார்.

"கிராண்ட் ஹோட்டலில் ஏழாம் நம்பர் அறை" என்றான் ரங்கமணி.

"நான் ரீகல் ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். வாருங்கள், அந்தச் சோபாவில் உட்காரலாம். இரிப்ஸ் வர இன்னும் அரை மணி நேரமாகும்" என்று கூறிக் கொண்டே சோபாவை நோக்கி நடந்தார் மில்லர். கூட்டத்தின் சலசலப்பு அந்தப் பெரிய அறை முழுதும் பரவி யிருந்தது.

ரங்கமணி அந்த அறையையே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தான். விதம் விதமான சோபாக்களும், ரத்தினக் கம்பளங்களும், அலங்கார விளக்குகளும் — ஏதோஒரு புது அற்புத உலகத்தில் இருப்பது போல் இருந்தது. இந்தியாவைச்



சுரண்டிக் கொண்டு இந்திய மண்ணிலேயே வெள்ளையன் இப்படிப் படாடோபத்துடன் இருக்கிறான் என்று பொருமினான் ரங்கமணி.

கைக் காமிராவைப் பக்கத்து ஸ்டூலில் வைத்துவிட்டு, சோபாவில் சாய்ந்தார் மில்லர். பக்கத்தில் ரங்கமணியும் அமர்ந்து கொண்டான்.

"மிஸ்டர் ரங்கமணி! காந்தியும் தில்லிக்கு வருகிறார். நீங்கள் அவரைச் சந்திக்கலாம்" என்றார் மில்லர். ரங்கமணி தலையை அசைத்துக் கொண்டான்.

"எனக்கு நம்பிக்கை இல்லை, காந்தி யுத்தத்தை ஒப்புக் கொள்வார் என்று." இப்படிக் கூறினார் மில்லர்.

"ஏன்?"

"அவர்தான் போர் என்றாலே வெறுப்பவர் ஆயிற்றே. கிரிப்ஸின் குறிக்கோளுக்கும், காந்தியின் தத்துவத்துக்கும் அடிப்படையிலேயே மாறுபாடு உண்டு. கீதையில்கூட அவசியம் ஏற்படும் போது போர் செய்யும்படிதான் சொல்லியிருக்கிறது."

"கீதையையும், ராமனையும் புகழும் மகாத்மா காந்தி, போரை மறுப்பதுதான் விசித்திரம்!" என்றான் ரங்கமணி.

"இந்த விஷயத்தில் கிரிப்ஸ் திட்டம் அவரிடம் எடுபடாது."

"ஒரு விஷயத்தில் அவர்கள் இருவரும் ஒத்து வர முடியும்" என்றான் ரங்கமணி.

"எதில் ?"

"சைவ உணவு ஆராய்ச்சியில்."

இதைக் கேட்டு மில்லர், உரக்கச் சிரித்துக் கொண்டே ரங்கமணியின் முதுகில் தட்டினார்.

"அடிப்படையிலேயே கொள்கை முரணாயிருக்கும் போது, அவர்கள் இருவரும் தாது பற்றிப் பேசி என்ன பயன்? சைவ உணவு பற்றித்தான் பேசுவார்கள். பாவம்,கிரிப்ஸ்!" என்று அநுதாபப்பட்டார் மில்லர். பிறகு சொன்னார்:

"எனக்கு என்னவோ காந்தியின் இந்தக் கொள்கை எடுபடவில்லை."

"எது ?" என்று ரங்கமணி ஆவலோடு கேட்டான்.

"போரை வெறுப்பதுதான்."

"வந்தீர்களா வழிக்கு. ரயிலில் வரும்போது பெரிதாக அவருடைய அஹிம்ஸா தத்துவத்தையும் சத்தியாக்கிரகத்தையும் வானளாவப் புகழ்ந்தீர்களே?" என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

"ஏன், காந்தியின் சத்தியாக்கிரகத்தை இப்போதுகூடத்தான் புகழ்கிறேன். எங்கிருந்தாலும் புகழ்வேன். எந்தச் சமயத்திலும் புகழ்வேன். மீண்டும் சொல்லுகிறேன், காந்தியின் சத்தியாக்கிரகம் மாதிரி இதுவரை உலக வரலாற்றில் எந்த நாட்டிலும் ஓர் அற்புத ஆயுதம் கண்டு பிடிக்கப்படவேயில்லை. இதன் சக்தியும், வேகமும் அபரிமிதமானது. அதில் சந்தேகமே இல்லை, மிஸ்டர் ரங்கமணி. ஆனால் நான் சொல்ல வந்தது வேறு. சத்தியாக்கிரகத்துக்குச் சக்தி உண்டா இல்லையா என்பதைப் பற்றிச் சொல்ல வரவில்லை. போர் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றித்தான்."

"போர், மகாத்மாவின் அஹிம்சைக்குப் புறம்பானதாயிற்றே!"

"இருந்தாலும் போருக்கும் சில நல்ல குணங்கள் உண்டு" என்றார் மில்லர்.

சாய்ந்திருந்தவர் எழுந்து உட்கார்ந்து கொண்டு சொன்னார்: "போரிட்டு இரத்தம் சிந்தி, தாங்க முடியாத வேதனைகளையெல்லாம் அநுபவித்து, பயங்கரத்தை உணர்ந்து பல நெருக்கடிகளுக்கிடையே வெற்றிபெற்றுச் சுதந்திரத்தை அடைந்தால் உங்களுக்குச் சுதந்திரத்தின் அருமையும் பெருமையும் புரியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தாம்பாளத்தில் வைத்துக் கொடுக்க அதை மேளதாளத்தோடு நீங்கள் வாங்கிக் கொண்டால், இந்திய மக்களால் சுதந்திரத்தின் மகிமை பற்றி என்ன தெரிந்து கொள்ள முடியும்? பிரிட்டிஷார் வருமுன்பு நீங்கள் ஒரே நாட்டினராய் வாழ்ந்ததே இல்லை. பல பகுதிகளையும் இணைத்து, இந்தியா என்று ஒரே நாடாக ஆக்கியவர்களே பிரிட்டிஷார்தாம். ஒரே நாடாக மாறியதே தவிர, நீங்களெல்லாம் ஒரே நாட்டினர்தாம் என்ற உணர்வு இன்னும் உங்களுக்கு ஏற்படவில்லை."

"இந்த உணர்வோடுதான் நாங்கள் இருக்கிறோம். இமயம் முதல் குமரி வரை நாங்கள் எல்லாரும் ஒன்றுதான். இந்தியா முழுவதும் ஒரே நாடுதான்" என்று இடைமறித்து, ஆவேசத்துடன் கூறினான் ரங்கமணி.

"மிஸ்டர் ரங்கமணி! உங்களுடைய தேசிய உணர்ச்சிக்கு நான் தலை வணங்குகிறேன். நீங்கள் சொல்வது உண்மையில் ஒரு தத்துவமாக, வெறும் பேச்சோடுதான் இருக்கிறது. நடைமுறையில் இந்த உணர்வு இல்லை. இருந்திருந்தால், நாற்பது கோடி இந்தியர்களும் ஒரே சமயத்தில் இதற்குள் பொங்கி எழுந்திருந்திருப்பார்கள். நீங்கள் அனைவரும் ஒரே நாட்டினர், ஒரே இனத்தவர் என்ற உணர்வு வர இந்த நாட்டில் ஒரு சம்பவமும் நிகழவில்லை. ஒரு போரில் பங்கு கொண்டு இந்தியர் அனைவரும் இரத்தம் சிந்தி, வேதனைப்பட்டால்தான் ஒருமை உணர்ச்சி ஏற்படும்."

"அப்படியே போரில் பங்குகொள்ள இந்தியா சம்மதித்தாலும் பிரிட்டிஷாருக்கு எதிராகப் போர் இல்லையே. ஜப்பானுக்கு எதிராக அல்லவா போரிட வேண்டும்?" என்றான் ரங்கமணி.

"அதனால் என்ன? ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டாலும் அந்தப் போரினால் ஏற்படும் துன்பம், இந்தியர் அனைவருக்கும் ஒன்றுதான். இப்படி இந்தியா முழுதும் ஒரு விஷயத்தில் துன்பத்தை ஒரே சமயத்தில் அநுபவிக்கும்போது, இந்தியர்களிடம் ஒருமைப்பாட்டின் உணர்ச்சி தோன்றி விடும். இப்போது உங்களுக்கு மிக அத்தியாவசியமாக வேண்டியது, இந்த உணர்வுதான்" என்றார் மில்லர். "அதற்காகத்தான் சொல்லுகிறேன், காந்தி மறுக்காமல் கிரிப்ஸின் திட்டத்துக்குத் தலை அசைக்க வேண்டும் என்று. போரினால் கெடுதல் உண்டு என்றாலும் அது தேவைப்படும்போது களத்தில் இறங்கித்தானாக வேண்டும். போர்க்களந்தான் சுதந்திரத்தின் இனிமையை எடுத்துக்காட்டும். போர்க்களந்தான் ஒரு நாட்டு மக்களுக்கு வீரத்தையும், தியாகத்தையும் நேர்மையையும் கற்றுக் கொடுக்கும்."

ரங்கமணி பதில் ஒன்றும் சொல்லாமல் யோசித்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் ஓர் அதிகாரி அங்கே வந்து கிரிப்ஸ் பேட்டிக்குத் தயாராயிருப்பதாகக் கூறவே, எல்லோரும் பக்கத்து அறைக்குள் வேகமாக நுழைந்தார்கள்.

கிரிப்ஸ் மலர்ந்த முகத்துடன் நிருபர்களை வரவேற்றார். அவருடைய இனிமையான பேச்சும், வரவேற்கும் பாங்கும் எல்லாரையும் கவர்ந்தன.

"இவ்வளவு இனிமையாகப் பேசிக் கவரும் சக்தி உள்ளவர், வெற்றியுடன் திரும்புவார்" என்று பக்கத்திலிருந்த ஒரு வட இந்திய நிருபர் ரங்கமணியிடம் கூறினார்.

"பேச்சுக்கு மயங்கிக் காரியத்தில் ஒட்டைவிடும் தலைவர்களா நம்முடைய தலைவர்கள்?" என்று கேட்டான் ரங்கமணி. அந்த வட இந்திய நிருபர், ரங்கமணியை முறைத்துப் பார்த்துவிட்டுச் சற்றுத் தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டார். இதைக் கண்டு மில்லர் சிரித்தார்.

கிரிப்ஸ் பேச ஆரம்பித்ததும் கூட்டத்தின் முணுமுணுப்பு நின்றது. தாம் வந்திருக்கும்

சளியோடு ஃப்ளூவா?

வேகமாக குணம்பெற 2 அனஸின் சாப்பிடுங்கள்



சளி பிடித்தால் நீங்கள் தவித்துப் போவீர்கள். மூக்கு ஒழுகும், ஏராளமாக; தும்மல் வரும். வலியோ உடம்பை வாட்டியெடுக்கும், தெளிவாக சிந்திப்பதே இயலாதுபோகும். உடனே 2 அனஸின் சாப்பிட்டு பாருங்கள். 4 வழி நிவாரணம் அதி விரைவில் கிட்டும்.

1. சளியோடு ஃப்ளூவையும் தணிக்கிறது அனஸின்—வேகமாக
2. சோர்வை வெல்லுகிறது அனஸின்—வேகமாக
3. வாட்டத்தைப் போக்குகிறது அனஸின்—வேகமாக
4. படபடப்பை ஆற்றுகிறது அனஸின்—வேகமாக

இதன் காரணம், பல மருந்துகள் இணைந்த அனஸின்-டாக்டரே குறித்துக் கொடுத்த மருந்துச் சீட்டுபோல பத்திரமானது. எனவே, வலி தணிக்கும் சாதனங்களிலே இந்தியாவிலேயே உன்னத விற்பனை உடையதாக அனஸின் விளங்குவதில் வியப்பில்லை.

சளி பிடித்த முதல் அறிகுறி தென்பட்டதுமே அனஸின் சாப்பிடுங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி ஆகியவற்றையும் தணிக்கிறது அனஸின். ஆகையால் எப்போதும் அனஸின் உங்கள் கைவசமிருக்கட்டும்.

தவறாமல் எப்போதும் வாங்குங்கள் அனஸின்.

அனஸின்

சிறந்தது ஏனெனில் அது

4 வழிகளில் வேலை செய்கிறது



Regd. user: GEOFFREY MANNERS & CO. LTD.


நோக்கம் பற்றியும், அதில் நமக்கு வெற்றி கிட்டுமானால் அது இந்தியாவின் வெற்றிதான் என்றும் கூறினார் கிரிப்ஸ்.

அவருடைய பேச்சுத் திறமையையும், பேசும் போதே கேட்போரின் மனத்தைப் புரிந்து கொண்டு, தகுந்தபடி பேச்சின் தன்மையை மாற்றும் ராஜதந்திரத்தையும் கண்டு ரங்கமணி பிரமித்தான்.

"விட்டுக் கொடாமல் பேசுகிறாரே!" — என்று ரங்கமணி இரகசியமாக மில்லரின் காதில் சொன்னான்.

"சாதாரணப் பேர் வழியா? ஹிட்லரோடு குலாவிக் கொண்டிருந்த ஸ்டாலினையே தம்முடைய ராஜ தந்திரத்தால் நேச நாடுகளின் பக்கம் இழுத்து விட்டவராயிற்றே!" என்று இரகசியம் பேசினார் மில்லர்.

"சர்ச்சில் நல்ல ஆளைத்தான் பார்த்து அனுப்பியிருக்கிறார்" என்று முனகிக் கொண்டான் ரங்கமணி.



"பயப்படாதீர்கள்! மியூசியத்தில் நீங்கள் பார்த்தது பசியால் வாடும் மனிதன் அல்ல; நிஜ எலும்புக் கூடேதான்!"

கிரிப்ஸ் தம் தூது பற்றி விளக்கி விட்டு, நிருபர்களை ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தார்.

"உங்களுடைய இட்டப்படி அமையவிருக்கும் இந்திய ஆட்சிக் குழுவில் வைசிராயின் நிலை என்ன?" என்று ஓர் ஐரோப்பிய நிருபர் கேட்டார்.

"ஆட்சிக் குழுத் தலைவர் என்ற முறையில் பதவி வகிப்பார். அதாவது, இங்கிலாந்தில் மன்னர் எப்படியோ அப்படி!" என்றார் கிரிப்ஸ்.

"அப்படியென்றால் ஆட்சிக் குழுவின் ஆலோசனைக்கு வைசிராய் கட்டுப்பட்டவர் தானே?" என்று கேட்டான் ரங்கமணி.

"இப்போதுள்ள திட்டத்தின்படி அப்படித்தான்."

"இன்னும் கொஞ்சம் விளக்கமாகத்தான் கேட்கிறேன். ஆட்சி அதிகாரம், ஆட்சிக் குழுவிடமிருக்குமா? அல்லது வைசிராயிடம் இருக்குமா?" என்று கேட்டார் மில்லர்.

"அதிகாரம் ஆட்சிக் குழுவிடம்தான் இருக்கும்." அழுத்திச் சொன்னார் கிரிப்ஸ்.

"உலகப் போர் ஆரம்பித்த புதிதில் இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரிட்டிஷார் ஏற்பதாயிருந்தால் போரில் முழுமூச்சுடன் இந்தியா பங்கு கொள்ளத் தயாராயிருந்ததே! அதைப் பிரிட்டிஷ் அரசாங்கம்தானே அப்போது ஏற்கவில்லை" என்றார் ஒரு வங்காள நிருபர்.

"அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால் தற்போது என்னுடைய திட்டத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளுமானால் பழைய மனக் கசப்புக்களெல்லாம் மறைந்துவிடும். திட்டம் நிறைவேறும்."

"உங்களுடைய திட்டத்தைக் காந்தி ஏற்றுக் கொள்ளுவாரா?" மில்லர் கேட்டார்.

"காந்தியின் அஹிம்ஸா தத்துவத்துக்கு என்னுடைய திட்டம் முரணானதுதான். ஆனால் ஒரு பிரச்னையை அணுகும்போது வெறும் தத்துவத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நடைமுறையைப் புறக்கணித்து விடக்கூடாது. காந்தியிடம் இது பற்றி நான் பேசிப் பார்ப்பேன். அவர் என் நண்பர்."

"முஸ்லிம்களைப் பற்றியே நீங்கள் அக்கறை எடுக்கவில்லையா?" என்று ஒரு முஸ்லிம் நிருபர் திடீரென்று கேட்டார். அவர் தலையில் ஒரு குல்லாய் வைத்திருந்தார். மீசையை முறுக்கி விட்டிருந்தார்.

"ஏன் அக்கறை எடுக்கவில்லை? போர் முடிந்த பிறகு இந்திய யூனியன் ஆரம்பமாகும் போது அந்த யூனியனில் சேர வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் உரிமையை என்னுடைய திட்டம் அளிக்கிறதே!" என்றார் கிரிப்ஸ்.

"மாகாணங்களுக்குத்தானே அந்த உரிமை? முஸ்லிம் இனத்தவருக்கு என்று தனிப்பட்ட முறையில் உரிமை அளிக்கவில்லையே."

''அது தேவை இல்லை. முஸ்லிம்கள் அதிகமாக இருக்கும் மாகாணங்கள் விலகி இருந்து விடலாமே.''

''இந்தத் திட்டம் முஸ்லிம்களைப் பிரிந்து போகும்படி தூண்டுகிறதே. பாகிஸ்தான் பிரிவுக்கு உங்கள் திட்டம் சம்மதிப்பதுபோல் இருக்கிறது'' என்றான் ரங்கமணி.

''இல்லை, இல்லவே இல்லை. யாரையும் பிரிப்பது எங்கள் திட்டமில்லை. ஆனால் அதே சமயம் முஸ்லிம் இனத்தவரை இந்துக்களோடு சேர்ந்துதான் வாழ வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதும் நியாயமில்லையே !'' என்றார் கிரிப்ஸ் சற்றுப் படபடப்புடன்.

''இந்து — முஸ்லிம் பிரச்னையை நீங்களே தீர்த்து விடுவீர்களா?'' என்று முஸ்லிம் நிருபர் கேட்டார்.

''அதற்கும் எங்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அது முழுக்க முழுக்க உங்கள் சொந்த விஷயம். போர் முடிந்த பிறகு நீங்கள்தான் அது பற்றி உங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்து கொள்ள வேண்டும்'' என்றார் கிரிப்ஸ்.

''இந்திய பாதுகாப்பு விஷயம் யாருடைய அதிகாரத்தில் இருக்கும்? இந்திய ஆட்சிக் குழுவிடமா அல்லது.....?'' என்று கேட்டார் மில்லர்.

''பாதுகாப்பு விஷயத்தைத் தற்போது நாங்களேதான் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் பல நுணுக்கமான விஷயங்கள் இருப்பதால் அதை ஆட்சிக்குழுவிடம் ஒப்படைப்பதற்கில்லை.''

''அப்படியானால், இந்திய ஆட்சிக் குழுவுக்குப் பூரண அதிகாரம் இல்லை என்றாகிறதே!''-இடைமறித்தான் ரங்கமணி.

''தற்காப்பு அதிகாரம் ஒன்று மட்டுந்தானே இல்லை? அதுவும் இந்தப் போர் முடியும் வரைதானே ?'' என்றார் கிரிப்ஸ்.

''தற்காப்பு அதிகாரத்தை நீங்களே வைத்துக் கொண்டால் இந்தியாவுக்குப் பூரண அதிகாரம் இருக்கிறது என்று எப்படிக் கூற முடியும்?'' என்று கேட்டான் ரங்கமணி.

''இந்த விஷயத்தில் காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் ஒற்றுமையடைந்து கேட்டாலும் தற்போதைக்குக் கொடுப்பதற்கில்லை'' என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு எழுந்தார் கிரிப்ஸ். ''இந்தியத் தலைவர்களுடன் இப்போதுதானே பேச்சு வார்த்தை ஆரம்பமாகியிருக்கிறது? நாலைந்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் சந்திக்கலாம்'' என்றார்.

நிருபர்கள் கலைந்து சென்றார்கள். வாசலுக்கு வந்த ரங்கமணி, சற்று நேரம் மில்லருக்காகக் காத்து நின்றபோது, முஸ்லிம் நிருபர் மீசையை முறுக்கிக் கொண்டு அவன் பக்கத்தில் வந்தார். ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ரங்கமணியின் கையில் ஒரு துண்டுக் காகிதத்தைத் திணித்துவிட்டுக் கூட்டத்துக்குள் சென்று மறைந்து விட்டார். திகைப்புடன் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தான் ரங்கமணி. 'மாலையில் தேவிகாவைச் சந்திக்கவும்' என்று எழுதியிருந்தது. வியப்புடன் முஸ்லிம் நிருபர் சென்ற திசையைப் பார்த்தான். அவரைக் காணவில்லை. கடிதத்தைக் கிழித்துப் பைக்குள் போட்டு விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். அப்போது தான் காமிராவைத் தோளில் போட்டுக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார் மில்லர்.

''மிஸ்டர் ரங்கமணி! வாருங்கள் போகலாம், காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் நடக்கும் இடத்துக்கு'' என்றார்.

ஒரு டோங்காவில் ஏறிக் கொண்டுஇருவரும் புறப்பட்டனர். வழியில் ஒரு ரெடிமேட் கதர்க் கடையில் டோங்கா வண்டியை நிறுத்தச் சொன்னார். ரங்கமணியையும் அழைத்துக் கொண்டு கடையை நோக்கி நடந்தார்.

''இங்கு எதற்கு?'' என்று ரங்கமணி கேட்டான்.

''காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் இடத்துக்குள், இந்த உடையில் சென்றால் நுழைய முடியாது. நீங்கள்தான் உள்ளே போய்ச் செய்திகளைத் திரட்டி வரவேண்டும்.''

ரெடிமேட் கதர்க் கடையில் ரங்கமணிக்கு ஒரு கதர் வேஷ்டியும், கதர்ச் சட்டையும், காந்திக் குல்லாயும் வாங்கினார் மில்லர். சூட்டையும் கோட்டையும் கழற்றிவிட்டுக் கதர் உடைகளை அணிந்து கொண்டான் ரங்கமணி.

இருவரும் டோங்காவில் ஏறிக் கொண்டு காரியக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்துக்கு விரைந்தார்கள்.

கட்டடத்தை ரங்கமணி நெருங்கியபோது வாசலில் நின்ற ஒரு நபர் அவனைத் தடுத்து நிறுத்தினார்.

''உள்ளே கமிட்டிக் கூட்டம் நடக்கிறது. யாரும் போகக் கூடாது'' என்றார்.

''அது எனக்குத் தெரியும். மகாத்மா அவசரமாக நேருவிடம் ஒரு செய்தி தெரிவிக்க அனுப்பியிருக்கிறார்'' என்றான் ரங்கமணி தயங்காமல். அந்த நபர் மறுபேச்சின்றி ரங்கமணியை உள்ளே போக அனுமதித்தார்.

உள்ளே நுழைந்ததும் ரங்கமணி முதலில் சற்றுத் திகைத்தான். கூட்டத்தில் யாரோ ஓர் அங்கத்தினர் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார். கூட்டத்தினர் பேச்சில் லயித்திருந்தனர். ரங்கமணி, ஒரு தூண் ஓரமாக ஒதுங்கி அமர்ந்து கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு ஒரே பரபரப்பு. மாபெரும் தலைவர்கள் அனைவரும் கூடியிருந்ததைக் கண்டு மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். ஜவாஹர்லால் நேரு, ராஜாஜி, வல்லபாய் படேல் போன்ற பெருந் தலைவர்களை நேரில் கண்டதால் ஏற்பட்ட புல்லரிப்பு அவனைவிட்டு வெகு நேரம் வரை நீங்கவில்லை.

கூட்டம் இடைவேளைக்குக் கலைந்தபோது ரங்கமணி பரபரப்புடன் எழுந்து ஜவாஹர்லால் நேருவிடம் விரைந்தான். அவனைக் கண்டதும் நேரு முதலில் முகத்தைச் சுளித்தார். ''ஓ.... நிருபரா? இன்னும் கூட்டம் முடியவில்லையே, நாளை சந்திக்கலாமே'' என்றார் நேரு, ஆங்கிலத்தில், சற்றுக் கோபமாக.

''மிகவும் வந்தனம், நாளையும் வருகிறேன்'' என்றான் ரங்கமணி. உடனே நேரு இலேசாகச் சிரித்துக் கொண்டு, ''தமிழ் நாட்டு ஆசாமிகளே திறமைசாலிகள்தாம்'' என்றார். முகம் மலரச் சிரித்தார். நேருவின் கனிந்த சிரிப்பில் சொக்கி நின்றான் ரங்கமணி. பிறகு இருவரும் பேசிக் கொண்டே வராந்தாவில் நடந்தார்கள்.

(தொடரும்)



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 16

வெண்ணிலவும் நீல மலரும்!

செவ்வந்தி அடிகள் ஆதிரையம்மையைத் திகைப்போடு பார்த்துக்கொண்டே கேட்டார்:

''அம்மையே! எந்தப் பொன்மணியைச் சொல்லுகிறீர் நீங்கள்?''

''அண்ணலே! சோதனை செய்வதென்று தாங்கள் தீர்மானம் செய்துவிட்டால், அதிலிருந்து நாங்கள் எப்படித் தப்பிக்க முடியும்? கருணை கூர்ந்து சொல்லுங்கள், பொன்மணி என்ன ஆனாள் என்று தெரியாமல் தவிக்கிறேன்!''

''அம்மையே! பொன்மணி தான் மடிந்து விட்டாளே! அவளைப் பற்றி நீங்கள் மேலும் மேலும் கேள்விகள் கேட்டால் நான் என்ன மறுமொழி சொல்லுவேன்!''


இவ்வாறு கூறி ஞான மின்னலை இதழ்களின் கோடியிலே துவளவிட்டார் அடிகள். மறுபடியும் சொல்லுவார்:

''அம்மையே! கோசர் குலத்தில் உதித்த பொன்மணியைப் பற்றிக் கேட்கிறீர்களா, அல்லது தவம் என்ற கனலிலே வெந்து மறைந்து இப்போது துறவியாக மறுபிறப்பு எடுத்துள்ள பொன்மணியைப் பற்றிக் கேட்கிறீர்களா? அதைச் சற்றுத் தெளிவுபடுத்துங்கள்!''

தண்மை நிலவைத் துய்த்து நிற்கும் துறவியாகக் கலந்து விட்டாள் என்ற செய்தி என உள்ளத்தில் தண்மையைப் பொழிகிறது. இந்த அரிய பெரிய மறு பிறப்பு அந்த உத்தமிக்குத் தங்களுடைய வாழ்த்துடன் கைகூடிற்று என்பதை நான் ஊகித்து உணர்ந்து கொண்டேன். ஆனால் துறவியான பின்னும் அவள் ஏன் இப்படி யாருடைய பார்வையிலும் வராமல் மறைவாக நிற்க வேண்டும் என்பதை மட்டும்—''

''அம்மையே!'' என்று சொற்களை இடைமறித்தார் செவ்வந்தி அடிகள்.

''அம்மையே! உலகம் பொன்மணியை முல்லை மூதூர் நெருப்பிலே தூக்கி எறிந்து விட்டது. அந்தக் கொடிய



ஆதிரையம்மை அப்படியே அசைவற்று நின்றார். அவருடைய உடம்பினுள் செவ்வந்தி அடிகள் பாய்ச்சிய மின்னல் வேகமாகத் துவண்டது.

''அடிகளே! அந்த மாபெரும் நிகழ்ச்சியும் நடந்துவிட்டதோ! ஒரு துறவிக்குரிய சோதனைகளையெல்லாம் கடந்து அந்தக் கடுந்தீயில் புடமாகி எழுந்து விட்டாள் பொன்மணி என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். துயரமும் கலக்கமும் கொண்டு வேதனையிலே துடித்த பொன்மணி, புத்த பெருமானுடைய அமைதி நிழலிலே

நெருப்பிலே அவள் மடிந்துவிட்டதாக எல்லாரும் தவறாக நினைக்கிறார்கள். அவள் கணவனும் ஆரூ நாட்டு இளவரசியும் இருவருமே அவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அவள் தன்னுடைய கணவனின் கண் முன்பு தோன்றி மீண்டும் அந்த வாழ்விலே புயலை எழுப்ப வேண்டுமா? தன்னுடைய கோசர் குலத்தின் பழியைத் துடைத்து, தன்னிடம் கொடுத்த உறுதிமொழியையும் வெற்றியாக நிறைவேற்றி மீண்டுள்ள தன் கணவனுக்குப் பொன்மணி தனது நன்றியை வேறு

எப்படிச் செலுத்துவது? தன் வாழ்வையே தியாகம் செய்து கொள்ளத் தீர்மானித்த பொன்மணி, முல்லை எறிந்து கொண்டாள். கோசர் குல மங்கை நெருப்பிலே மடிந்தாள் என்ற சொல்லை உண்மையாக்கி விட்டாள்



மூதூர் நெருப்பை விடக் கடுமையானதும் பேராற்றல் நிரம்பியதுமான துறவுத் தீயிலே தன்னைத் தூக்கி பொன்மணி. ஆனால் ஒரே ஒரு மாறுதல். அவள் மடிந்தது, மிஞிலி ஏற்றிய நெருப்பிலே இல்லை. மரணத்தை

நன்றி: வெண்ணிலவுப் பெண்ணரசி

இந்தக் கதையின் வரலாற்றுக்குரிய காலத்தைத் தேர்ந்தெடுத்துச் சரித்திர நிகழ்ச்சிகளை வகைப்படுத்துவதிலே, செங்குட்டுவனைப் பற்றியும் துளுநாடு பற்றியும் மயிலை திரு சீனி வேங்கடசாமி அவர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சிகள் பெரிதும் பயன் தந்தன.

அண்மையில் தமிழுலகுக்கு நன்கு அறிமுகமான ப்ராமி எழுத்துக் கல்வெட்டுக்களைப் படித்துத் தெரிந்து கொள்வதற்குத் திரு ஐ. மகாதேவன், திரு ஆர். நாகசாமி ஆகியோரின் வரிவடிவ வாசிப்பு முறைகள் உதவின. மேனாட்டுக்கும் தமிழகத்துக்கும் இடையே நிலவி வந்த நெருங்கிய தொடர்பை விரிவான முறையில் அறிந்து கொள்வதற்குப் பிளினி, டாலெமி ஆகியோரின் பயணக் குறிப்புகள் அரிய பெரிய சான்றுகளாக நின்றுதவின. இவை தவிர, தம்மபத ஆராய்ச்சியும், தமிழ் நாட்டுச் சாக்கியக் கழகங்களின் வரலாறும், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், எம். சீனிவாசய்யங்கார், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், டாக்டர் சோமசுந்தர பாரதியார், கே. ஜி. சேஷ ஐயர், ந. சி. கந்தையா பிள்ளை, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, சிங்காரவேலு முதலியார். ஜேம்ஸ், ராபின்ஸன், நதானியல் ஆகியோரின் வரலாற்று ஆராய்ச்சிகளும், சங்க இலக்கியச் செய்யுட்களும், கதையின் பின்னணிக்கு உறுதுணை நல்கின. அச்சு வடிவில் இன்று நம் கைக்கு எளிதில் கிடைக்காத பல அரிய நூல்களை மிகுந்த பரிவுடன் சென்னை மறைமலை அடிகள் நூல் நிலையத்தார் எனது ஆராய்ச்சிக்குத் தந்துதவினார்கள். இந்த அறிஞர் பெருமக்கள் அனைவரின் உதவிக்கும் என் மனமுவந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

மீ. ப. சோமசுந்தரம்

வென்று நிற்கும் அமரத் தவ நெருப்பிலே! உடம்பை எரிக்கும் நெருப்பிலே இல்லை. இந்த உள்ளத்தையும் அதை ஒட்டிக் கொண்டு நிற்கும் பாசங்களையும் எரித்து, ஆன்ம நலத்தை அருளுகிற தெய்வ நெருப்பிலே பொன்மணி தன்னைத் தானே இட்டுப் பொசுக்கித் தூய நறும் பொன்னாக, மாற்றுயர்ந்த செழும் பசும் பொன்னாக, மெய்யான பொன்மணியாக, மறுபிறப்பு எடுத்து எழுந்து நின்றாள்! இனி அவள் அழலாடிக்கு உரியவள் இல்லை. அறத்துக்கும் அன்புக்கும் உரியவள். அழலையும் அழலாகச் சுடுகிற துறவு என்னும் அழலிலே நீராடி எழுந்து, இப்போது அவள் புத்த தேவனுடைய சங்கத்துக்கு உரிய பொன்மணி அடிகளாகத் திகழ்கிறாள்! மறைந்தவள் மறைந்தவளாகவே இருக்கட்டும்! அதுவே அவள் ஆசை! ஆறுகள் எல்லாம் கடலிலே கூடிக் கலந்த பிறகு தங்கள் தங்களுக்கு உரிய தனிப்பட்ட பெயர்களையும், உருவங்களையும், தன்மைகளையும் இழந்து, கடலோடு கடலாகக் கலந்து மாறி, எல்லாம் ஓரே கடல் என்ற பெயரிலே சங்கமம் ஆகி நிற்பது போல, நமது பொன்மணியும் புத்த சங்கத்திலே இரண்டறக் கலந்து விட்டாள். இனி அவளைத் தனியாகப் பிரித்து ஆராய்வதும், அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி நினைவுபடுத்திப் பார்ப்பதும் தவறு. துளிகள் ஒன்றாகிப் புனலாவது போலே, ஆறுகள் ஒன்றாகிக் கடலாவது போலே, நீங்களும் பொன்மணியும் ஆயிரமாயிரம் துறவிகளும் எல்லாரும் ஒன்றாகிப் புத்தம் என்ற கடலாகி நிற்கிறீர்கள். உங்களுக்கு உலகம் தனது அஞ்சலியைச் செலுத்துகிறது. உங்களுடைய துறவுப் பள்ளிகளும், பிரிவேணைகளும், உங்கள் கழகங்களும் இனிப் பெருந்துருத்தியிலும், வெள்ளைத் தீவிலும் இவற்றைச் சேர்ந்த தீவுகளிலும் மறுவாழ்வு பெற்றுத் தமிழக வேந்தர்களது வழிபாட்டுக்குரிய புண்ணிய நிலையங்களாக வளர்ந்து, தமிழக வரலாற்றிலே நிலைபெற்று நிற்பதை என் மனக் கண்களிலே கண்டு பெருவகை கொண்டு களிக்கிறேன். இனி நீங்கள் பொன்மணியைப் பற்றி என்னிடம் கேளாதீர்கள். அவளிடமும் அவளைப் பற்றி நீங்கள் நினைவுபடுத்தாமல் இருக்கக் கடவீர்கள். உங்களுக்கு என் மனமுவந்த வாழ்த்து!''



வெள்ளைத் தீவிலே வெற்றி விழா சீரும் சிறப்பும் மிகுந்த பேரானந்தப் பெருவிழாவாக நடந்தேறிய அந்த நன்னாளின் இரவிலே, வெண்மையான தூய நிலவு முழுமையாகத் தண்ணொளி பரப்பியவாறு நீல வானிலே உலா வந்து கொண்டிருந்தது. அந்தத் தொன்மையான தீவின் தூய மறுமலர்ச்சிக்கு உகந்த காவலனாக, அந்தத் தீவின் தலைவனாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட நீலவல்லியின் நாயகன், தனது பழைமையான நினைவுகள் அனைத்துக்கும் நிலைக்களனாக விளங்கிய கடலின் கரையிலே அந்த நினைவுகள் எல்லாவற்றிற்கும் மையமான நீலவல்லியின் கோலக் கரங்களைப் பற்றிப் பிடித்தவாறு வானமும், வையமும் நிலவிலே குளித்துக்கொண்டிருந்த அந்தப் பொன் வேளையிலே வெள்ளி மணல் மீது நடந்து சென்றான். சோலைகளுக்கு அப்பால் பாறைகளின் ஊடாக மேல் கோடியிலே சமண முனை. அதற்குப் பின்னால் பாறையின் மறுபுறம் கல்லால் ஆகிய மண்டபம்.

வேலவனும் நீலவல்லியும் வெள்ளைத் தீவின் கரையிலே நின்ற அந்தக் கல் மன்றத்துக்குள் நுழைந்தார்கள்.

"வல்லி! இந்தக் கல் மன்றத்துக்குத் தான் நாம் இருவரும் முதலில் நன்றி செலுத்த வேண்டும். இந்தத் துறவுப் பள்ளியின் ஏடுகள் அல்லவா என்னை ஒரு பெரிய வரலாற்று உலகுக்குள் அழைத்துச் சென்றன. இந்த ஏடுகள் அல்லவா முதன் முதல் எனக்கு நன்னனைப் பற்றியும், அவனுடைய பழி பாவத்தைப் பற்றியும் எடுத்துக் கூறின. அந்த வரலாறு எத்தனை உண்மையாக முடிந்தது! பெண் கொலை புரிந்த நன்னனுடைய மரணத்துக்கு ஒரு பெண் செய்த உறுதிமொழிதானே முழுமுதற் காரணமாக இயங்கியது!"

இவ்வாறு வேலவன் சொன்னதும் நீலவல்லி கூறுவாள்:

"அன்பே! உண்மைதான். கோசர் குலத்துப் பெண்மணியைக் கொன்ற தீவினையானது, கோசர்குலத்துப் பெண்மணி ஒருத்தியையே தனது கருவியாகக் கொண்டு பழி தீர்த்தது. அது போலவே, துறவியைக் கொன்ற பாவமும், துறவிகளைத் துன்புறுத்திய தீவினையும் சேர்ந்து, கடம்பனுடைய முடிவையும் இயக்கின. இன்று அந்தத் துறவிகளின் சொல் உண்மையாகி நிற்பதற்குச் சான்றாகத்தான் இந்தத் தீவிலே மறு வாழ்வு மலர்ந்திருக்கிறது. நமக்கும் மறுவாழ்வு உதித்திருக்கிறது!" என்றாள் நீலவல்லி.

வேலவன் கோதை மௌனமாக இருந்தான். அவனுடைய மனம் ஏதோ சிந்தனையில் சென்று செருகி நின்றது. இதைப் பார்த்து நீலவல்லி துணுக்குற்றாள்.

"அன்பே! என்ன இது! திடீரென்று ஏன் இந்த மௌனம்? ஏன் ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர்கள் நீங்கள்?"

வேலவன் கோதை மனத்தை நிலைப் படுத்திக் கொண்டான்.- துயர நினைவிலே சுழன்ற எண்ணத்தை மறுபடியும் பற்றி இழுத்தான். சொன்னான்:

"வல்லி! ஏதோ திடீரென்று ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அப்படியே ஒரு கணம் உடம்பு புல்லரித்தது. இதே கடற் கரையில் அன்றொரு நாள் நீ ஒரு வரலாற்றை என்னிடம் கூறினாயல்லவா, வானமண்டலக் கடம்பன் தங்கப் புதையலுக்காக ஒரு துறவியைத் தனது வாளால் வெட்டி வீழ்த்தினான் என்று! அந்தத் துயர நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அதனால்—"

"அன்பே! அன்று இந்த வெள்ளைத் தீவிலே நடந்த அந்த மாபெரும் துயர நிகழ்ச்சிதானே இன்று இந்தத் தீவின் மறுவாழ்வுக்கு அடிப்படையான காரணம்! தம்மைத் தாமே கடம்பனுடைய வாளுக்கு இரையாக்கிக் கொண்ட அந்தத் துறவிதானே இன்று இந்தத் தீவுக்கும் நமக்கும் புது வாழ்வும் மறு மலர்ச்சியும் அருளி யிருக்கிறார்!" என்றாள் நீலவல்லி.

"ஆமாம். ஆனால் அந்தத் துறவி யார் என்பதையும், எப்படி அவர் அத்தகைய அரிய தியாகத்தைச் செய்தார் என்பதையும் ஒரு விநாடி நினைத்துப் பார்த்தேன். உள்ளம் கலங்கியது" என்றான் வேலவன். அவனுடைய சொற்களிலே மிதந்து வந்த துயரத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் கணவனின் முகத்தையே பார்த்தாள் நீலவல்லி.

"வல்லி! இந்த வெள்ளைத் தீவின் மண்ணிலே கொண்டு தனது அரிய உயிரைத் தியாகம் செய்த அந்தத் துறவி, தமது முந்திய வாழ்விலே ஒரு பெரிய அரச வீரராக விளங்கியவர்! அகப்பா என்னும் நகரத்திலே நடந்த கடும் போரிலே இளைச் சேர மன்னனுக்குத் தானைத் தலைவனாக நின்று மாபெரும் போர் புரிந்து, வெற்றி வாகை சூடிய பெரும் வீரர் அவர்! அந்தப் போருக்குப் பிறகு மன்னன் அகப்பாவைத் தீயிட்டான்! அகப்பா

என்ற அந்தப் பெருநகரம் நெருப்புக்கு இரையாயிற்று. பின்னர் அந்தப் போரின் முடிவு மன்னனுடைய உள்ளத்தில் எதிர்பாராத ஒரு பெரிய மாறுதலைச் சேர்த்தது. அவன் துறவு பூண்டான்! சில நாட்களில் அந்த மன்னனுடைய தானைத் தலைவரும் துறவு மேற்கொண்டு இந்த வெள்ளைத் தீவிலே வந்து குடியேறினார். அவர்தான் வானமண்டலக் கடம்பனுடைய வாளுக்குத் தம்மை உயிர்க்காணிக்கை செலுத்தினார். இப்போது நடந்துள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது, அவர் செய்த அந்தத் தியாகத்தின் விளைவு அவருடைய மகனின் மறு வாழ்வுக்கு அடிகோலியுள்ளது என்பதை உணர்கிறேன். தந்தையைக் கொன்ற கடம்பனை மகன் வந்து பழி தீர்த்துக் கொண்டிருக்கிறான்! மகன் என்று தெரியாமலே இந்தச் செயலைச் செய்திருக்கிறேன் நான்! கொங்குச் சேரர்தான் இந்த வரலாற்றை அண்மையில் எனக்கே சொன்னார். ஊழ்வினை என்பது எப்படியெல்லாம் இயங்குகிறது பார்த்தாயா? அதை எண்ணினேன். உள்ளம் கலங்கியது!''

நீலவல்லி அப்படியே செயலற்று இருந்தாள். தனது வளர்ப்புத் தந்தை தன்னுடைய கொடிய வாளால் வீழ்த்திய துறவி, தன் காதலனுடைய தந்தை என்பதை அறிந்ததும் அந்த அதிர்ச்சி அவள் உடலை உலுப்பியது. அப்போது வேலவன் சொல்லுவான் :

''அன்பே, ஊழ்வினையை விடப் பெரிய வலிமையுள்ள ஆற்றல் இந்த உலகில் வேறு எதுவும் இல்லை. ஆனால் அந்த ஊழையும் அதன் கொடுமையையும் வெல்லக்கூடிய ஒரு பேராற்றலைத் தமிழ் மக்கள் நூறு நூறு ஆண்டுகளாகக் கண்டு தேர்ந்து போற்றி வந்திருக்கிறார்கள். அதுதான் வழிபாடு என்றும், தவம் என்றும் பல பெயர்கள் தாங்கிப் பல மதங்களாகவும், சமயங்களாகவும், பல்வேறு அறநெறிகளிலே இயங்கி வருகிறது. ஊழின்படியே எல்லாம் நடைபெறும் என்பது பேருண்மைதான்! ஆனால் அந்த ஊழையும் வென்று அதன் கொடுமையிலிருந்தும் மனிதர்களுக்கு விடுதலை தரவல்ல இணையற்ற பேராற்றல் கொண்டது, மனிதனுடைய தவமும் அவன் செய்கிற வழிபாடுந்தான்! அதனால்தான், நமது தமிழகத்திலே எத்தனையோ பல ஞானிகளும், சித்தர்களும் தோன்றி, அறச்சாலைகளையும், கோவில்களையும், பள்ளிகளையும், மற்றும் பல வழிபாட்டு நிலையங்களையும் இந்த மண்ணிலே நிறுவியிருக்கிறார்கள்! சமணம் என்றும், சாக்கியம் என்றும், சைவம் என்றும், சிவ வழிபாடு என்றும், திருமால் வழிபாடு என்றும், இன்னும் எத்தனையோ முறைகளிலும், நமது தமிழகத்திலே வழி வழியாக நிலவி வருகிற இறையுணர்வுதான், மனிதனுக்கு நமது தமிழகத்து முனிவர்களும் சான்றோர்களும் வழங்கியுள்ள ஈடற்ற வரம்! அந்த வரத்தைப் பெற்று நாம் உய்ய வேண்டும் என்பதற்காகத்தான் பெரியோர்கள் எத்தனையோ தியாகங்கள் புரிந்து, எவ்வளவோ பாடுபட்டு, வெள்ளைத் தீவைப் போன்ற அமைதியான சூழல்களிலே வழிபாட்டு நிலையங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்! என்னுடைய பெரிய களிப்பும் பேருவகையும் என்னவென்றால், இந்த நல்வழி காட்டும் நிலையங்களின் மறு வாழ்வுப் பணியிலே, நம் இருவரையும் இணைத்து நிறுத்தி இருப்பதும் முனிவர்களின் தவ ஆற்றல்தான்! ஆனால், ஒரு நாட்டின் அரசனுக்குரிய சாதாரணமான ஆட்சிப் பொறுப்பை விட மிகப் பெரும் பொறுப்பு வாய்ந்தது, இந்த அறப்பணி! செவ்வந்தி அடிகளின் உறவு மட்டும் எனக்குக் கிட்டியிரா விட்டால் இத்தகைய பெரும் பொறுப்பை மேற்கொள்ளவே நான் அஞ்சியிருப்பேன். ஏனென்றால், போர்களை வெல்லுவதைவிட மிகவும் கடினமானது, மனத்தின் தீய ஆற்றல்களை வெல்வது! இப்பொழுதும் என்ன எண்ணுகிறேன் தெரியுமோ, செவ்வந்தி அடிகளின் அருளாற்றல்தான் ஒவ்வொரு வினாடியும் நமக்குத் துணையாக நின்று, வழிகாட்டு நிலையங்களுக்கெல்லாம் மறு வாழ்வு தந்து, இந்தத் தீவைப் புதுப்பிக்கும் அறப்பணியிலும் நம்மை வழி நடத்த வேண்டும்!''

கரையை விட்டுச் சற்று மேடான பாறைகளிலே நடந்து, வேங்கை மரத்தின் அடியில் ஆனை படுத்திருப்பது போன்று படர்ந்திருந்த பெரிய பாறையின் அருகே வந்தார்கள் இருவரும். அன்றொரு நாள் அவர்கள் இருவரும் தங்களுக்குள்ளே வழங்கிக் கொண்ட உறுதி மொழிகள் இப்போது நினைவு வந்தன. அப்படியே அந்த இனிய நினைவுகளை மனத்தினுள் அசை போட்டுக் கொண்டே இருவரும் பாறைகளைக் கடந்து சென்று, சாக்கியப் பள்ளிக்கு வெளியே இருந்த மண்டபத்தின் எழிலான படிக்கட்டிலே வந்து நின்றார்கள்.

''வல்லி! இந்தப் படிக்கட்டைப் பார்த்ததும் எனக்கு இந்த இடமே ஒரு மனக் கோவிலாகத் தோற்றம் தருகிறது. இந்தப் படிக்கட்டில் அமர்ந்து தானே நீ நீலக்கல் நாட்டின் நாகனை வாய்ப் பறவைகளை எண்ணிக் கண்ணீர்

வடித்தாய். இந்த இடத்திலேதானே நமது வாழ்வின் சாதனைகளுக்கு ஒரு வேகமான தொடக்கம் ஏற்பட்டது!''

வேலவன் கடலின் அலைகளைப் போல் புரண்ட எண்ணங்களிலே நீந்தினான். அப்போது நிலவல்லி சொன்னாள்:

''அன்பே, கலையும், சோலையும், சமனை முறையும், கல் மன்றமாகக் காட்சி தரும் இந்த வெண்ணிலவுப் பரப்பு முழுவதிலும், நம் இருவருடைய எண்ணங்களை மணலாகக் குவிந்து பரந்து கிடக்கின்றன. இவற்றின் மீது நமது மனம் தனது கால்களைப் பதித்து நடந்து செல்லும் போது, நாம் கடற்கரையிலே நடந்து செல்வதாகத் தோன்றவில்லை! காலம் என்ற பாதையிலே, நிகழ்ச்சிகள் என்ற மணற் திட்டுக்களைத் தாண்டி, எண்ணத் துகள் மீது நடப்பது போலவே தோன்றுகிறது. நிலவுக்கும், கடலுக்கும், மணற் பரப்புக்கும் அத்தனை ஆற்றல் இருக்கிறது! உள்ளத்திலே நினைவுகளைத் தோற்றுவிப்பதும், அவற்றோடு விளையாடுவதும், வெண்ணிலவின் ஒளிக் கரங்களே என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு!''

''வெண்ணிலவைப் பற்றித்தானே சொல்லுகிறாய். அப்படியே ஒப்புக் கொள்கிறேன் ஏனென்றால், வெண்ணிலவையும், நீல வானத்தையும், நீலக் கருங்கடலையும் பற்றிப் பேசக்கூடிய பொருத்தம் வேறு யாரையும்விட உனக்குத்தான் அதிகமாக உண்டு'' என்று சொல்லி நிலவல்லியின் நெற்றியிலே துலங்கிய நீலப் பொட்டை நோக்கிப் புன்முறுவல் செய்தான் வேலவன்.

''வல்லி! உன் தாய் வழியில் நீ நீல நதியாகிய 'நைல்' நதியின் மகள், தந்தை வழியிலோ என்றால் நீலக்கல் நாடாகிய புன்னாட்டு மகள் நீ! ஒன்று கடலின் நீலம்! மற்றொன்று வானத்து நீலம்! இந்த இரண்டுடன் சேர்ந்து பயாறு அம்மையின் அருளிலே தோன்றிய நிலவு மகள் நீ! நிலவப்பன் கோவிலிலே உன் அன்னை உனக்காக வழிபாடு நிகழ்த்தியதை நாம் எப்படி மறக்க முடியும்! வெண்ணிலவும் நீல நெடு வண்ணமும் உனது பிறப்பிலும் வாழ்விலும் இணைந்து. இப்போது வெள்ளைத் தீவையே வெண்ணிலவுத் தீவாக ஒளி வீசச் செய்வதாக வருங்காலத்து வரலாற்று ஆசிரியர்கள் கூறப் போகிறார்கள். அதை நினைக்கும்போது வெள்ளைத்தீவின் அரசி என்பதைவிட, வெண்ணிலவின் அரசி என்றே உன்னைச் சொல்லத் தோன்றுகிறது!''

வானத்திலே சந்திரன் தனது அமுதக் கைகளைக் கொண்டு மூவின் மேனியைத் தழுவியவாறு, அதன் நெஞ்சில் நுழைந்தான்! கடல் அலைகள் வெற்றிக் களிப்பிலே தழுவிப் புரண்டு கூத்தாடின! காற்று ஓர் இனிய பாடலைப் பாடிக் கொண்டே பூங்கொடிகளை முத்தமிட்டுச் சென்றது.

''வல்லி! இந்த உலகில் மனித வாழ்விலே நாம் துய்க்கிற இன்பம் அனைத்தும் தியாகம் என்ற அடிப் படையிலே கட்டி எழுப்பப்படுகிற அரச மாளிகைதான்! வெள்ளைத் தீவின் மறு வாழ்வுக்கு ஒரு துறவியார் பெருமானின் தியாகம் அடிக்கல்லாக நிற்கிறது. தீயிலே எரிந்த ஒரு கோசர் குல நங்கையின் தியாகத்திலே தான், இன்று துளு நாடு உதித்து எழுந்து கொண்டிருக்கிறது. பூஞ்செடி ஒன்று துளிர்க்க அதன் வேருக்கு அடியிலே, எத்தனை தியாகங்கள் நிகழ்கின்றன! அதை எண்ணிப் பார்க்கும்போது உடம்பு சிலிர்க்கிறது!''

இருவரும் பூஞ்சோலைக்கு வந்தார்கள். கரையிலே நின்று அந்த மாம்பழப் புனலை இரு கண்களிலும் பருகினார்கள். துளுநாட்டு மாங்கனியின் நினைவிலே! பிறகு கடலின் கரை ஓரமாக நடந்து கோட்டை வாயிலின் திட்டி வாசலுக்கு வந்தார்கள்.

''அன்பே! அன்றொரு நாள் நள்ளிரவு கடந்த யாமம் வேளையிலே இந்த கரையிலேதான் நீ எனக்கு மயக்கம் தெளிய வைத்தாய்! இன்று இதே கரையிலேதான் நம் உள்ளங்களையெல்லாம் குழப்பி வந்த பகைமை என்ற பெரு மயக்கம் தெளிந்து உறவு பிறந்திருக்கிறது. சேர நாடும் வெள்ளைத் தீவும் இணைந்து நிற்கின்றன. துளு நாடும், புன்னாடும், கொங்கு நாடும் உறவிலே கூடிக் கலந்துள்ளன! கடல் மீது முழு நிலா எழுந்தது போல, நம் அனைவருடைய உள்ளத்திலும் நிலவு உதித்துவிட்டது. தமிழகம் முழுவதும் அன்பும் அறமும் கலந்த ஞானப் பொன்னிலவு எழுந்துவிட்டது. அந்த இன்ப வெண்ணிலவு தந்த பெண்ணரசியின் எழிற் கூந்தலிலே, என்றென்றும் வாடாமல் மணம் கமழ்கிற நீல மலர் வீற்றிருக்கட்டும்!''

அவர்கள் இருவருடைய சந்திப்பின் தொடக்கமே நீல மலர்தானே! இனிய நினைவுகளின் நறுமணம் மனம் முழுதும் நிரம்பிக் கமழும் வண்ணம், வெள்ளைத் தீவு அரசியின் கூந்தலிலே அந்த நீல மலரைச் சூடினான் வேலவன் கோதை!



முற்றும்



அமிர்தாஞ்சனம் தடவி

விரைவில் நிவாரணம் பெறுங்கள்

பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரான அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் மற்றும் மார்புசளி இவைகளிலிருந்து பூரணமாக நிவாரணம் அளிக்கிறது. தசைவலி, தலைவலி, சுளுக்கு இவைகளுக்கும் சிறந்த வகையில் நல்ல குணமளிக்கும் மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால் ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும் • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.



பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.

அமிர்தாஞ்சன் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா - டெல்லி



விந்தை உள்ளம்!

"சாரு"

அது ஒரு புத்தகக்கடை; பழைய புத்தகக் கடை. நான் அங்கிருந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மற்றவர்களைப் போலவே எனக்கும் புத்தகப் பித்து அதிகமாக உண்டு. நல்ல புத்தகங்களைக் கொண்டு வந்து வீட்டில் வைக்க வேண்டும் என்ற ஆசையும் நிரம்ப உண்டு. அப்படியே வீட்டில் இரண்டு அலமாரிகள் நிறையப் புத்தகங்கள் அடுக்கி வைத்திருக்கிறேன். (அவற்றிலுள்ள புத்தகங்களில் பெரும்பாலானவை மற்றவர்களுடையவை என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை! கூடுமானவரை, அதிகப் பணச் செலவு செய்யாமல் புத்தகங்களைச் சேகரிப்பதுதான் என் வழக்கம்).

"என்ன சாமி வேண்டும்?" என்றான் கடைக்காரன்.

"பொறு அப்பா, பார்க்கிறேன்" என்றேன் நான்.

நான் விலைக்கு வாங்கியவற்றில் பெரும்பாலானவை பழைய புத்தகக் கடையில் வாங்கியவைதாம். இத்தகைய கடைகளில் பல குப்பைகளுக்கு நடுவே மாணிக்கம் போல் ஏதாவது ஒரு நல்ல புத்தகமும் இருப்பதுண்டு. அதைத் தேடிப் பிடித்து வாங்கிக் கொண்டு போவேன். இங்கேயும் நெடு நேரம் தேடிய பிறகு, அம்மாதிரி ஒரு புத்தகத்தைக் கண்டேன். அது பிரபல அமெரிக்கக் கவியாகிய வால்ட் விட்மன் எழுதிய "புல்லிதழ்கள்" என்பதாகும். அருமையான புத்தகம். அவசியம் படிக்க வேண்டியது. படிக்காவிட்டாலும் வாங்கி அலமாரியிலாவது வைக்க வேண்டிய புத்தகம்!

கையிலெடுத்துப் பார்த்தேன். அழகிய நவர்ண அட்டை. உறுதியான கட்டடம். கெட்டியான தாள்; பெரிய எழுத்து; சுத்தமான பதிப்பு. பக்கங்களோ முந்நூறுக்கும் மேலிருக்கும். கையில் வைத்துக்கொள்வதற்கு அடக்கமாயிருந்தது. பழைய புத்தகம் என்று அதைச் சொல்லவே முடியாது. பழைய புத்தகக் கடையில் இருந்ததனால்தான் அதைப் பழைய புத்தக வரிசையில் சேர்க்க வேண்டியதாயிருந்ததே தவிர, மற்றப்படி புதுப் புத்தகம்தான். திருப்பித் திருப்பி அதைப் பார்த்தேன். விருப்பமான ஒரு பொருளைப் பார்த்ததும் சிறுவர்களுக்கு எப்படி நாவில் நீர் ஊறுகிறதோ, அதைப் போல எனக்கு அதைப் பார்த்துப் பார்த்து உள்ளத்தில் ஆசை உண்டாயிற்று. எப்படியாவது அதை வாங்கிவிட வேண்டுமென்ற ஆர்வம் எழுந்தது. ஆனால் விலை எவ்வளவு சொல்வானோ? இவ்வளவு நல்ல புத்தகத்தைக் குறைந்த விலைக்குக் கொடுப்பானா? இரண்டு ரூபாய்க்குக் குறைய மாட்டான். அவனை ஏமாற்றிவிட முடியாது.

சட்டைப் பையில் பணம் எவ்வளவு இருக்கிறதென்று பார்த்தேன், இரகசியமாக, கடைக்காரனுக்குத் தெரியாமல். அடாடா, இரண்டு ரூபாய் இருந்தால் நிச்சயமாக அதை வாங்கிவிடலாம். இப்போது என்ன செய்வது? 'சரி, புத்தகம் கிடைக்காது; அவ்வளவு தான் அதிர்ஷ்டம்' என்ற முடிவுக்கு வந்தேன். மறுபடியும் ஒரு முறை அதைப் புரட்டிப் பார்த்தேன். ஒரு கவிதையைப் படித்துப் பார்த்தேன். ஆ. என்ன அருமையான கருத்து! — ஒரு பக்கத்திலாவது ஒரு துளி அழுக்கு இருக்க வேண்டுமே — கிடையாது! அப்போதுதான் அச்சிலிருந்து வெளிவந்தது போலிருந்தது. கையில் பிடித்துப் பார்த்தேன். கனமே இல்லை; தூக்குவதற்கு மிக எளிதாக இருந்தது.

கிடைக்காத ஒரு பொருள் மீதுதான் மனம் அதிகமாகச் செல்லும். இது இயற்கை. என் மனம் அதைச் சுற்றிச் சுற்றி வந்த வண்ணமாயிருந்தது.

என்ன செய்வது? —

வீட்டுக்குப் போய்ப் பணம் கொண்டுவரலாமாவென்று யோசித்தேன். ஆனால், அதற்குள் யாராவது அதை வாங்கிக் கொண்டு போய்விட்டால்?—

"என்ன சாமி, வேணுமா?" என்று கேட்டான் கடைக்காரன். ஏறக் குறைய ஒரு கால் மணி நேரமாவது அந்தப் புத்தகத்தை என் கையிலேயே வைத்துக் கொண்டிருந்திருப்பேன். அதற்கு மேல் பொறுக்க முடியுமா கடைக்காரனால்?

இப்போது எனக்கு ஒரு பயமும் உண்டாயிற்று. இவ்வளவு நேரம் பார்த்துவிட்டு, புத்தகத்தை வாங்காமலோ அல்லது ஒரு விலையாவது கேட்காமலோ போனால் அவன் திட்டுவானல்லவா? — இந்த அநுபவமெல்லாம் எனக்கு உண்டு.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "என்ன விலைக்குக் கொடுப்பாய்?" என்று



ஹொரேஸ் கிரீலியிடம் ஒரு அரசியல் வாதி கூறினார்: "ஐயா! நான் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்த மனிதன்."

ஹொரேஸ் சொன்னார்: "நல்ல காரியம் செய்தீர்! கடவுளை எவ்வளவு பயங்கரப் பொறுப்பிலிருந்து காப்பாற்றிவிட்டீர், தெரியுமா?"

- தகவல் : 'பாணன்'

கேட்டேன். — உண்மையாகவே வாங்கப் போகிறவனைப் போல.

"நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?" என்று கேட்டான் அவன்.

, சிக்கலான நிலைமை! என்னையே பிடித்துக் கொண்டான் அவன். வெகு குறைவான ஒரு விலைக்குக் கேட்டால் அவன் முகத்தைச் சுளித்துவிட்டு, பேசாதிருந்து விடுவான் என்று நினைத்தேன். ஆகையால் "ஒரு ரூபாய்க்குக் கொடுப்பாயா?" என்று கேட்டேன்.

அந்த விலைக்கு அவன் கொடுப்பான் என்ற நம்பிக்கையே எனக்குக் கிடையாது ஆனால் அவனோ யோசிப்பவன் போலக் காணப் பட்டான்.

"சரி, சாமீ, எடுத்துக்கோ!" என்றான்.

எனக்கு ஒரே வியப்பு உண்டாகிவிட்டது. நம்பவே முடியவில்லை. ஒருவேளை எனக்குக் காது சரியாகக் கேட்கவில்லையோ என்று நினைத்து, "என்ன விலை?" என்று சந்தேகம் தீரக் கேட்டேன்.

"நீ கேட்ட விலைக்கே எடுத்துக்கோ" என்றான் கடைக்காரன்.

அப்போதும் என் ஐயம் தீரவில்லை.. "ஒரு ரூபாய்தானே?" என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றான் அவன்.

எப்படியோ எதிர்பாராத முறையில் ஒரு நல்ல புத்தகம் கிடைத்து விட்டதென்று நினைத்தேன். ஆனால்—

மறுவிநாடி அந்த உற்சாகம் குறைந்தது. மகிழ்ச்சி மறைந்தது. "அவசரப்பட்டுவிட்டாயே" என்றது மனம்.

"ஏன்?" என்றேன்.

"இன்னும் கொஞ்சம் குறைத்தே கேட்டிருக்கலாமே" என்றது.

எனக்கும் அது உண்மையாகவே தோன்றியது. இப்படி ஒரு ரூபாய்க்குக் கொடுப்பானென்பது தெரிந்திருந்தால் முக்கால் ரூபாய்க்கே கேட்டிருப்பேன். இப்போது என்ன செய்வது?

புத்தகத்தை மறுபடியும் கையில் எடுத்து வைத்துக் கொண்டு யோசித்தேன்.

"இது என்ன அவ்வளவு முக்கியமான புத்தகமா? வால்ட் விட்மன் என்ன, உலகத்தில் இதுவரை இல்லாத கவியா? மற்றும் பெருங் கவிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, விட்மன் ஒரு சாதாரணக் கவிதான். விலைக்கு வாங்கி நம் வீட்டில் வைப்பதற்குத் தகுதியான அவ்வளவு சிறந்த புத்தகம் அல்ல இது: — ஆம்."

பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். நடுவில் ஒரு கவிதையைப் படித்தேன். இப்போது அதில் ஒரு சிறப்பும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. "இந்த அமெரிக்கர்கள் விளம்பரத்தில் கைதேர்ந்தவர்கள் அல்லவா? ஆகையால் விட்மனை ஒரேயடியாகத் தூக்கி வைக்கிறார்கள். — ஒரு ரூபாய் பெறாது இது."

மேலட்டையைப் பார்த்தேன். அப்படி ஒன்றும் கவர்ச்சியாயில்லை. அட்டையை எடுத்துவிட்டுக் கட்டடத்தைப் பார்த்தேன். உறுதியாயில்லை. உள்ளே பார்த்தேன். எழுத்து, பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களின் உள்ளதைப் போல மெத்தப் பெரிதாக இருந்தது. காகிதத்தைத் தொட்டுப் பார்த்தேன். கெட்டியாய்த்தானிருந்தது. ஆனால் கனம் இல்லை கனம் இல்லாவிட்டால் உறுதி இல்லையென்றுதானே பொருள்?

அச்சு, காகிதம், மேலட்டை, எதுவுமே இப்போது எனக்குப் பிடிக்கவில்லை. எதை வாங்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேனோ, அது இப்போது கிடைத்ததும், என் மனம் அதிருப்தியே அடைந்தது.

"என்ன சாமி, யோசனை?" என்றான் கடைக்காரன்.

"கொஞ்சம் பொறு, அப்பா!" என்றேன் தலையைச் சொறிந்து கொண்டு. இப்போது 'வேண்டா'மென்று புத்தகத்தைக் கீழே வைத்தால் கடைக்காரன் நிச்சயமாகத் திட்டாமல் விடமாட்டான். இந்தச் சங்கடமான நிலைமையிலிருந்து எப்படித் தப்புவது என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோது வேறு ஒருவர் புத்தகம் வாங்க அங்கு வந்தார். அவர் என் கையிலிருந்த புத்தகத்தைக் கண்டதும், ஆவலாய் அதை வாங்கிப் பார்த்தார். "கடவுளே, என்னைக் காப்பாற்று வாயா?" என்று நான் ஆண்டவனை வேண்டினேன்.

அவர் அந்தப் புத்தகத்தைக் காட்டி, "இது என்ன விலை அப்பா?" என்று கடைக்காரனைக் கேட்டார்.

"ஒன்றரைரூபாய் சாமி!" என்றான் அவன்.

சட்டைப் பையில் கையை விட்டார் அவர். பணத்தைத் தூக்கி அவனிடம் கொடுத்துவிட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

"அடாடா, விட்டு விட்டாயே ஓர் அரிய சந்தர்ப்பத்தை!" என்றது என் மனம்.

வாயில்கள்

வனப்புடன் விளங்க விரும்பு
வோருக்கென்றே, கண்கவரும்
கோலங்களிலும், பெண்மையழகு
திகழும் வண்ணங்களிலும்
பொலியும் வாயில் சேலைகளைப்
பல்வேறு தினுசுகளிலே தயாரிக்
கின்றனர் டாடா டெக்ஸ்டைல்ஸ்
எங்கள் இதர துணிவகைகளில்
சில: கவர்ச்சிகரமான ப்ரிண்டுகள்,
நேர்த்தியான பாப்லின்கள்,
குளுமையான லான்கள் மற்றும்
கேம்ப்ரிக்குகள், கச்சிதமான
செக்குகள், ஸ்கார்ப்கள்,
கைக்குட்டைகள்.

எவருக்கும் கட்டுபடியாகும்
வகையில் பலதரப்பட்ட
துணிவகைகளை அளிக்கிறது
டாடா டெக்ஸ்டைல்ஸ்.

TATA *Textiles*

சில்லறை விற்பனைக் கடைகள்:
30, ரூப்ளே ஸ்ட்ரீட், புதுச்சேரி.

சில்லறை ஸ்டாக்கிஸ்டுகள்:
"பாணி கார்ப்பொரேஷன்",
நேத்தாஜி சுபாஷ் ரோடு, சென்னை.



ULKA-TT-71 M



சிவசாமி ஒரு முறைக்கு இரு முறையாகக் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு, கண்ணாடியையும் மாட்டிக் கொண்டு பார்த்தார். ஊஹூம்; அப்போதும் மாறுதல் எதுவுமில்லை. அவர் கையில் பிடித்திருந்த ஓலைச்சுவடியில் காணப்பட்ட ஒரு வாசகம் முன்னைவிட இப்போது பளிச்சென்று தெரிந்தது.

''அரிசியிலிருந்து நெய் கிடைக்கும்!''

என்ன புரட்சிகரமான புதுமையான தகவல்! சும்மாவா சொன்னார்கள், நம் முன்னோர்கள் சகலமும் உணர்ந்த மகாமேதைகள் என்று? ஒவ்வொருத்தரும் தங்கள் மேதாவிலாசத்தை யெல்லாம் ஓலைச்சுவடிகளில் பதித்து விட்டுப் போயிருக்கிறார்களே! அதுவும் இந்தப் பூசணிக்காய்ச் சித்தர் பெரிய மேதை போலிருக்கிறது.




இல்லா விட்டால் இப்படியொரு பெரிய விஷயத்தை எழுதி வைத்து விட்டுப்போயிருப்பாரா...? 'சரஸ்வதி மகாலிலிருந்து நாம் நூறு ரூபாய்க்கு ஏலம் எடுத்து வந்த ஓலைச்சுவடியில் இந்த ரகசியம் இருப்பது நம்முடைய அதிர்ஷ்டந்தான்' என்று எண்ணிய சிவசாமி, அந்தப் பூசணிக்காய்ச் சித்தர் அரிசியிலிருந்து நெய் தயாரிப்பது எப்படி என்று சொல்லி யிருக்கிறாரா என்று பார்க்க ஆவலுடன் சுவடியைப் புரட்டினார். என்ன துரதிர்ஷ்டம்! 'உணவு பதார்த்த சிந்தாமணி' என்ற பெயர் தாங்கிய சுவடி முடிந்து போயிருந்தது.

சிவசாமி மனம் தளரவில்லை. நாமறிந்த ஒரு விஷயம் நாடறிய வேண்டாமா என்று உடனடியாகப் பத்திரிகைகளில் 'ஆசிரியர் கடிதப்' பகுதிக்கு எழுதினார். ''வெண்ணெயின் விலையும் நெய்யின் விலையும் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே வருவதைச் சுட்டிக் காட்டி 'சித்தர் சொன்னபடி அரிசியிலிருந்து நெய் கிடைக்குமானால் ஏன் அந்தத் துறையில் நாம் ஆராய்ச்சியை மேற்கொள்ளக் கூடாது....? கோழி வளர்ப்புக்கும், வாத்துப் பண்ணைகளுக்கும் கோடி

அரிசியிலிருந்து...

கோடியாகப் பணத்தைச் செலவிடும் அரசாங்கம், இந்த ஆராய்ச்சிக்கென ஏன் லட்ச ரூபாய் ஒதுக்கக்கூடாது?' என்றும் கேட்டு வைத்தார்.

அவருடைய கடிதத்தைத் தொடர்ந்து மேலும் சில கடிதங்கள் பிரசுரமாயின. அவையும் அந்த ஆராய்ச்சித் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வரை ஒத்திப் போடப்படாமல் உடனடியாக மேற்கொள்ளப் பட வேண்டுமென வலியுறுத்தின.



அரசாங்கம் மெல்ல விழித்துக் கொண்டது. விழித்துக் கொண்டதும் முதல் காரியமாகச் சிவசாமியிடமிருந்த ஓலைச்சுவடியைப் பறித்து அரசாங்க உடைமையாக்கியது. பிறகு நிபுணர்கள் கோஷ்டி ஒன்றை நியமித்து, பூசணிக்காய்ச் சித்தர் சொன்னது உண்மைதானா என்று ஆராய்ந்து பார்க்கும் படி உத்தரவிட்டது.

நிபுணர்கள் கோஷ்டியைச் சேர்ந்த எட்டுப் பேர்களில் இருவரைத் தவிர மற்றவர்க

னெல்லோரும் சித்தர் சொன்னது உண்மையாக இருக்க லாம் என்று அபிப்பிராயம் கூறவே, மேலும் ஆராய்ச்சிகள் நடத்தும்படி உணவு ஆராய்ச்சிக் கழகத்தைக் கேட்டுக் கொண்டது அரசாங்கம்.

அரிசியில் ஏகப்பட்ட வகைகள் இருக்கின்றன; அதிலே எந்த வகை அரிசியிலிருந்து நெய் கிடைக்கும் என்று சித்தர் சொல்லவில்லையாதலால் பாகமதி முதல் ஆடுதுறை 27ம் நம்பர்வரை ஒவ்வொன்றாகப் பரிசோதனை செய்து பார்த்து விடுவதென்று உணவு ஆராய்ச்சிக் கழகம் முழுமூச்சுடன் முனைந்தது. இதற்குள் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன.

திடீரென்று ஒரு நாள் லோக் சபாவில் தமிழக அங்கத்தினர் ஒருவர் வழக்கப்படி அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது இந்த விவகாரத்தையும் பிரஸ்தாபித்து வைத்தார். "இந்தத் திட்டம் உருப்பெறுமானால் அரிசி அதிகமாக விளைகின்ற தமிழகத்திலேயே அரிசி நெய் தயாரிப்பு ஆலை ஒன்றை நிறுவ அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்..." என்று வேண்டுகோள் விடுத்த அவர், "அந்த ஆராய்ச்சி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன். கனம் உணவு அமைச்சர் புள்ளி விவரங்களுடன் பதில் தருவாரா?" என்று கேள்வியொன்றையும் போட்டு வைத்தார்.

அரிசியும் நெய்யும் உணவுப் பொருள்களேயானாலும் இந்த ஆராய்ச்சி விஷயம் விஞ்ஞானத் தொழிலியல் மந்திரி சம்பந்தப்பட்டது என்று உணவு மந்திரி பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டார். அப்புறம் ஒரு வழியாக விஷயத்தைக் கறந்தார்கள். ஆராய்ச்சி பாதிதான் முன்னேறியிருக்கிறதென்றும், அதற்கெனச் செலவிடப்பட்ட தொகை தொண்ணூற்றிரண்டு லட்ச ரூபாய் என்றும் தகவல் கிடைத்தது. மேலும் நடைபெற்ற விவாதத்தின் போது கேட்கப்பட்ட சில ரசமான கேள்விகளும், பதில்களும்:

ஒருவர்: "அரிசி—நெய் தொழிற்சாலை பொதுத் துறையில் நிறுவப்படுமா? அல்லது கொள்ளை லாபம் சம்பாதிக்கக் கூடிய வகையில் தனியார் துறைக்கே விடப்படுமா?..."

அமைச்சர்: "தேர்தல் கூட்டு மாதிரியா?" (சிரிப்பு)

இன்னொருவர்: "நம்மை விட மேலை நாடுகள் விஞ்ஞானத்திலும் வேளாண்மையிலும் எவ்வளவோ முன்னேறியிருக்கின்றன ...... பார்லிமெண்டுக் குழுவோ அல்லது நிபுணர் குழுவோ அந்த நாடுகளுக்கு விஜயம் செய்து அங்கே இதே போல ஆராய்ச்சிகள் ஏதாவது மேற்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்து விட்டு வரலாமே?...."

அமைச்சர்: "இந்த விஷயத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்...."

அரசாங்கம் பரிசீலித்த பிறகு, நிபுணர் குழு அப்படி விமானத்தில் ஏறியதென்றால், இப்படி ஒரு கோஷம் கிளம்பி

..நெய்!

முகுந்தன்



இன்னொருவர்: "கனம் அங்கத்தினர் தனியார் துறையை மிகவும் இழிவாகக் கருதுகிறார்போலிருக்கிறது... ஒன்று மட்டும் நிச்சயம்: தனியார் துறையானால் லாபம் கிடைக்கும்; பொதுத் துறையானால் நஷ்டக் கணக்கைத் தவிர வேறென்னத்தைப் பார்க்க முடியும்?.... ஜூர்க்கேலாவும், எச். எம். டி.யும் சந்தி சிரிக்கிற விவகாரம் நமக்குத் தெரியாதா ?....."

மூன்றாமவர்: "கனம் அமைச்சரவர்கள் முதலில் கேட்கப்பட்ட கேள்விக்கு விடை பளிக்குமாறு வேண்டுகிறேன்....."

அமைச்சர்: "இன்னும் நிச்சயதார்த்தமே ஆகவில்லை. அதற்குள் குழந்தைக்குப் பெயர் வைக்க என்ன அவசரம்?" (சபையில் சிரிப்பு)

முதல் நபர்: "இருந்தாலும் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்று தெரியலாமல்லவா ?...."

நான்காவது ஆசாமி: "நாமாக முயன்று பார்ப்பதை விட யாருடனாவது கூட்டு சேரலாமே?...."

யது இங்கே: "எங்கள் வயிற்றில் நெய் வாருங்கள் !" கோஷமிட்டவர்கள்: வெண்ணெய், நெய் வியாபாரிகள்.

''ஏற்கனவே வனஸ்பதியையும் அது போன்ற தாவர நெய்களையும் கொண்டு வந்து எங்கள் வயிற்றில் அடித்தீர்கள்.... இப்போது அரிசியிலிருந்து வேறு நெய் தயாரிக்க ஆரம்பித்து விட்டால் அப்புறம் எங்கள் கதி என்ன ஆவது....?'' என்று அவர்கள் முறையிட்டார்கள்; வேண்டுகோள் விடுத்தார்கள்; மனுக் கொடுத்தார்கள்; தூதும் சென்றார்கள்.

''அதனாலென்ன?.... சோப்பு வந்ததால் சீயக்காய்ப் பொடி வியாபாரம் குறைந்து போய் விட்டதா?.... சீயக்காய் வியாபாரிகள் எல்லோரும் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு போய்விடவில்லையே? இந்த வியாபாரிகள் விற்பதெல்லாம் நெய் அல்ல; பொய்!'' என்று சிலர் எதிர்வாதம் செய்து அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள்.

'இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் அப்புறம் எங்கே நம் வியாபாரம் படுத்துவிடுமோ' என்று அஞ்சிய வியாபாரிகள் வெண்ணெய்—நெய் விலையை மடமடவென்று உயர்த்தினார்கள். ஜனங்களும் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வெண்ணெயும் நெய்யும் கள்ளச் சந்தைக்குள் நுழைந்தன.

அரசாங்கம் சும்மா இருக்குமா, பார்த்துக் கொண்டு?.... 'வெண்ணெய்—நெய் கண்ட்ரோல் ஆர்டர்' ஒன்றைப் பிறப்பித்தது. அத்துடன் அவை இரண்டுக்கும் ரேஷன் முறையையும் கொண்டு வந்தது. ஓர் ஆளுக்கு ஒரு வேளைக்கு ஒரு டீஸ்பூன் நெய் வீதம் கணக்கிட்டு, ரேஷனை அமுல் நடத்தியது.

வெண்ணெய் விலை ஏறியதென்றால், பால் விலை ஏறாமலிருக்குமா?.... அதுவும் ஏறியது. அதைத் தொடர்ந்து வைக்கோல், பிண்ணாக்கு முதல் பால் பவுடர் வரையிலும் எல்லாமே உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டன.

வெளிநாட்டுக்குப் போன குழு திரும்பி வந்தது. ''அங்கே நன்றாகப் பார்த்து விட்டோம்.... இது மாதிரி அவர்கள் கேள்விப்பட்டதே இல்லையாம்.... இது அவர்களுக்கு ஒரு புதுமையாக இருக்கிறதாம்....'' என்று அறிக்கை சமர்ப்பித்தது.

''நம் நாடே புதுமைகள் நிறைந்ததுதானே? உலகிலே எங்கே இவ்வளவு பெரிய ஜனநாயக நாடு இருக்கிறது?.... எங்கே இவ்வளவு அழகாக ஜனநாயக சோஷலிஸம் அமுல் நடத்தப்படுகிறது?.... எங்கே இப்படி ஓர் ஒருமைப்பாடு நிலவுகிறது?'' என்று பிரதம மந்திரி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

பால் விலை ஏற்றத்தினாலும், பால் பற்றாக் குறையினாலும் பச்சிளங் குழந்தைகள் பாடு திண்டாட்டமாகப் போயிற்று. காப்பி என்கிற அசுரப் பழக்கத்துக்கு அடிமையாகி விட்டிருந்தவர்களின் நிலைமை அவலமாயிற்று.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை இப்படிக் கஷ்டப்படுவதை மேலுலகிலிருந்து பார்த்துக் கண்ணீர் விட்டார் ஒருத்தர். அவர்தான் பூசணிக்காய்ச் சித்தர்.

''அடே, சிஷ்யா!'' என்று கூப்பிட்டார். சிஷ்யன் புடலங்காய்ச் சித்தன் ஓடோடி வந்து கைகட்டி, வாய் பொத்தி நின்றான்.

''எத்தனை தடவை உனக்குப் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன், நான் சொல்வதைச் சுவடியில் எழுதும்போது கவனமாக இருக்க வேண்டும் என்று? 'அரிசியிலிருந்து **'நொய்'** கிடைக்கும்' என்று சொன்னால் நீ தப்பும் தவறுமாக **'நெய்'** கிடைக்கும் என்று எழுதி வைத்திருக்கிறாயே?...நீ செய்த தவற்றினால் பூலோக மக்கள் படுகிற கஷ்டத்தைக் கண் திறந்து பாரடா மடையா!...'' என்றார்.

''மன்னிக்க வேண்டும் குருநாதா.... நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக....''

''நீ புருப்-ரீடராகப் போகக் கடவது!'' என்று சபித்தார் பூசணிக்காய்ச் சித்தர்.

மன்னருக்கும் சம்பள உயர்வு!



பாரதத்தில் மாஜி மன்னர்களுக்குத் தரப்படும் ராஜ மானியத்தை நிறுத்தி விட வேண்டும் என்று சில காங்கிரஸ்காரர்கள் ஒற்றைக் காலில் நின்று வருகிறார்கள் அல்லவா? இந்தச் சமயத்தில் பெல்ஜியத்திலிருந்து வரும் ஒரு செய்தி சுவாரசியமானது.

பெல்ஜிய மன்னர் குடும்பத்தினர் அனைவரும் தங்களுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர், விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி. மாஜி மன்னர் லியோபோல்டு இப்போது ஆண்டொன்றுக்கு 130,000 டாலர்கள், வரி நீங்கலாகப் பெற்று வருகிறார். இவர் இன்னும் 12,000 டாலர்கள் அதிகமாகத் தேவை என்று கோரியுள்ளார்.

அவரது மகனும் இன்றைய மன்னருமாகிய பௌடோயின் 2,250,000 டாலர்கள் ஆண்டொன்றுக்குப் பெற்று வருகிறார். இவர் விலைவாசி உயர்வுக்கு ஏற்பத் தமக்கு 'போனஸ்' தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்! இவரது தம்பி ஆல்பர்ட் அதிகப்படியாக 60,000 டாலர்கள் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

இந்தக் கோரிக்கையை பெல்ஜியம் பாராளுமன்றம் கவனித்து ஆவன செய்ய வேண்டும். மாஜி மன்னர் லியோபோல்டின் கோரிக்கையைத் தவிர மற்றச் சம்பள உயர்வுகளைப் பாராளுமன்றம் அங்கீகரித்துவிடுமென்றே நம்பகமாகத் தெரிகிறது.

— இன்பா

உங்கள்

சேமிப்பு விரைவில் வளர...

சென்னை மாநில கூட்டுறவு வங்கி பலவகையான சேமிப்புத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. சிறிய அளவிலானாலும் சீக்கிரமே ஒரு கணக்கை ஆரம்பியுங்கள்

சேமிப்புத் திட்டங்களின் விவரங்கள் :

பிக்ஸட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும்

				வருடத்துக்கு
91 நாட்களும்	அதற்கு மேலும்	6	மாதங்களுக்குள்	5 %
6 மாதங்களும்	,,	12	,,	5½%
12 மாதங்களும்	,,	2	வருடங்களுக்குள்	6¼%
2 வருடங்களும்	,,	3	,,	6½%
3 வருடங்களும்	,,	5	,,	6¾%
5 வருடங்களும்	,,	7	,,	7¼%
7 வருடங்களும்	அதற்கு மேலும்		—	7½%
ஸேவிங்ஸ் பாங்க் டெபாஸிட்டுகள்			—	4 %

M.S.C. வங்கியின் ரெக்கரிங் டெபாஸிட்டுகளின் திட்டம் மிக லாபகரமானது



விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள M. S. C. வங்கியின் கிளை அலுவலகத்தில் விசாரியுங்கள்

இது உங்கள் வங்கி

சென்னை மாநில கூட்டுறவு வங்கி லிட்.

271, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை - 1

THE MADRAS STATE CO-OPERATIVE BANK LTD.

271, Angappa Naik Street, Madras-1.



‘‘ஸார், உங்களுக்கு ஒரு இன்விடேஷன்!’’ என்று குதூகலமாகக் கூறிக் கொண்டே பூமா ஓர் உறையை நீட்டியதும் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

‘‘பேஷ்.... என்னவோ பெரிய இவள் மாதிரி இன்னும் ஐந்து வருஷங்களுக்குக் கல்யாணப் பேச்சையே எடுக்காதீர்கள் என்று உன் அப்பாவிடம் வீரம் பேசிக் கொண்டிருந்தாயே, எல்லாம் தவிடு பொடிதானா?’’ என்று கேலியும் மகிழ்ச்சியுமாய்க் கேட்டேன்.

‘‘இது கல்யாண அழைப்பு இல்லே, ஸார். எங்கள் த. எ. சங்கத்தின் ஆண்டு விழா அழைப்பு!...’’

அந்தச் சங்கத்தின் பெயரை எப்போதோ கேட்ட மாதிரி இருந்தது எனக்கு. அதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டால் ஒரு சொற்பொழிவையே நிகழ்த்தி என்னைத் திக்குமுக்காடச் செய்துவிடுவாள், பூமா. எனவே, பொதுவாக, ‘என்றைக்கு விழா?’ என்று கேட்டு வைத்தேன்.

‘‘அதைப் பிரித்துத்தான் பாருங்களேன்.’’

பிரித்தேன். அழைப்பிதழின் தலைப்பில் ‘தகவல் எழுத்தாளர் சங்கம்’ என்றிருப்பதைக் கண்டதும், பூமா அவ்வப்போது சொல்லிவந்த பற்பல தகவல்கள் நினைவுக்கு வந்தன. ‘‘நீகூட அந்தச் சங்கத்தில் அங்கத்தினர் இல்லையோ?’’

‘‘ஐயோ, ஐயோ! என்னைக் கொன்று விட்டீர்களே, ஸார்!.... நான்தான், தகவல் எழுத்தாளர் சங்கத்தின் ஜீவ நாடி. தற்சமயம் அதன் உதவிச் செயலாளர்!’’

‘‘ஆமாம், ஆமாம்!...மறந்தே போய் விட்டேன், குழந்தை!... காரியதரிசி யார்? — பூபாலன் என்று போட்டிருக்கிறது?’’

‘‘அவர்தான்!....: த. எ.சங்கத்துக்குச் செயலாளராக இருக்கப் பூரணத் தகுதி பெற்றவர். உங்கள் வீட்டுக்குத்தான் ‘சோலை’ வருகிறதே? அந்தப் பத்திரிகையில் வாரம் தவறாமல், பூபாலனின் தகவல்கள் பிரகரமாகின்றன.’’

‘‘அப்படியா?’’

‘‘அவர் ரொம்பப் பிரபலமான தகவல் எழுத்தாளர். எத்தனை புத்தகங்களைப் படிக்கிறார்! எத்தனை பேச்சுக்களைக் கேட்கிறார்! உள்ளத்தைத் தொடும் சோக நிகழ்ச்சியிலிருந்து வயிற்றைப் புண்ணாக்கும் ஹாஸ்யம் வரை ஒன்றுவிடாமல் எழுதி வருகிறார்!’’

‘‘நீயும்தான் எழுதுகிறாய். இன்றைக்குக் காலையில்கூட ‘அவள்’ ஒரு பத்திரிகையைக் கொண்டு வந்து காட்டினாள் — பொடி எழுத்தில் அரைப் பத்தி. கீழே, ‘தகவல்: பூமா’ என்று போட்டிருந்தது.’’

‘‘ஓஹோ! ‘குத்துவிளக்கில்’ பிரகரமானதைச் சொல்கிறீர்களா?.... நான் வருகிறேன், ஸார். ஆண்டு விழா ஞாபகம் இருக்கட்டும்!’’

துள்ளிக் கொண்டு ஓடிவிட்டாள், பூமா. அதிகமாகப் போனால், பதினெட்டு வயதிருக்கும். அண்டை வீடு. அப்பா ஒரு டாக்டர். வசதியான குடும்பம். பி. யூ. ஸி.யில் ஒரு மாதிரியாகத் தேறி விட்டாள் பூமா. அதற்கப்புறம் ‘அவ்வளவுதான்’ என்று சொல்லி விட்டாள். அவள் அம்மாவுக்கு அழுகையாக வந்தது. ‘பூமா பி. எஸ்ஸி.’ என்று



‘அபர்ணா’

வது போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படாதோ, ஒரு பெண்? காலேஜில் இடம் கிடைக்காதா, இடம் கிடைக்காதா என்று ஆலாய்ப் பறக்கிற காலத்தில், 'அம்புஜு, உன் பெண் மட்டும் மேலே படிக்கிறேன் என்று சொல்லட்டும். இந்த ஊரில் உள்ள ஒவ்வொரு காலேஜிலும் ஒவ்வொரு ஸீட் தரச் சொல்கிறேன்' என்று தன் கணவன் கூறியதைக் கேட்ட பின், அந்த அம்மாளின் அங்கலாய்ப்புக்கு அளவே யில்லை. என்றாலும் என்ன செய்ய? பூமா மறுத்து விட்டாள். 'முதலில் படிப்பில் எனக்கு விருப்பமில்லை. அடுத்தபடி உன் ஆசாரத் திட்டங்களுக்கு என்னால் உட்பட முடியவில்லை. தினமும் சாயங்காலம் கல்லூரி விட்டு வந்ததும், குளியலறையில் குளித்துவிட்டுத் தான் வீட்டுக்குள் நுழைய வேண்டும் என்கிறாய். ஒரு நாளைப் போல என்னால் ஸ்நானம் செய்து கொண்டிருக்க முடியாது!' என்று ஆணி யடித்தாற் போலச் சொல்லிவிட்டாள்!

சரி. படிப்பை நிறுத்தியாயிற்று. பொழுது போவதற்கு என்ன பண்ணுவது? புத்தக சாலைக்குச் சந்தாக் கட்டினாள். என் வீட்டுக்குள்ளும் நுழைந்து ஒவ்வொரு பீரோவாகக் குடைய ஆரம்பித்தாள். 'பணத்தைக் கொட்டிப் புத்தகம் வாங்குவார்களா?' என்று கேட்டுக் கொண்டிருந்தவள், இப்போது ஒரு நாளைக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் தீர்த்துக் கட்டத் தொடங்கினாள். இது போதாதென்று, மாலை தவறாமல் சொற்பொழிவுகளுக்குப் போக ஆரம்பித்தாள். சமயம், இலக்கியம், அரசியல் — எந்தச் சொற்பொழிவாயிருந்தாலும் சரிதான்.

"நான் தவறாமல் சொற்பொழிவுக்குப் போகிறாயாமே?" என்று ஒரு நாள் பூமாவைக் கேட்டேன்.

"எல்லாம் காரணமாகத்தான், ஸார்! இப்போது நான் ஒரு தகவல் எழுத்தாளர்!"

"என்னமோ, புதுப் பெயராக இருக்கிறதே?"

"எக்ஸாக்ட்லி. புதுப் பெயர்தான்! இந்த அவசர யுகத்தின் புதிய படைப்பு!.. அநேக புத்தகங்களிலிருந்தும், அநேக சொற்பொழிவுகளிலிருந்தும், சுவையான தகவல்களைச் சேகரித்துப் பத்திரிகைகளுக்கு விநியோகம் செய்கிறோம்!"

"இப்போது நீ எனக்கு இந்தத் தகவலை விநியோகம் செய்திருக்கிறாய்!"

சில நாட்கள் கழித்து என்னைத் தேடிக் கொண்டு வந்தாள் பூமா.

"உங்களுக்கு இன்னொரு தகவல் கொடுக்கப் போகிறேன்!"

"கொடேன்! கிடையாகி வீட்டோடு கிடக்கும் எனக்கு வெளியுலகச் செய்திகளை நீ கொடுத்தால்தான் உண்டு...."

"பூபாலனைத் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாதே."

"என்ன ஸார், நீங்கள்? — பூபாலனைத் தெரியாது என்கிறீர்களே!.... பூங்குடி பூபாலன்தான் தமிழ்நாட்டில் தலைசிறந்த தகவல் எழுத்தாளர்."

"ஓஹோ...."

"போன மாதம் அவரைப் பார்க்கும் படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அமிர்தானந்தவாரியாரின் இராமாயணச் சொற்பொழிவில் அவரைக் கண்டேன். அறிமுகம் ஆனவுடனேயே நண்பர்களாகி விட்டோம். அவரும், வாரியாரின் சொற்பொழிவிலிருந்து தகவல் சேகரிக்கத்தான் வந்திருந்தாராம்! அப்புறம் கேட்க வேண்டுமா? அன்றைக்குப் பொறுக்கிய தகவல்களை ஆளுக்குப் பாதியாகப் பகிர்ந்துகொண்டோம். இரண்டு நாட்கள் சென்று ஐ. வா. இ.யின் சொற்பொழிவுக் கூட்டத்தில் சந்தித்துக் கொண்டோம்...."

"இப்படி ஏற்பட்ட சந்திப்புக்களின் பயனாக...."

"தேவலையே, உங்களுக்குக் கூடப் பேச்சைக் 'கட்' பண்ணத் தெரிகிறதே!...சந்திப்பின் பயனாக, 'தகவல் எழுத்தாளர்



சங்கம்' என்று ஒரு சங்கத்தைத் தொடங்கலாம் என்று முடிவாயிற்று. இந்திராணி குமாரன், காங்கேயன், சைலஜா மணாளன் போன்ற தகவல் எழுத்தாளர்களும் உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள்...''

''வெரி குட்!....''

த. எ. சங்கம் என்ன நிலைமையில் இருந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. பூமாவும் சொல்லவில்லை. ஆனால் பூமா — பூபாலன் இடையே ஏற்பட்ட இடைவிடாத சந்திப்புகளின் பயனாக இதயங்கள் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன என்பது எனக்குத் தெளிவாகி விட்டது. பூமாவுக்குப் புத்திமதி சொல்வது என் கடமையாகப் பட்டது.

''பூமா! உனக்கு ஏற்றவன் இல்லை, அந்தப் பையன்'' என்று சொல்லி விட்டேன்.

''அது எப்படி...? அவருக்கு என்ன அழகில்லையா? குணமில்லையா? வேலையில்லையா?''

''வேலை இருக்கிறது, பூமா. உன் அப்பா மாப்பிள்ளையாக்கிக் கொள்கிற வேலை இல்லை! வெறும் டைப்பிஸ்ட்!''

''அதனாலென்ன?... பொருளாதார ஏற்றத் தாழ்வு எங்களுக்குக் குறுக்கே நிற்காது. நாங்கள் இருவரும் தகவல் எழுத்தாளர் சமுதாயத்துக்கே மணிவிளக்காய்த் திகழ்வோம். இருவரும் சேர்ந்து தகவல் எழுத்தாளர்களின் மேன்மைக்காகப் போராடுவோம். தகவல் எழுத்தாளர்கள், இன்றைய தலைமுறையினரால் அலட்சியப்படுத்த முடியாதவர்கள் என்பதை விளக்குவோம்!''

''அடேயப்பா!''

''த. எ.க்களின் இன்னல்களை அரசாங்கத்துக்கு எடுத்துரைப்போம். பொதுக் கூட்டங்களில் த. எ.க்களுக்குத் தனியிடம் ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்போம். லைப்ரரிகளில் த. எ.க்களுக்குத் தனிச் சலுகை வேண்டும் என்று தூது போவோம்.''

அவள் பேச்சில் உணர்ச்சி ஏறிக்கொண்டே வந்தது. அதை அணை போட்டுத் தடுக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, ''ஜமாய்!'' என்று ஒரு வார்த்தையில் முடித்துக் கொண்டேன்.

பின்னர், ஒரு நாள் என் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தேன். பூமாவும் வெளியே போகத் தயாராக வந்து நின்றாள்.

''உன் உத்தியோகத்துக்குப் புறப்பட்டு விட்டாயாக்கும்!''

''ஆமாம்.. மைதானத்தில் மந்திரி பேசுகிறார்.''

''பேச்சைக் கேட்கப் போகிறாயா? இல்லை, பூபாலனைப் பார்க்கப் போகிறாயா?''

''போங்க, ஸார்!''

''பேச்சு முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பி விடுவாயா?''

''இல்லை, நேரே பீச்சுக்குப் போவோம்!''

''அங்கே போய், பட்டாணியை வாங்கிப் பங்கு போட்டுக் கொள்ளுகிற போதே மந்திரியின் பேச்சில் சேகரித்த தகவல்களையும் பங்கு போட்டுக் கொள்வீர்கள்!''

''இப்பவெல்லாம் அப்படிச் செய்கிற இல்லை.... இந்தச் சொற்பொழிவு எனக்கு என்றால், அடுத்தது அவருக்கு. அப்படி ஓர் உடன்படிக்கை!.... பீச்சில் உட்கார்ந்து கொண்டுதான் எங்கள் த. எ. சங்கத்தின் முன்னேற்றம் குறித்து ஆலோசனைகள் நடத்துவோம். சில நாட்களில் 'சங்கரப் பிரியா'வும் கலந்து கொள்வாள்.''

''யார் அது, 'சங்கரப் பிரியா'?''

''அவளும் ஒரு தகவல் எழுத்தாளர். சும்மா கத்துக்குட்டி. கொஞ்ச நாட்களாகத் தான் எழுதுகிறாள். அதற்குள் என்ன கர்வம் என்கிறீர்கள்? தனக்கு மிஞ்சி யாருமில்லை என்று நினைப்பு. வாத்தியார் வீட்டுப் பெண். பெரிய நடிகை மாதிரி, படா ஸ்டைல்.... த. எ. சங்கமே தன்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறது என்கிற மாதிரிதான் பேசுவாள்.... ஒவ்வொரு பத்திரிகை ஆபீஸிலும் அவள் காலொடிய ஏறி இறங்குவது எனக்கல்லவா தெரியும்?''

''ஏன், ஆபீசுக்குப் போகிறாள்?''

''ஏன்?... உதவி ஆசிரியர்களைக் காக்காய் பிடிக்கத்தான்!...ஆள் பார்ப்பதற்குக் கொஞ்சம் 'இது'வாய் இருக்கிறாளா, ஆபீசில் எல்லாரும் பல்லைக் காட்டுகிறார்கள்... அவள் எழுதுகிற சொத்தைத் தகவல்களை எந்த வாசகன் படிக்கிறான்?.... நேரமாச்சு ஸார். நான் வரேன்.''

''ரொம்ப 'பிஸி' போலிருக்கிறது. ஒரு வாரமாய் வீட்டுப் பக்கமே உன்னைக் காணவில்லை?'' என்றேன், தெருவோடு போய்க் கொண்டிருந்த பூமாவை நிறுத்தி.

''அப்படி யொன்றுமில்லை.''—சுரத்தில்லாமல் பதில் வந்தது.

''சும்மா சொல்லாதே. நாளைக்குத்தானே உங்கள் த. எ. சங்கத்தின் 'அனிவர்ஸரி'?''

பூமா அருகே வந்தாள். ''ஆன்யுவல் வெரிமனி'' என்று சொல்லுங்கள்...''

''அட ராமா!... மிஸ்டர் பூபாலன் காதில் விழுந்தால்....''

''விழுந்தால்? என்ன செய்வார்? மான நஷ்ட வழக்குப் போட்டுவிடுவாரோ?''

''என்ன கோபம் அவர் மேல்?''

''பின்னே என்ன ஸார்?... மனிதனுக்கு நேர்மை வேண்டாம்?... ஒரு குறிப்பிட்ட தகவலை, குறிப்பிட்ட பத்திரிகைக்கு நானே அனுப்புவது என்று ஒப்பந்தம். நான் எழுதி அனுப்புவதற்குள்ளாகவே அந்தத் தகவல் அந்தப் பத்திரிகையில் வெளியாகி விட்டது. 'இந்துமணி' என்றவர் அனுப்பியதாக. அப்புறம் விசாரித்துப் பார்த்தால், சாட்சாத் பூபாலன்தான் அது என்பது தெரிய வந்தது. 'இப்படித் துரோகம் பண்ணலாமா?' என்று கேட்டேன். 'நீ யார் என்னைக் கேட்க?' என்றார். சங்கரப்பிரியாவும் அவருக்கு ஒத்துப் பாடுகிறாள். 'அடச் சீ, அல்பங்களா!' என்று திரும்பிப் பாராமல் வந்து விட்டேன்....''

''அச்சச்சோ! அப்போ ஆண்டு விழா?''

''மண்ணாங்கட்டி!.... த. எ. சங்கமே என் மணிப்பர்சுக்குள்தானே ஸார் இருந்தது.''

'இன்றைய தலைமுறையினரால் அலட்சியப்படுத்த முடியாத' ஒரு பொருள் எங்கே ஒளிந்திருக்கிறது என்ற மகத்தான தகவலை எனக்குத் தந்து விட்டு விரைந்தாள், பூமா.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா (ரிஜிஸ்டர்டு) :: 'கான விகார்', கிரிபித் ரோடு தியாகராயநகர், சென்னை—17

கோகுலாஷ்டமி சங்கீத உத்ஸவம்

ஸ்ரீ தியாகராஜ சுவாமி இருநூறுவது ஆண்டு பிறந்த நாள் கொண்டாட்ட விழாவை யொட்டி

1967 ஆகஸ்டு

5ந் தேதி சனி - கே. எஸ். நாராயணஸ்வாமி & கே. கே. சிவராமன் (வீணை) - குருவாயூர் துரை - உமையாள்புரம் கே. நாராயணஸ்வாமி

6ந் தேதி ஞாயிறு - மதுரை மணி - மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை - பாலக்காடு மணி

11ந் தேதி வெள்ளி - லலிதா சேஷாத்ரி - சி. லட்சுமிநாராயணன் - நாகூர் அம்பி அய்யர்

12ந் தேதி சனி - ராமநாதபுரம் கிருஷ்ணன் - வி. சேதுராமய்யா - டி. வி. கோபாலகிருஷ்ணன்

13ந் தேதி ஞாயிறு - டி. கே. ரங்காச்சாரி - எம். எஸ். கோபாலகிருஷ்ணன் - திருச்சி சங்கரன் - வி. நாகராஜன்

15ந் தேதி செவ்வாய் (சுதந்திர தினம்) டி. என். கிருஷ்ணன் - தனி வயலின் - D. கிருஷ்ண அய்யங்கார்

25ந் தேதி வெள்ளி - திருவனந்தபுரம் ஆர். எஸ். மணி - வி. தியாகராஜன் - தஞ்சாவூர் சிவப்பிரகாசம்

26ந் தேதி சனி - சாத்தூர் சுப்பிரமணியம் - அன்னவரப்பு ராமஸ்வாமி - முருகபூபதி

27ந் தேதி ஞாயிறு (கோகுலாஷ்டமி) புல்லாங்குழல் ரமணி - லால்குடி - ராமபத்திரன்

29ந் தேதி செவ்வாய் (கிருஷ்ண ஜெயந்தி) கமலா மூர்த்தி - ஹரிகதை

1967 செப்டம்பர்

1ந் தேதி வெள்ளி - டி.கே. கோவிந்தராவ் - ஆர்.கே. வெங்கடராம சாஸ்திரி - ராமநாதபுரம் ராகவன்

2ந் தேதி சனி - எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எம்.எஸ். அனந்தராமன் (வயலின் டூயட்) - டி.வி. கோபாலகிருஷ்ணன் & கும்பகோணம் ராஜப்பய்யர்

3ந் தேதி ஞாயிறு - செம்மங்குடி - கிருஷ்ணன் - வேலூர் ராமபத்ரன் - விநாயக்ராம்

7ந் தேதி வியாழன் (விநாயக சதுர்த்தி) எஸ். பாலசந்தர் (வீணை) - டி. ருக்மணி - உபேந்திரன்

8ந் தேதி வெள்ளி - திருவெண்காடு ஜெயராமன் - சி. லட்சுமிநாராயணன் - எஸ். சுவாமிநாதன்

9ந் தேதி சனி - எம். எல். வசந்தகுமாரி - எம். சந்திரசேகரன் - தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி ராவ் & கே.எம். வைத்தியநாதன் (2 மிருதங்கம்)

10ந் தேதி ஞாயிறு - பாலமுரளிகிருஷ்ணா - எம். எஸ். கோபாலகிருஷ்ணன் - உபேந்திரன்

15ந் தேதி வெள்ளி - ஷேக் சின்னமௌலானா சாஹிப் (நாதஸ்வரம்) - வேதாரண்யம் சுப்பிரமணியன் (ஸ்பெஷல் தவுல்)

16ந் தேதி சனி - மாயவரம் ராஜம் - வி. எஸ். ஜோதுகிரி - துரை - காமேஸ்வரன்

17ந் தேதி ஞாயிறு - எம். டி. ராமநாதன் - கிருஷ்ணன் - முருகபூபதி

22ந் தேதி வெள்ளி - மணி கிருஷ்ணஸ்வாமி - எஸ். பி. சேதுராமன் - எ. ஈஸ்வரன்

23ந் தேதி சனி - மஹாராஜபுரம் சந்தானம் - சிக்கில் பாஸ்கரன் - கோயமுத்தூர் ராமஸ்வாமி

24ந் தேதி ஞாயிறு - மதுரை சோமு - லால்குடி - டி.கே. மூர்த்தி - ஷ்யாம்சுந்தர் - மன்னார்குடி நடேச பிள்ளை - பாலக்காடு சுந்தரம்

29ந் தேதி வெள்ளி - வேதவல்லி - ஆலந்தூர் நடராஜன் - ராதாகிருஷ்ணன்

30ந் தேதி சனி - ஆலத்தூர் ஸ்ரீனிவாஸய்யர் - அழகிரிஸ்வாமி - உமையாள்புரம் சிவராமன்

1967 அக்டோபர்

1ந் தேதி ஞாயிறு - லால்குடி & ஸ்ரீமதி பிரம்மானந்தம் (தனி வயலின்) - உமையாள்புரம் சிவராமன் & ஆலங்குடி

2ந் தேதி திங்கள் (காந்திஜி பிறந்த தினம்) எஸ். கல்யாணராமன் - கிருஷ்ணன் - பாலக்காடு ரகு

3ந் தேதி செவ்வாய் (மஹாளய அமாவாசை) D. பசுபதி - டி. என். வீரராகவன் - திண்டுக்கல் ராமமூர்த்தி

7ந் தேதி சனி - டி. ஆர். சுப்பிரமணியம் - டி. ருக்மணி - தஞ்சாவூர் நாகராஜன்

8ந் தேதி ஞாயிறு - ஏ. கே. சி. நடராஜன் & பார்ட்டி (கிளாரினட்)

12ந் தேதி வியாழன் - வி. ராமச்சந்திரன் - திருவாரூர் சுப்பிரமணியன் - நாகர்கோவில் கணேச ஐயர் - மதுராந் கல்யாணராமன்

13ந் தேதி வெள்ளி - மணக்கால் ரங்கராஜன் - எம். சந்திரசேகரன் - [illegible] ராமச்சந்திரன் - ரங்காச்சாரி - மன்னார்குடி நடேச பிள்ளை

14ந் தேதி சனி - டி. எம். தியாகராஜன் - எம். எஸ். கோபாலகிருஷ்ணன் - கமலாகர் ராவ்

15ந் தேதி ஞாயிறு - எம். எல். வசந்தகுமாரி - வி. வி. சுப்பிரமணியம் - டி. கே. மூர்த்தி - விநாயக்ராம்

20ந் தேதி வெள்ளி - சூலமங்கலம் லக்ஷ்மி நாராயணன் - டி. என். வீரராகவன் - காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி - எர்ணாகுளம் ராமகிருஷ்ணன்

21ந் தேதி சனி - எஸ். ராஜம் - என். சுப்பிரமணியன் - காரைக்குடி மணி

22ந் தேதி ஞாயிறு - நெடுநூரி கிருஷ்ணமூர்த்தி - லால்குடி - பாலக்காடு ரகு


27ந் தேதி வெள்ளி - B. V. ராமன் & B. V. லக்ஷ்மணன் - எஸ். சுப்பிரமணியம் - டி. ரங்கநாதன்

28ந் தேதி சனி - ஜே. வெங்கடராமன் (ஆலத்தூர் சீடர்) - அழகிரிஸ்வாமி - சங்கரன்

29ந் தேதி ஞாயிறு - கே. வி. நாராயணஸ்வாமி - வி. வி. சுப்பிரமணியம் - டி. ஆர். ராஜாமணி

டிக்கெட்டுகள்: வெள்ளி & சனி ரூ. 5, 3, 2 & 1; ஞாயிறு & விடுமுறைகளில் ரூ. 10, 5, 3 & 2 | வெள்ளி மாலை 6-30 மணிமுதல் 9 வரை; சனி மாலை 6-00 மணிமுதல் 9 வரை | ஞாயிறு மற்ற விடுமுறைகளில் மாலை 5-30 மணிமுதல் 9 வரை

ஒலிபெருக்கி அமைப்பாளர்: அசோசியேட்டட் ரேடியோ ஏஜென்ஸீஸ், மயிலாப்பூர், மதராஸ்-4



திருமுருக கிருபானந்த வாரியார்

96. பண் கொண்டார் கண்ணும் கொண்டார்

தமிழ்ச் சங்கமுள்ள பொதிய மலையிலே பிறந்து, சந்தனக் காவில் குளிர் சாரலில் வளர்ந்து இனிமை பெற்ற தென்றலாகிய தமிழ் மாருதம் வீசத் தொடங்கியது. உடனே சுந்தரர், திருவாரூரில் வீதிவிடங்கர் வசந்த விழாவில் பவனி வருவதையும் அத்தருணம் பரவையார் ஆடிப் பாடி வருவதையும் நினைவு கொண்டார். திருவொற்றியூர் தியாகராஜனிடமிருந்து திரு ஆரூர்த் தியாகராஜனிடம் அவரது எண்ணம் முழுவதும் உறைந்தது.

பத்திமையு மடிமையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோயது விதனைப் பொருளறிந்தேன்
போய்த் தொழுவேன்
முத்தினை மா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூர்
இறைவனையே

ஏழிசையா யிசைப் பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை
மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே

என்ற திருப்பதிகம் பாடினார்.

சங்கிலியாருக்குச் செய்த சத்தியமாகிய சங்கிலி அவரைத் திருவாரூர் செல்ல வொட்டாமல் கட்டிப் போட்டுத் தடுக்கின்றது. திருவாரூர் தியாகேசன் மீதுள்ள காதல் ஈர்க்கின்றது. சத்தியத்துக்கும் பத்திமைக்கும் இடையே கிடந்து துடித்தார்.

கடைசியில் அன்பு கடல்போல் பெருக, ஒற்றியப்பனைத் தொழுது புறப்பட்டே விட்டார் சுந்தரர். எல்லையைக் கடந்து ஓர் அடி எடுத்து வைத்ததும் வாக்கு மீறிய காரணத்தால் இரு கண்களும் மறைந்தன.

சத்தியம் மறந்ததனால் வந்த வினை இது என்று தெளிந்தார் சுந்தரர். ஆயினும் தாம் தவறு செய்தாலும் அதனை மறந்து இறைவன் அருள் புரிய வேண்டிய 'தகுதி' தமக்கு உண்டு என உரிமைக் குரலெடுத்துப் பாடினார். நீரில் அழுக்குச் சேர்ந்தால் அப்படியே நீரோடு கொட்டிவிடலாம். பாலில் அழுக்கு விழுந்தால் அழுக்கினை மட்டும் நீக்கிப் பாலை எடுத்துக் கொள்வோமன்றோ? அதேபோல் அழுக்குப் படிந்த என் அழுக்கை மட்டும் நீக்கி, என்னை நீக்காது அருள் புரிய வேண்டும் என வேண்டினார்.

'பிழுக்கை வாரியும் பால் கொள்வரடியேன்
பிழைப்பனுகிலுந் திருவடிப் பிழையேன்'

என்ற வாக்கு மீண்டும் மீண்டும் உய்த்துணரத் தக்கது.

உரிமைக் குரல் எழுப்பியதோடு மட்டுமின்றி, வன்றொண்டர் என்ற பெயருக்கேற்ப உக்கிரமாகவே கேட்கிறார் சுந்தரர்: "அடியேன் கண்ணிழந்து எவ்வாறு வாழ்வேன்? மக நட்சத்திரத்துடன் கூடிய சனி, ஒருவனைப் படுத்துமாப் போல் என்னைப் படுத்துகிறீரே" என்றார். ஆண்டவனையே இவ்வாறு கேட்கிறார்! "வீட்டிலே பெண்களை நான் அழைத்தால், 'குருடா! அழைக்காதே போ!' என்று கூறுவரே? அதை அடியேன் எவ்வாறு தரிப்பேன்?" என்று அலறினார்?

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்
மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையேல்போ குருடா எனத்தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்கணா முறையோ மறையோதீ
உனக்குந் தண்கடல் ஓதம் வந்துலவும்
ஒற்றி யூரெனு மூருறை வானே

வைத்த காலைப் பின் வைத்துச் சங்கிலியின் நகைப்புக்கு ஆளாக விரும்பாமல் ஆரூர் வழியிலேயே நடந்தார் நாயனார்.

"சங்கிலிக்காகச் சிறியேனுடைய கண்களை மறைத்தீர். கருணைக் கடலே! சேய் செய்த குற்றத்தைத் தாய் பொறுப்பது கடனன்றோ? இக்தலத்தில் தொண்டைமானுக்குத் தண்ணருள் புரிந்த தயாநிதியே! அடியேனுடைய அல்லலை அகற்றுவாய்" என்று திருமுல்லைவாயிலில் வேண்டினார்.

திருமுல்லைவாயிலில் தரிசனம் புரிந்து திருவெண்பாக்கம் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்தார் நம்பியாரூரர். சந்நிதி முன் சென்று, "மகிழமரத்தில் இரு என்று அடியேன் கூறியபடி இருந்து, என்னைச் சத்தியம் புரியச் செய்த சம்புவே! உள்ளே இருக்கின்றீரோ?" என்று கேட்டார்.

நம்பியாரூரர்க்குத் தோழனாய் இருந்து வந்த இறைவர் அயலார் போல ஓர் ஊன்றுகோலைத் தந்து. "உளோம் போகீர்" என்று கூறி அருளினார். ஊன்றுகோல் பெற்றதில் மகிழ்ந்தாலும் எம்பெருமான் அயலானைப் போல் இணக்கமில்லாமல் கூறியருளியதற்காக மனம் நொந்து, பாடினார் நம்பியாரூரர்.

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன்
பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென் கண்மறைப்
பித்தாய்
குழை விரவு வடிகாதா கோயிலுளேயோ வென்ன
உழையுடையா னுள்ளிருந்து ளோம்போகீ
ரென்றானே

கச்சியம்பதியை அடைந்த சுந்தர மூர்த்தி சுவாமிகள் கண் பெறுங்குறிப்பினாலே நேரே இறைவருடைய திருக்கோயிலுக்குச் செல்லாமல், அறம் வளர்த்த அம்மையாகிய காமாட்சியம்மை எழுந்தருளிய காமகோட்டம் சென்று தொழுதார். "அன்னம்மையே! இருநாழி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் செய்யும் காமாட்சியே! கண்ணிழந்து கவல்கின்றேன். ஐயன் அருளாதிருக்கின்றனர். அகிலாண்ட நாயகியே! தேவரீர் அப்பாவிடம் சொல்லி அருள் புரியும்" என்று துதித்தார்.

பின்னர் உலகம் முழுதும் அளித்து அழித்து ஆக்கும் ஏகம்பருடைய சந்நிதிக்கு அடியார் வழிகாட்டச் சென்று கண் வேண்டினார்.

விண்ணுளார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணுளா கச்சியே கம்பனே கடையானேன்
எண்ணாது பிழைபொறுத்திங் கொன்கானை
எழிற்பவளை
என்று கண்ணளித்தருளா யெனவீழ்ந்து
வணங்கினர்

அம்மையின் அருள் துணை புரிய அம்மையின் பாகமாகிய இடக்கண்ணை ஏகம்பநாதர் தந்தருளினார்.

ஒரு கண்ணால் இறைவரின் கோலத்தைக் கண்ட வன்றொண்டர் கரை கடந்த களிப்புற்று இசை பாடினார்.

'கால காலனைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே!'

என்று திருப்பதிகம் பாடினார்.

திரு ஆரூர் மார்க்கத்தில் தொண்டை மண்டலம் கடந்து சோழ மண்டலத்தில் அடிகளார் பயணம் செய்யுங்கால் திருத்துருத்தி அடைந்தார். அப்போது அவரது உடம்பில் பிணி வந்து துன்புறுத்தியது. இறைவனிடம் முறையிட்டார். கண்ணுதற் பெருமான், "அன்பனே! வடகுளத்தில் குளிப்பாய்" என்று அருள் புரிந்தார். ஆரூரர் அத்திருக்குளத்தில் மூழ்கி எழுந்தார். உலகில் உள்ளோர் யாவரும் அதிசயிப்ப இரத்தினமணி போன்ற ஒளிமிக்க திருமேனியைப் பெற்றார். திருக்கோயிற் சென்று, 'என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை'ப் பாடினார்.

திருவாரூருக்கு அருகில் வந்துவிட்டார் சுந்தரர். சிறிது தொலைவிலிருந்து திருவாரூரை ஒரு கண்ணினால் கண்



டார். அந்தக் காட்சி போதவில்லை. 'பரவையுண்மண்டளி' என்னும் தூவாயார் திருக்கோயிலிற் சென்று, "இறைவனே! என் துயர் களைந்து கண் காணக் காட்சி காட்டாய்!" என்று வேண்டித் திருப்பதிகம் பாடினார்.

திருமூலட்டானத்துக்கு அர்த்தயாமத்தில் சென்றார் சுந்தரர். திருவாரூர் தங்கும் தேவாதி தேவனை ஒரு கண்ணாற் கண்டு அவா அடங்காமையால், தோழமையால் வற்புறுத்தி மற்றொரு கண்ணும் கேட்டார். "அடியார்கள் தமது அல்லலைக் கூறுகையில் நீர் அயலார் போல் இடரை அகற்றாது வாளாக இருக்கலாமா? அங்ஙனமிருந்தால் எப்படி வாழ்வீர்? உம்மைக் கண்டு மகிழும் பொருட்டுத்தானே சத்தியம் தவறினேன்? மகிழடியில் இருக்குமாறு அடியேன் வேண்டியதை நீரே சங்கிலிக்குத் தெரிவித்ததனால் வந்த விளைவுதானே இது? அப்படியே என் குற்றமானாலும் பொறுத்துக் கொள்வது நின் கடன் தானே? மூன்று கண்களையுடைய நீர் அடியேனுக்கு மற்றை ஒரு கண்ணையும் தராது மறுத்தீரேல் அந்தப் பழி உமக்கேதான்" என்று பலப்பல கூறிப் பாடினார்.

........அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூர்
வாழ்ந்து போதீரே
விற்றுக் கொள்வீர் ஒற்றி
அல்லேன் விரும்பியாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த
தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக்கடிகேள் என்கண்
கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக்கண் தான்தாரா
தொழிந்தால் வாழ்ந்து போதீரே

சிவபெருமான் திருவுள்ளம் இரங்கிக் கருணை நோக்கால் பார்த்தருளினார். மறுகும் அடியார்க்கு மறுகண்ணும் தந்தருளினார். கண் மலர் பெற்ற அடிகள் இறைவன் பாத மலர் மீது வீழ்ந்தார். பல காலும் பணிந்தார். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

97. வேதநாதன் தூது சென்றான்

முன்னம் ஆரூரிலிருந்து நம்பியாரூரர் பிரிந்தபின் நங்கை பரவையார், தனித்திருந்து தளர்ந்திருந்தார். திருவொற்றியூரில் சங்கிலியாரைச் சுந்தரர் மணந்ததாகக் கேட்டபின் பரவை அம்மை மிகவும் வெகுண்டிருந்தார்.

இப்போது மீண்டும் சுந்தரர் ஆரூர் வந்து சேர அவரது பரிசனங்கள் பரவையார் திருமாளிகையை அடைந்தனர். ஆனால் உள்ளே செல்ல மாட்டாது பரவையின் ஆணையால் தடையுற்றனர்.

பரவையாரின் சினத்தை மாற்றி ஆறுதல் கூறி அவர் மீண்டும் சுந்தரரைச் சேர்த்துக் கொள்வதற்காக அன்பர்கள் முயன்றனர்.

பரவையார் சீற்றம் தணியாது, "அவர் விஷயமாக இங்கு ஏதாவது பேசுவீராயின் எனது உயிர் பிரியும்" என்றார்.

சுந்தரர் சிந்தாகுலக் கடலுள் அழுந்தினார். இரவு விரிந்தது. அனைவரும் துயில் கொண்டனர். சுந்தரர் மட்டும் துயில் காணாது தனித்தார். அப்போது கண்ணுதற் கடவுள், அடிகள் படிதோய வந்து தோன்றியருளினார்.

"தோழனாகிய தொண்டனேன் துயர் நீங்கப் பரவையின் புலவியை மாற்றியருளும்" என்று இறைவரை வேண்டினார் சுந்தரர்.

நாயனீரே நானுமக்கிங்
கடியேனாகில் நீரெனக்குத்
தாயினல்ல தோழருமாந்
தம்பிரானாரே யாகில்
ஆய அறிவு மிழந்தழிவேன்
அயர்வு நோக்கி யவ்வளவும்
போயின் விரவே பரவையுறு
புலவி தீர்த்துத் தாருமெனா

வேண்டுவார் வேண்டுவதே நல்கும் விமலர் அன்பரை நோக்கி, "அன்பனே! நீ துன்பத்தை விடு; யாம் உனக்கு ஒரு தூதனாகி இப்பொழுதே பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம்" என்று அருள் புரிந்தார். தோழர் மிகவும் மகிழ்ந்து, துதித்து நின்றார்.

அண்டர் வாழக் கருணையினால்
ஆலகாலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற்
றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழு மலர்க் கூந்தல்
பரவையார் மாளிகை நோக்கித்
தொண்டனார்தந் துயர்நீக்கத்
தூதனாரா யெழுந்தருள

தேவாசிரியன் மண்டபத்தில் கூடியிருந்த தேவர் யாவரும் சேவித்து உடன்போவராயினார்கள். அரனார் அவர்களைப் புறத்தே நிற்கச் செய்ய, அணுக்கரான பூதகண நாதர்களும், மூவா முனிவர்களும், சிவயோகிகளும் முன்னே சென்றனர். அருகில் பெரிய தேவர்களும் முனிவரரும் நண்பனான குபேரனும் சென்றனர். விண்ணவர் பூமழை பொழிந்தனர். முனிவர் வேத கீதம் மொழிந்தனர். மாலும் அயனும் காணாத மலரடியைக் காண்பதற்கு இது தகுந்த காலம் என்று அவரை அழைப்பது போல் சிவபெருமான்

திருவடியில் உள்ள சிலம்பு இனிது ஒலித்தது. இறைவர் இவ்வாறு திருவாரூரில் திருவீதியில் அடியவர் தொடரவும், சடையில் அரவு தொடரவும், மறைகள் தொடரவும் வன்றொண்டர் மனமும் தொடர வருவாராயினர்.

பரமர் பரவையார் திருமாளிகையருகில் சென்று, உடன் வந்தவர்கள் அனைவரையும் வெளியே நிறுத்தினர். தம்மை அர்ச்சிக்கும் ஆதி சைவ முனிவர் திருக்கோலங் கொண்டு, கதவைத் தட்டி, ''பரவாய்! கதவு திறவாய்'' என்று அழைத்தருளினர்.

துயிலின்றித் துயரால் அயரும் அம்மை பதைத்து வந்து கதவைத் திறந்தார். தூதராய் நின்ற நாதரை அர்ச்சகராகவே நினைத்து, அவ்வேளையில் அவர் அங்கு வந்ததற்காக அஞ்சித் தொழுது, ''எந்தையே! எல்லாம் உறங்கும் இவ்வேளையில் இங்கு எய்தியது எதன் பொருட்டு?'' என்று கேட்டார்.

''பெண்மணி! நம் நம்பியாரூரன் இங்கு வர நீ இசைதல் வேண்டும்' என்றார் வேதியராய் வந்த பெருமான்.

''திருவொற்றியூரில் சங்கிலியினால் தொடக்குண்டவருக்கு இங்கு என்னவேலை? தாங்கள் இதன் பொருட்டு இந்த இரவில் வந்தது மெத்த அழகு'' என்றார் பரவை.

''பாவாய்! பொறுமை கடலினும் பெரிது. சினம் தணிவாய். நான் வந்தது உனக்கு ஆறுதலைப் புரியும் பொருட்டே. வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மறுப்பது தகாது. ஆரூரன் வர இசைவாய்'' என்றனர் ஆதிசைவக்கோலம் கொண்ட பாதிமதியர்.

''ஒற்றியூரில் உறுதி பெற்ற அவர் வர நான் இசையேன். நீர் போய்வாரும்'' என்று மறுத்துக் கூறினர் பரவை.

இறைவர் தோழரது வேட்கையைக் காணும் திருவிளையாடலை மேற்கொண்டு தமது உண்மையைக் காட்டாது திரும்பினர்.

ஐயனைத் தையலிடம் அனுப்பியதற்காக நாணமுற்றும் மற்றும் பலவிதமாகவும் சிந்தைவாய்ப்பட்டிருந்த சுந்தரர் வேலை எரித்த விமலன் மீள வருவதைக் கண்டார். ஐயன் தோற்றிருக்கமாட்டார் என்று நம்பி வரவேற்றார் நம்பியாரூரர். ஆனால் ஐயன் தோல்விச் செய்தியே கொண்டு வந்திருந்தார்.

சுந்தரருக்குச் சினமுண்டது—பரவையிடம் அல்ல; பரமனிடம்தான். ''என் அடிமையை வேண்டாவிடில் என்னை ஏன் அன்று வலிய ஆட்கொண்டீர்? சிறியேன் துயர்படக் கண்டீர்? பரவைபால் என்னை மேவுமாறு செய்வீராயின் உயிர் விடுவேன்'' என்றார்.

இரண்டாம் முறையும் தூது புறப்பட்டார் இறைவர். இப்போது தமது உண்மை உருவுடன் உடன் கணங்கள் வரப் பரவையை அடைந்தார்.

அத்தருணம் பரவை திருமாளிகை திருக்கைலாயம் போல் திகழ்ந்தது. பரவையார் விரைவில் சென்று தோழருக்காக வந்த வேழமுரித்த விமலரின் விரையார் சீரடி மேல் வீழ்ந்து வழிபட்டார்.

''பரவையே! நாவலூரரன் உரிமையால் ஏவ மீண்டும் உன்பால் வந்தோம். முன்போல் மறுக்காதே. நின் பிரிவினால் பெரிதும் வருந்தும் வன்றொண்டனை வரப் பெறுவாய்'' என்று அருளிச் செய்தார் அருபொருளாகிய ஆண்டவன்.



பரவையார் கண்ணீர் சொரிந்து பரிந்து சென்னி மேல் கரம் கூப்பி, ''மறையவராகி வந்தது தேவரீரோ? அடியேன் செய்த மாதவந்தான்! மாலயன் காணு உமது மலரடி வருந்த ஓர் இரவு முழுவதும் அன்பர்க்காக அங்கும் இங்கும் உழல்வீரானால் அடியேன் இசையாது என் செய்கேன்?'' என்றார்.

துளிவளர் கண்ணீர் வாரத்
தொழுது விண்ணப்பஞ் செய்வார்
ஒளி வளர் செய்ய பாதம்
வருந்தவோர் இரவு மாறு
தளிவரும் அன்பர்க்காக
அங்கொடுங் குழல்வீராகி
ஒளிவரு . வீருமானுல்
என்செய்கேன் இசையாதென்றார்!

''நங்காய்! நின் பெருந்தன்மைக்கு ஏற்றவாறு கூறினாய். நன்று'' என்று அருளிச் செய்த பிரான் சென்னியில்

விளங்கும் கங்கை ததும்ப விரைந்து வன்றொண்டர்பால் வந்தனர். வெற்றியைத் தமது வேதவாயினும் வெளியிட்டருளினர்.

புது மணம் செய்தாற் போல் பெருமை பொலியத் தம்பிரான் தோழர் பரவையார் திருமாளிகை சென்றனர். கணவரைக் கண்டு காதல் வெள்ளம் கரை மாறுந்து பொங்க நாணமும் அச்சமும் கொண்டு பரவையார் பணிந்தார். சுந்தரர் செந்தளிர்க் கரத்தால்அவரைஎடுத்து உள்புகுந்தார்.

98. நிறைவு

நம்பியாரூரர் நெஞ்சில் நடுக்கமின்றி எம்பிரானை ஒரு பெண்பால் தூது விட்டதைக் கேள்வியுற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனர் அதற்காகச் சினந்ததும், இறைவன் அச்சினம் தணித்ததும் முன்பே நாம் படித்த கதை.

பூஜையின் முடிவில் நடராஜப் பெருமானுடைய சிலம்பொலி கேட்டு வந்த சேரமான் பெருமானுக்கு ஒரு நாள் அவ்வொலி கேட்காதிருக்க, அதன் காரணம் நம்பியாரூரரின் பாடலில் பரமன் சொக்கியிருந்ததே என்று பின்னர் சேரமான் அறிந்ததையும், இதன் மீது நம்பியாரூரருடன் அவர் தோழமை கொண்டு இருவரும் இணை பிரியாது பல பதிகள் சேவித்ததும் முன்பே கண்டோம்.

கேரள நாடாளும் சேரமான் பெருமான் தோழரைத் தமது நாட்டுக்கு எழுந்தருளுமாறு பலகாலும் பணிந்து வேண்டினர். ஆரூரரும் இசைந்தார். பரவையார்பால் விடை பெற்றுத் தியாகேசனைத் தொழுது திருவாரூரை விடுத்து மேற்பால் செல்வார், காவிரியின் தென்கரையிலே சென்று திருக்கண்டியூரை அடைந்தார். வடகரையில் விளங்கும் திருவையாற்றினைக் கண்டார். உடலும் உள்ளமும் உருகிக் கைகூப்பித் தொழுதார். கடல் போன்று வெள்ளம் பெருக்கெடுத்தோடும் காவிரியைக் கடக்கமாட்டாராய் வருந்தினர்.

“இப்பெரிய வெள்ளத்தைக் கடந்து உன்னை எவ்வாறு காண்பேன்?” என்று இறைவரை அன்புடன் வேண்டித் தீந்தமிழ்ப் பதிகம் ஓதினர்.

> கதிர்க்கோள் பசியையொத்தே நான்கண்டே
> னும்மைக் காணுதேன்
> எதிர்த்து நீந்த மாட்டேன்நான் எம்மான்
> தம்மான் தம்மானே
> விதிர்த்து மேகம் மழைபொழிய
> வெள்ளம் பரந்து நுரை சிதறி
> அதிர்க்குந்திரைக் காவிரிக் கோட்டத்
> தையாறுடைய அடிகளோ

அப்பதிகம் பாடுதலும், ஐயாற்றில் மேவும் ஐயன் கன்று தடையுண்டு எதிரழைக்கக் கதறிக் கனைக்கும் பசுவைப் போல் சராசரங்கள் எல்லாம் கேட்க, “ஓலம்” என்று அருள் புரிந்தார். உடனே காவிரி வெள்ளம் வழிவிட்டது.

விண்ணிடை முட்டிச் சென்ற வெள்ளம் மேற்புறத்தில் பளிங்கு மலை போல் நின்றது. கீழ்ப்புறத்தில் மணல் பரப்பு தோன்றியது. காவிரி கடந்து திருவையாறகலாத செம்பொற் சோதியைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார் ஆரூரர்.

சேர மன்னனுடைய கொங்குநாட்டில் சுந்தரர் புகுந்து பெற்ற வரவேற்பு பெரிய புராணத்தில் ஓர் அற்புத கட்டம். பெண் யானை மீது தம்பிரான் தோழரை ஏற்றி வைத்த சேரமான் பெருமான் அவருக்குப் பின் தாமும் ஏறி வெண்சாமரம் வீசிக் கொண்டு கடல் போல் மேளங்கள் முழங்க, மங்கையர் வாழ்த்த அரண்மனைக்குள் புகுந்தார்.

சில காலம் சேர மன்னனுடன் சேர்ந்து வாழ்ந்த சுந்தரர் ஆரூரின் நினைவு மிகுந்து புறப்பட எண்ணினர். அப்போது சேரர்கோன், “இந்தப் பாரோடு விசும்பாட்சியாவது அடியேனுக்கு உமது திருவடியே; நீரே இங்கிருந்து அரசாளும்” என்று வேண்டினர்.

வன்றொண்டப் பெருமான், “என்னுயிர்க்கின்னுயிராம் எழில் ஆரூர்ப் பெருமானை வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன்; மதியணிந்தார் இன்னருளால் அரசாண்டு வாரும்” என்று கூறி இறைஞ்சினர். பெருமான் மறுக்க மாட்டாராய்க் கருவூலத்திலுள்ள பொன் முத்து, இரத்தினம், ஆடைகள் அனைத்தையும் பொதி செய்து ஆரூரருடன் அனுப்பி வைத்தார். சேரர்கோவும், ஆரூரரும் ஒருவரை ஒருவர் தொழுதும், அழுதும், தழுவியும் விடைகொண்டு பிரிந்தனர்.

சிவபெருமான் சுந்தரருக்குத் தாமே பொன் தருவது வழக்கம். பிறர் தரப் பெறுதல் ஏற்றதன்று என்று எண்ணி, அதனைப் பறித்து மீட்டுத் தருமாறு திருவுளம் கொண்டார் போலும். சுந்தரர் திருமுருகன் பூண்டி வழியே செல்கையில் பெருமான் பூதகணங்களை நோக்கி, “நீங்கள் வேடர் வடிவாகச் சென்று வன்றொண்டனுடன் செல்லும் பண்டாரங்களைப் பறித்து வாருங்கள்” என்று பணித்தருளினர். பூதங்கள் அவ்வாறே செய்ய, பறிகொடுத்த பரிசனங்கள் ஆரூரர்பால் வந்தனர். வேடுவர் விஷயம்அறிந்த ஆரூரர் திருமுருகன் பூண்டியில் உள்ள திருக்கோயிலுக்குள் சென்று பதிகம் பாடினர்.

ரேயான் - கிரேட்
காஸ்டிக் சோடா

98/99% சுத்தம்

திரவப் பொருளாகவும், கட்டியாகவும்
தூளாகவும் கிடைக்கும்

THE METTUR CHEMICAL AND INDUSTRIAL CORPORATION LIMITED

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S., சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion - MC - 1025



58 ஆண்டுகளாகப் புகழ் பெற்ற
ஆறுமுகம் முத்திரை உள்ள

ஆர். எஸ். பதி மருந்து

(பதிவு செய்யப்பட்டது)

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, கைகால் வலி
முதலியவைகளுக்குச் சிறந்தது

★ தற்பொழுது எல்லா மெடிகல் ஷாப்புகளிலும், டிரக் ஸ்டோர்ஸ்களிலும் தாராளமாகக் கிடைக்கிறது.

★★ டிரக் லைசென்ஸ் உள்ள வணிகர்கள் எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதலாம்.

மேரிராம் பற்பொடி

பற்களுக்குச் சிறந்தது
டின்களில் மட்டுமே கிடைக்கும்

ஆர். எஸ். பதி அன் கோ.

(ஸ்தாபிதம் : 1909)

தபால் பெட்டி எண். 99 . . . . மதுரை-1



பாடி முடிந்ததும் பறிக்கப்பட்ட பொருள்கள் யாவும் திருவாயிலுக்கு முன் விண்ணளவாகக் குவிந்திருந்தன. பழையபடியே ஏவலர்களைக் கொண்டு அவைகளை எடுப்பித்துத் தெய்வமணம் கமழும் திருவாரூரை அடைந்தார் சுந்தரர்.

நாளும் நாதனுரின் நலத்தினில் மனம் வைத்து முதிர்ந்துவந்தார் நம்பி ஆரூரர். அவரது பொன் மேனியானது பத்தி யாகிய மூலத்தினின்றும் எழுந்து, அன்பு என்னும் தண்ணீரில் இனிது வளர்ந்து, இருவினையாகிய களைகள் எடுக்கப்பெற்று சிவபோகமாகிய கதிர் தோன்றி முதிர்ந்து முறுகி விளைந்திருந்தது.

படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வயலாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவிலாத சிவபோகம்
முதிர்ந்து முறுகி விளைந்ததால்

நட்புக்கு இலக்கணமாம் சேரமானை மீண்டும் நினைந்து புறப்பட்டார் ஆரூரர். வழியில் கொங்கு நாட்டில் திருப்புக்கொளியூர் அவிநாசியிலே ஒரு வீட்டில் மங்கல ஒலியும் அதற்கு எதிர் வீட்டில் அழுகை ஒலியும் கேட்டன. கருணை வடிவாகிய ஆரூரர் ஆங்குறை யும் மறையவரை நோக்கிக் காரணம் கேட்டார்.

''அவ்விரு மனைகளிலும் பிறந்த ஐந்து வயதுடைய இரு குழந்தைகள் மடுவில் அளித்தனர். பெருமுதலை ஒரு மதலையை விழுங்கி விட்டது. மற்றவனே பிழைத்து மீண்டான். மங்கல ஒலி கேட்கும் மனையில் அப்பிழைத்த பிள்ளைக்கு இன்று பூணூல் இடுகின்றனர். மற்ற வீட்டில், 'அந்தோ! நமது மைந்தன் இருந்தால் அவனுக்கும் உபநயனம் புரியலாமே?' என்று அழுகின்றனர்'' என்று அந்தணாளர் புகன்றனர்.

அருள் வடிவாம் ஆரூரர் அழுகை யொலியுடைய மனைக்கு நேரே நின்றனர். அவ்வீட்டின் உரிமையாளரான மறையவரும் மனைவியும் மகனை இழந்த சோகம் நீங்கி, ஓடி வந்து பணிந்தனர்.

''மகனை இழந்து வருந்தியது நீங்கள்தாமோ?'' என்று கேட்டார் ஆரூரர். அவர்கள் அடிபணிந்து, ''சுவாமீ! அது முன்னே நிகழ்ந்தது: இப்போது அது பற்றி என்ன? தேவரீரது திருவடியை வணங்குதற்கு வாய்ப்பு வந்தது. எங்கள் தவப் பயன் இன்று கைகூடியது'' என்று கூறினர்.

ஆரூரர் மனம் கசிந்தார்.

மதலையை முதலை விழுங்கிய மடுவினைச் சென்றடைந்தார் சுந்தரர்.

உரைப்பார் உரையுகந் துள்கவல்
லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும்
அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப்
புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை
தரச்சொல்லு காலனையே

என்ற திருப்பதிகம் பாடியருளினார்.

அப்பதிகம் முடியுமுன் அம்முதலை வயிற்றில் பிரமன் குழந்தையின் உடலையும், இயமன் அக்குழந்தையின் உயிரையும் விட்டனர். இறந்த நாள்தொட்டு அது வரை வளர்தற்குரிய திருமேனியுடன், அம்மதலையை முதலை கரையின் கண் கொணர்ந்து உமிழ்ந்தது. அத்திருமகனுக்கு சுந்தரர் தாமே உடன் இருந்து உபநயனம் செய்வித்தார். அனைவரையும் உய்வித்தார்.

வன்றொண்டர் காடும் மலையும் கடந்து சேரத் தலைநகரம் மகோதை அடைந்தார்.

சேரமான் பெருமானாகிய பெருமாக் கோதையாருடன் திருநாவலூரரர் மலை நாட்டில் உள்ள சிவதலங்களை யெல்லாம் சேவித்து மகிழ்ந்தனர். ஒரு நாள் சேரர் பெருமான் திருமஞ்சனத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நம்பியாரூரர் திருமஞ்சனக் களத்தில் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தனர். அவனி வாழ்வில் வெறுப்புற்றுத்

திருக்கயிலை செல்லுவதற்கு எண்ணினர் நம்பியாரூரர்.

வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங் குழைக்கா துடையவே தியனே
இறுத்தாய் இலங்கைக் கிறை யவனைத்
தலைபத் தொடுதோள் பலஇறுது விழக்
கறுத்தாய் கடல்நஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் தலையைந் தினுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே

திருக்கைலையில் சிவபெருமானும் ஆரூரரை மீண்டும் தம்மிடம் அழைக்குமாறு திருவுளம் கொண்டார். வானவரை நோக்கி "நமது ஆரூரனை அயிராவணம் என்னும் வெள்ளானை மீது ஏற்றி அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டருளிடருளினர்.

வானவரும், திருமாலும், பிரமனும் இந்திரனும் அயிராவணமுடன் திருவஞ்சைக்களம் எய்தினர். திருவாயிலின் முன்னின்று சுந்தரரைத் தொழுது எம்பிரான் ஆணையை அறிவித்தனர். ஆரூரர் தம்மை மறந்து நின்றனர். வானவர் தம்பிரான் தோழரை யானை மீதேற்றினர். ஐவகை நாதங்கள் ஆர்த்தன. போற்றி வானவர் பூமழை பொழிந்தனர். விண்மிசை வேழமீது செல்லும் ஆரூரர் சேரர் கோவை நினைந்தனர். சேரமான் பெருமாள் தம்பிரான் தோழரது செயலை யறிந்து, அவரை விட்டுப் பிரியாது, அவருடனேயே தாமும் செல்லக் கருதி, அருகிலிருந்த ஒரு புரவியின் செவியில் சிவ மந்திரம் கூறினர். உடனே அப்புரவி விண்மிசை பறந்து அயிராவணத்தை அடைந்தது. ஆரூரர் ஆரோகணித்த ஆனையை வலம் வந்து முன் சென்றனர் சேரமான். சேரருடைய படை வீரர் விண்மிசை நோக்கி மன்னரது திருவுருவம் மறையக் கண்டனர். உடனே அன்பினால் உடைவாள் கொண்டு, தம் உடலை வீழ்த்தி, வீர யாக்கையைக் கொண்டு தாமும் விண்மீது படர்ந்தனர். சுந்தரரையும் சேரமான் பெருமானையும் வணங்கி இவ்விரு மன்னுநி மன்னருக்குக் கட்டியம் கூறுவது போல் முன்னே சென்றனர். திருக்கைலாய மலையை நோக்கிச் செல்லும் ஆரூரர் பாடுவார்:

இந்திரன் மால்பிரமன்
எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை
மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர்
இவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரன் என்றான்
நொடித்தான்மலை உத்தமனே

திருக்கைலை மலை சேர்ந்து திருக்கோபுர வாயிலில் யானையினின்றும் குதிரையினின்றும் இழிந்து மணி வாயிலை அடைந்தனர் இரு பக்த சிகாமணிகளும். திரு அணுக்கன் வாயிலில் சேரர்கோன் தடையுண்டு நின்றனர்.

நம்பியாரூரர் எம்பிரான் திரு முன்பு சென்று, கணியாக் காதலுடன் பலகாலும் பணிந்து பரவினர்.

தேவ தேவர், "ஆரூரனே! வந்தனையோ?" என்று அருள் புரிந்தனர்.

அடியனேன் பிழை பொறுத்தெனை
ஆண்டுகொண் டுத்தொடக்கினை நீக்கி
முடிவிலா நெறி தரும்பெருங்
கருணையென் னரத்ததோ என முன்னர்ப்
படியு நெஞ்சொடு பன்முறை
பணிந்தெழும் பரம்பரை ஆனந்த
வடிவு நின்றது போன்றிடப்
வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்

"சேரர் பெருமான் வந்து திருவாயிலில் நிற்கின்றனர்" என்று சுந்தரர் சிவத்திடம் கூறினர்.

சிவபெருமான் ஆணைப்படி திருநந்தித் தேவர் சேரமான் பெருமானை சிவமூர்த்தியின் திருமுன் அழைத்துச் சென்றார்.

கண்ணுதற் கடவுள் புன்னகை புரிந்து, "சேரனே! இங்கு நாம் அழையா முன் நீ எவ்வாறு வந்தனை?" என்று அருள் புரிந்தனர்.

"ஐயனே! நானாக வர முடியுமோ? தேவரீருடைய கருணை வெள்ளம்தான் இங்கு அடியேனைக் கொணர்ந்து ஒதுக்கியது" என்று கூறிய சேரமான் இறைவன் மீது ஞான உலாப் பாடினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முந்தைய ஆலால சுந்தரராகி அரனைத் தொழுது முன்புரிந்த திருத்தொண்டினை மேற்கொண்டார். சேரர்கோன் கணநாதராய் விளங்கினர்.

மண்ணுலகில் வந்து பிறந்த பரவையாரும் சங்கிலியாரும் வல்வினைத் தொடக்கு நீங்கியவுடன், அம்பிகையின் அருளாலே கமலினி, அனிந்திதையராகி முன்போல் தேவிக்குத் திருத்தொண்டு புரிவாராயினர்கள்.

வன்றொண்டர் வழியில் ஓதிய திருப்பதிகத்தை வருணன் பால் தர, வருணன் அதனைத் திருவஞ்சைக் களத்தில் கொணர்ந்து சேர்த்தனன். சேரமான் பாடிய திருக்கைலாய ஞான வுலாவைக் கைலையில் கேட்ட மாசாத்தனர் திருப்பிடவூரில் வெளியிட்டனர். அதனால் அந்நூல்கள் உலகவர்க்கு ஆயின. இம்மண்ணுள்ளளவும் அவை நமக்குப் புண்ணியம் கூட்டிப் பண்ணிய பாவம் போக்கி அருளும்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

சுபம்

பலசாலியான ஒரு காதலன், தன் காதலியிடம், ஒரு சினிமாத் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டு இருக்கும்போது கேட்டான்: ''எதிரில் உள்ள ஆளின் தலை உனக்குப் படம் பார்க்க மறைக்கிறதா?''


அவள்: ''இல்லை!''

அவன்: ''பின்னால் இருக்கும் ஆசாமியின் கால் உன்மீது அடிபடுகிறதா?''

அவள்: ''இல்லை!''

அவன்: ''அப்படியானால் நாம் வேறு இடத்தில் உட்காருவோம் வா!''

—க. தண்டபாணி





முக்கூடல்

ஒன்றாகக் கூடுவது **ஆரம்பம்**

கூடியே இருப்பது **முன்னேற்றம்**

கூடி உழைப்பது **வெற்றி**

— ஹென்றி போர்டு

தகவல்: ஏ.கே. கந்தசாமி

சர் சாமுவேல் ஃபெர்குசன் ஓர் ஐரிஷ் கவிஞர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.



பொருந்தாக் குறள்!


எதற்கும் பொருந்தும் திருக்குறள்தான்! ஆனாலும் சில "பொருந்தாக்" குறள்களும் உண்டு!

1. இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
   துறந்தார் துறந்தார் துணை.
2. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
   அதனின் அதனின் இலன்.
2. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
   செய்தற் கரிய செயல்
4. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
   யானையால் யானையாத் தற்று.

இக்குறள்களைப் பல தடவை உச்சரியுங்கள். உங்கள் உதடுகள் இரண்டும் பொருந்துகின்றனவா என்று பாருங்கள். இவை "உதடு பொருந்தா"க் குறள்கள் என இப்போது ஒப்புக்கொள்வீர்.

-- சிவசக்தி





பாங்கில் ஒரு பறவை கணக்கு வைத்துப் பணம் போட்டிருக்கிறது என்றால், அது அதிசயம்தான். ஆனால் அது உண்மையுங்கூட. இப் படத்தில் காணப்படும் பறவைக்கு பாங்கில் பணம் இருக்கிறது. எவ்வளவு தெரியுமா? 12,250 ரூபாய்! மேற்கு ஜெர்மனியில் ஒரு நகரில் இப் பறவைக்காக நகர மக்கள் இவ்வளவு பணத்தைப் போட்டு வைத்திருக்கிறார்கள். பல காலமாக ஒவ்வொரு ஆண்டும் இப் பறவை (நாரை) அந் நகருக்கு வருவது வழக்கம். இப் பறவை வந்து தங்கும் காலத்தில், அதன் இருப்பிடத்தைச் சீராக வைத்திருக்கவும், அதற்கு உணவு அளிக்கவும் மக்கள் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

- பூ. பி. எஸ்.

பல்சுவைப் பக்கம் 2

ஒரு சமயம் இவர் ஜெர்மன் தளபதி வான்மல்ட்கியின் மாளிகைக்கு விருந்தினராகச் சென்றார்.

தளபதி பன்மொழிப் புலவர். விருந்தைப் பற்றிக் கவிஞர் தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், "விருந்தின் போது தளபதி ஏழு பாஷைகளில் மௌனம் சாதித்தார்!" என்று வியந்து குறிப்பிட்டிருக்கிறார்.

— மயிலன்



ஆயா

பீஷ்மன்





குளிருக்குப் பயந்துகொண்டு படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வராமல், கம்பளிப் போர்வைக்குள் சுருண்டு கிடந்தேன். ஜன்னல் கதவுகளை யெல்லாம் மூடியிருந்ததனால், விடிந்து எவ்வளவு நேரமாகியிருக்கும் என்று அனுமானிக்கக்கூட வழியில்லை.

''ராசா....! தம்பி....! கதவைத் திற தம்பி......!''

வெளியேயிருந்து ஆயாவின் குரல் அலாரமாக ஒலித்தது. மணி எட்டுக்குக் குறைச்சலில்லை. தைரியமாக ஆயா கதவைத் தட்டிக் குரல் கொடுக்கிறாள் என்றால் நிச்சயம் ஏழு மணிக்கு மேல் ஆகியிருக்க வேண்டும். ஒரு சமயம் ஆறு மணிக்குக் கதவைத் தட்டி என்னை எழுப்பியதற்கு அவளைக் கோபித்துக் கொண்டு விட்டேன். அதனால் அவள் ஏழு அடிப்பதற்குமுன் தைரியமாக என் அறைக் கதவைத் தட்ட மாட்டாள். மனமில்லாமல் போர்வையை உதறியெறிந்துவிட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தேன்.

''என்ன தூக்கம் இது தம்பி? விடிஞ்சு எம்மாம் நேரமாச்சு! கொதிக்க வச்சிருந்த வெந்நீர்கூட இந்தக் குளிரிலே ஆறிப் போயிருக்கப் போவுது! வெள்ளென வெளுக்கும்போதே வந்து அடுப்பை மூட்டி வெந்நீர்ப் பானையை ஏத்திப்புட்டேன். நீ என்னடான்னா....?''

ஆயா அடுக்கிக் கொண்டே போனாள். சாதாரண நூல் புடவையைச் சுற்றிக் கொண்டு, தலையைக்கூடப் போர்த்திக் கொள்ளாமல் இந்தப் பனியில் அவளால் எப்படி இந்த அதிகாலையில் எழுந்து வந்து வேலை செய்ய முடிகிறது !

இந்தப் பனி நாட்களில் இந்த ஆயாவின் உதவியால் காலையில் குளிக்க வெது வெதுவென்று வெந்நீர் கிடைக்கிறது. ''நீ ஏன் ஆயா அடுப்பை மூட்டிக்கிட்டுச் சிரமப் படறே? கொஞ்சம் வெய்யில் ஏறினப்புறம் நான் பச்சைத் தண்ணீரிலேயே குளித்துக் கொள்கிறேன் !'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். அவள் கேட்டால் தானே ?

''நல்லா இருக்கு போ. இந்தக் குளிரிலே பச்சைத் தண்ணியிலே குளிக்கிற உடம்பைப் பாரு ! நீ பேசாமல் இரு தம்பி!'' — என்று என்னை அடக்கிவிட்டு, வெந்நீர் அடுப்பைப் பற்ற வைத்து விடுவாள் அவள்.

காலையில் நான் எழுந்து வெளி வருவதற்கு முன்னதாகவே தாழ்வாரத்தை மெழுகிப் பெருக்கிப் பளிச்சென்று கோலம் போட்டு வைத்திருப்பாள். நான் கொடுக்கிற சம்பளக் காசான ஐந்து ரூபாய்க்காக அவள் வேலை செய்வதாகத் தோன்றவில்லை. ஏதோ ஓர் ஈடுபாடு அவளுக்கு.

ஒரு பெரிய பங்களாவின் முன் வாசல் அறையில் நான் குடியிருந்தேன். வீட்டைச் சுற்றி நாலாபுறமும் பெரிய தோட்டம். அப்புறம் காம்பவுண்டுச் சுவர். நான் அந்த அறைக்குக் குடியேறியபோது அந்தப் பங்களாவில் அதன் சொந்தக்கார் அம்மாள் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். அவளுக்கு உதவிக்காக, அவளுடைய மருமகளும் பேரன் பேத்திகளும் இருந்தார்கள். பையன் வடக்கே டாட்டா நகரில் வேலையாக இருந்தான். அம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் மோசமாகப் போய்விட்ட ஒரு சந்தர்ப்பத்தில்

இரண்டு மாத லீவில் வந்திருந்தான் அவன். அந்தச் சமயத்தில்தான் நான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து, குடியிருக்க இடம் தேடிக் கொண்டிருந்தேன். என் நண்பர் ரங்கராமானுஜத்துக்கு இந்த வீட்டாருடன் மிகவும் நெருங்கிய பழக்கம். அவருடைய சிபாரிசின் பேரில், பங்களாவின் முன்பக்கத்திலிருந்த இந்த அறை எனக்கு வாடகைக்குக் கிடைத்தது. வீட்டுக்கார அம்மாளின் பையன் கஸ்தூரிக்கு என்னை மிகவும் பிடித்துப் போய் விட்டது. இரண்டு மாத லீவு முடிந்து ஊருக்குப் புறப்படு முன்னால் என் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, "உங்களை அந்நியமாகவே நினைக்கத் தோணலே, ஸார். என் தமையனாராகத்தான் நினைக்கிறேன். அம்மாவை இந்த ஸ்திதியில் விட்டுவிட்டுப் போகிறேன். அவசியமானபோது கொஞ்சம் நீங்கள்தான் கவனித்துக் கொள்ளணும்" என்று நாத் தழுதழுக்கக் கூறிவிட்டுப் போனான். அவனுடைய தகப்பனார் ஒரு காலத்தில் இந்த ஊரில் மிகவும் அந்தஸ்தோடு வாழ்ந்தவராம். வக்கீல் பக்ஷிராஜன் என்றால் அந்தப் பிராந்தியத்தில் தெரியாதவர்கள் கிடையாதாம். தம் சுய சம்பாத்தியத்திலேயே இந்தப் பெரிய இடத்தை விலைக்கு வாங்கி இந்தப் பங்களாவையும் கட்டி வைத்திருக்கிறார் அவர். பின்னை என்னடாவென்றால் வயிற்றுப் பிழைப்புக்காக வடக்கே எங்கோ போக வேண்டியிருக்கிறது. அந்த அம்மாள் தன் உயிரை 'அவர் கட்டிய வீட்டில்தான் விடுவேன்' என்று பிடிவாதமாகக் கூறி அங்கிருந்து நகர மறுத்துவிட்டாள். ஆகவே, துணைக்குத் தன் மனைவியையும் குழந்தைகளையும் விட்டுத் தான் மட்டும் தனியாக டாட்டா நகருக்குப் புறப்பட்டுச் சென்றான் கஸ்தூரி.

"வெந்நீர் ஆறிப் போகுது தம்பீ...! குளிச்சுப்புடேன்....!"

குளியலறையில் குளிப்பதற்குத் தயாராக வெந்நீரை வெளியில் எடுத்து வைத்துவிட்டு வந்து குரல் கொடுத்தாள் ஆயா.

மணி எட்டாகி விருக்கது. இன்னும் தாமதித்துக் கொண்டு சோம்பிக் கிடப்பதில் அர்த்தமில்லைதான். துண்டை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

நான் குளித்துவிட்டுத் திரும்பி வந்த போதும் ஆயா நின்று கொண்டிருந்தாள்.

"ஏன் ஆயா; வீட்டுக்குப் போகலே....?"

"போகணும் தம்பி! உங்கிட்ட ஒரு விசயம் கேக்கணுமின்னுதான் நின்னுகிட்டு இருக்கேன்!"

"என்ன விசயம் ஆயா....?"

"தம்பி, வீட்டை விக்கப் போறதுன்னு பேசிக்கிறாங்களே, நிசந்தானு?...." ஏதோ சொந்த நிலம் பறி போவதைப் போன்ற துயரத்துடன் கேட்டாள் அவள். குழி விழுந்திருந்த அவளது கண்கள் இலேசாகக் கலங்கியிருந்தன.

"ஒண்ணும் நிச்சயமாகத் தெரியலே ஆயா. ஊரிலே பேசிக்கிறாங்க. சோடா தொழிற்சாலை முதலியார்தான் வாங்கப் போறாராம். இன்னும் ஒண்ணும் முடிவாகலேன்னு சொல்லிக்கிறாங்க!"

வாசல் திண்ணையில் நின்ற கருங்கல் தூணைத் தடவித் தடவிப் பார்த்துக் கொண்டே நின்றாள் ஆயா.

"அம்மா இருந்திருந்தால் இந்த வீட்டை விக்க விடுவாங்களா? எல்லாம் கைநிறையத்



தான் சம்பாதிக்குதுங்களே! இந்த வீட்டை விக்கும்படி இப்ப என்ன வந்தது?''

''நீ சொல்லிப்புட்டே! அவங்க அவங்களுக்கு என்ன தேவையோ....?''

''அது என்ன தம்பி, அப்படிச் சொல்லறே? கஸ்தூரிக்கு மாசம் ஆயிரம் ரூபாய் சம்பளமாம். பெரிய எசமான்கூட இவ்வளவு சம்பாரிச்சது கிடையாது. அப்படி என்ன பெரிய குடும்பமா....? பெரிய ஐயாவும் எங்க வீட்டுக்காரருமா தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கட்டி வைச்ச வீட்டை விக்கணும்னு அதுக்கு எப்படித் தோணிச்சோ...?''

வாசல் முகப்பில் கஜலக்ஷ்மியின் உருவம் செதுக்கி யிருந்தது. அதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு பேசினான் ஆயா.

'' 'இந்த வூட்டுக்கு எஜமானி லக்ஷ்மிதான். அதனாலே இங்கே ஒரு லக்ஷ்மி பொம்மை வச்சுப்புடும் ஆசாரி'ன்னு சொல்லி சாஸ்திரிகிட்ட இந்தக் கஜலட்சுமியைச் செதுக்கச் சொன்னாரு ஐயா. இப்படி ஓரோர் இடமும் நினைச்சு நினைச்சு, எத்தனை ஆசையாக் கட்டினாரு போ...! அவ்வளவுதான்.''

சற்று நேரம் வேறு ஒன்றும் பேசாமல் கருங்கல் தூணைத் தடவிக் கொண்டே நின்றாள் ஆயா.

உள்ளே போய் வேட்டி மாற்றிக் கொண்டு வந்து, தலை வாரிக் கொண்டிருந்தேன் நான்.

''நான் வரேன் தம்பி....!'' என்று கூறி விட்டுக் கிளம்பினான் ஆயா. போகும்போது கிழவி கண்ணைத் துடைத்துக் கொள்ளுவதைக் கண்டேன். அவளுக்கு மனிதர்களிடம் மட்டும் தான் பாசம் என்றில்லை. ஜடப் பொருளான இந்த வீட்டின் மீதுகூட அத்தனை பாசம் இருந்தது!

ஆயாவைப் போலவே, வீட்டுக்கார அம்மாள் லட்சுமிக்கு இந்த வீட்டின் மீது அளவு கடந்த ஈடுபாடு இருந்ததை நான் அறிவேன். ஒரு சமயம் அவளுக்கு உடல் நிலை ரொம்பவும் மோசமாகப் போய் விட்டது. கஸ்தூரியை உடனே புறப்பட்டு வரச் சொல்லி நான்தான் தந்தியடித்தேன். தந்தியைப் பார்த்ததும் எப்படியோ அழுது லீவு வாங்கிக் கொண்டு பறந்து வந்து விட்டான் அவன். நான் தந்தியடித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று அவன் நினைத்துக் கொள்ளும்படி லட்சுமியம்மாளுக்கு உடம்பு தெளிந்துவிட்டது. அவன் வந்து பார்க்கும் போது, அவன் மனைவியும், குழந்தைகளும், ''நீங்க வரும் வரை தாங்குமோ தாங்காதோன்னுதான் இருந்தது. இது தெய்வச் செயல்தான். இந்தக் கண்டத்துக்கு எப்படியோ தப்பிவிட்டாளே!'' என்று ஒரே மாதிரி சொல்வதைக் கேட்ட பிறகுதான் நான் தந்தி கொடுத்ததை நியாயம் என்று அவன் ஏற்றுக் கொண்டான். ஒரு வாரம் தங்கியிருந்தான் அவன். நாளுக்கு நாள் லட்சுமியம்மாள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வார முடிவில் அவள் நன்றாக எழுந்து உட்கார்ந்து அரட்டையடிக்கத் தொடங்கி விட்டாள்.

''ஓரோரு சமயம் உனக்கு உடம்புக்கு அதிகமாகிற போது நான் பதறியடித்துக் கொண்டு வர முடியுமா அம்மா? இந்தத் தடவையே லீவு கேட்டு வாங்கி வருவது ரொம்பவும் சிரமமாகப் போயிடுத்து. பேசாமல் நீயும் என்னோடு வந்து இருந்து விடேன் அம்மா!'' என்று கஸ்தூரி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான்.

அம்மாள் அசைந்தால்தானே....?

''இதோ பார், கஸ்தூரி! உங்கப்பா ஆசை ஆசையா இந்த வீட்டை எனக்காகக் கட்டி 'லட்சுமி நிலயம்'னு பேரும் வைச்சார். இந்த வீட்டிலே என் உயிரை விடாமல் எங்கோ ஊர் பேர் தெரியாத இடத்திலே போய் என் உயிரை விடச் சொல்றியே? நியாயமா? வேணும்னு உன் பெண்டாட்டி, குழந்தைகளைக் கூட்டிண்டு போயிடு. ஆயா இருக்கா எனக்குத் துணைக்கு! நான் இனிமேல் இங்கிருந்து நகர மாட்டேன்!''

எவ்வளவோ நயந்தும், அதட்டியும் கேட்டுப் பார்த்துவிட்டான் கஸ்தூரி. ஆனால் லட்சுமியம்மாள் பிடிவாதம் கொஞ்சம் கூடத் தளரவில்லை.

''என்னவோ அம்மா, உன் கடைசிக் காலத்தில் உன் பக்கத்தில் இருக்க எனக்குக் கொடுத்து வைக்கலைன்னுதான் தோணறது!'' என்று கண் கலங்கக் கூறிவிட்டுத்தான் புறப்பட்டுப் போனான் பிள்ளை.

கடைசியில், அவன் நினைத்தபடிதான் ஆயிற்று. நன்றாக இருந்த லட்சுமியம்மாள் திடீரென்று ஒரு நாள் மூச்சுவிட மறந்து போனாள். கஸ்தூரி கொள்ளி வைக்கக்கூட வந்து சேரவில்லை. சஞ்சயனத்துக்குத்தான் வந்து சேர்ந்தான்.

லட்சுமியம்மாளுக்கு இந்த வீட்டின் மீது அவ்வளவு ஆசையிருந்ததில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இந்த ஆயாவுக்கு இதில் ஏன் இவ்வளவு ஈடுபாடு?

அம்மாவின் காரியங்களெல்லாம் முடிந்து வடக்கே குடும்பத்துடன் கஸ்தூரி கிளம்பிய போது, ''வீட்டை யாருக்காவது வாடகைக்கு விட்டு விடுவதுதானே?'' என்று கேட்டேன்.

''இங்கே இருக்கிற சாமான்களையெல்லாம் எங்கே கொண்டு போகிறது ஸார்? என்னவோ கற்பகோடி காலம் வாழப் போகிறதாக எண்ணிக் கொண்டு அப்பா வீடு நிறைய சாமான்களை நிரப்பி வைத்திருக்கிறார். இப்போதைக்கு வீடு பூட்டிக் கிடக்க வேண்டியது தான். நீங்கள்தான் இருக்கிறீர்களே! கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்!''

பூட்டிய வீட்டுக்குக் காவல் போல, என்னை வாசல் அறையில் இருக்க வைத்து விட்டு அவர்கள் போய் விட்டார்கள். அவர்கள் புறப்பட்டுப் போன அன்று, தான் பெற்ற பிள்ளைகள் தன்னைத் தனியே விட்டுப் போவதைப் போன்ற தவிப்புடன் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ஆயா. இவள்தான் இப்படி உருகினாளே தவிர, அவர்கள் யாரும் இவள் கவலையைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

''அழாதே, ஆயா. வயிறு ஒன்று இருக்கே. அம்மாவையே தனியே விட்டுட்டுத் தானே போயிருந்தேன்!'' என்று ஏதோ ஆறுதல் சொல்வதாக நினைத்துக் கொண்டு



சுலேகா
தினப்படி உபயோகப் பொருள்கள்
சுலேகா டிராயிங் இங்க்
Adsol
அட்சால் ஆபீஸ் பசை & கோந்து
சுலேகா பவுண்டன் பேனா இங்க்
ஸிகுரிதி முத்திரை அரக்கு
சுலேகா ஸ்டாம்ப் பேட்
சுலேகா ஒர்க்ஸ் லிட்.
சுலேகா பார்க், கல்கத்தா - 32
Progressive/SW 21



ஹெடன்ஸா
HADENSA
மூல நோய்க்கு
எங்கும் கிடைக்கும்
DZ-892A TAM



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட் சென்னை-17



உங்கள் சர்வீஸ் என்ன?

புதிதாக வேலைக்கு மனுப் போட்டவரை மானேஜர் பேட்டி கண்டார்.

''நீங்கள் இதற்கு முன் வேறு இடங்களில் எத்தனை காலம் வேலை செய்திருக்கிறீர்கள்?''

''55 ஆண்டுகள்!''

''உங்கள் வயது என்ன?''

''45 ஆண்டுகள்.''

''45 வயதான நீங்கள் எப்படி 55 ஆண்டுகள் வேலை செய்திருக்க முடியும்?''

''ஓவர் டைம்!'' — எஸ். பி.

□ □ □ □ □ □ □ □ □ □ □

அவன் வேதனையைக் கொஞ்சம் கிளறி விட்டு விட்டுப் போகிறான் கஸ்தூரி.

லட்சுமியம்மாள் காலமாகியபின், கஸ்தூரி வீட்டைப் பூட்டிக் கொண்டு, புறப்பட்டுப் போய் ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. இடையில் ஒரு முறைகூட அவன் இந்தப் பக்கம் வரவில்லை. ஆள்தான் வரவில்லை! ஒரு கடிதம் உண்டா..? அதுவும் இடையாது. மாதா மாதம் நான் அனுப்புகிற வாடகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு மணியார்டர் பாரத்தில் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தான். அவன் டாட்டா நகரில் இருக்கிறான் என்பதைத் தெரிவிக்கும் அத்தாட்சிப் பத்திரமாக அது வந்து கொண்டிருந்தது.

திடீரென, ஒரு மாதமாக, அவன் வீட்டை விற்றுவிடப் போவதாக ஊரில் ஒரு வதந்தி நிலவியது. நண்பர் ரங்கராமானுஜமே என்னிடம் கூறினார். என் காதுகளுக்கு எட்டிய இந்தச் செய்தி ஆயாவுக்கும் எட்டியிருக்கிறது! ஆனால் அவளை இந்தச் செய்தி ஏன் இவ்வளவு வேதனைக்குள்ளாக்க வேண்டும்?

மறுநாள் காலை ஆயா வந்தபோது அவளிடம் கேட்டேன்: ''கஸ்தூரி இந்த வீட்டை விற்கப் போகிறானென்றால், நீ ஏன் ஆயா இவ்வளவு கவலைப்படறே?''

ஆயா என் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை. இடுப்பில் செருகிக் கொண்டிருந்த துணிப் பையை எடுத்து, அதன் சுருக்கை அவிழ்த்து, உள்ளிருந்து இரண்டு மூன்று வெற்றிலைச் சுருள்களை எடுத்துச் சுண்ணாம்பு தடவி வாயில் அடைத்துக் கொண்டாள். ஆயாசப் பெருமூச்சுடன் சுவரில் சாய்ந்தவாறு உட்கார்ந்து கொண்டாள். அவள் பார்வை தோட்டத்தின் கிழக்கு மூலையில் வரிசையாக நின்ற தென்னை மரங்களில் மேய்ந்து கொண்டிருந்தது.

''என்ன ஆயா, பதிலையே காணோம்...?''

ஆயாவின் பார்வை என்பக்கம் திரும்பியது.

''அய்யரு இந்த வீட்டைக் கட்டணும்னு நினைச்சப் பணத்தைக் கொட்டினாரு! எங்க வூட்டுக்காரரும் நானும், மண் சுமந்து, செங்கல் சுமந்து, இதைத் தொட்டுத் தொட்டுக் கட்டியிருக்கோம். அய்யரு உசிரோட இருந்த வரைக்கும், நாங்க இந்த இடத்திலே தான் குடியிருந்தோம்!'' என்று சொல்லி, நான் இப்போது குடியிருக்கும் அறையைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

''அய்யாருக்கு முன்னாடியே இவரு போய்ச் சேர்ந்துட்டாரு. அதன் பிறகுதான் நான் இங்கிருந்து காலி பண்ணிக் கொண்டு போனேன். லச்சுமியம்மாளுக்கு இருந்ததைவிட இந்த வீடு எனக்குத்தான் சொந்தம். ஊம். உலகம் ஒத்துக்குமா....?''

அவள் சொல்வது மட்டுமில்லை, இந்தக் கேள்வியும் நியாயமாகத்தான் பட்டது எனக்கு.

''ஒரு வார்த்தைக்காகச் சொல்லலை தம்பி! அம்மாந்தூரம் இந்த வூட்டோடு மனசு ஒட்டிப் போயிடுச்சு. அய்யராவது பொட்டுனு ஒரு நாள் மார்வலின்னு சொல்லி உக்காந்தவரு கண்ணை மூடிட்டாரு. எங்க வூட்டுக்காரரு ஒரு மாசம் இதே வூட்டிலே, லச்சுமியம்மா படுத்திருந்தாங்களே, அந்தக் கட்டிலிலேயே படுத்திருந்துதான் மூச்சை விட்டாரு. சொந்த அண்ணன் தம்பிகூட அப்படிக் கவனிச்சுக்க மாட்டாங்க. அய்யரு அப்படி அக்கறையா டாக்டரைக் கூட்டியாந்து காண்பிப்பாரு! அதையெல்லாம் சொல்லி என்னத்தே? அந்தக் கூறுகெட்ட மனுசங்க, அவுங்க ஆளுக. அதெல்லாமே கனவுதான். தம்பி! நான் சொல்றேனென்று நீ கோவிச்சுக்கிடாதே!''

பேசி முடித்த களைப்பில் ஆயாவுக்கு மூச்சு வாங்கியது. கன்னாடிப் போய்விட்ட அந்தக் காலத்தின் நினைப்பில் சற்று நேரம் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்து விட்டுத்தான் எழுந்து போனாள் அவள்.

ஒரு நாள் மணி பத்தடித்த பிறகும் ஆயா கிளம்பாததைக் கவனித்த நான், ''மணி பத்தாகிறதே ஆயா. இன்னும் கிளம்பலே? இல்லே.... இங்கேயே படுத்துக்கிடறயா?'' என்று கேட்டேன்.

''எங்கே படுத்தாம் என்ன தம்பி? கொஞ்சத் தூக்கமா கொஞ்ச நேரம் தலை சாய்க்கப் போறேன். இப்படியேதான் முடங்கிக் கிடக்கிறேனே! இன்னும் பத்து நாளிலே சோடாக் கம்பெனிக்காரன் வந்து இந்த இடத்தை இடிச்சுத் தள்ளப் போறான். அதுவரைக்கும் தானே இது நம்ம இடம்....!'' — கிழவியின் குரல் தழுதழுத்து, விம்மலாய்க் கரைந்து விட்டது!

அதன் பிறகு தினமும் கிழவி வாசல் திண்ணையில்தான் முடங்கிக் கிடந்தாள்.

எல்லாம் பத்து நாட்கள்தான்.

அதன் பிறகு தானே அந்த இடத்திலிருந்து காலி பண்ணிக் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்து விட்டது. கஸ்தூரி டாட்டா நகரிலிருந்து வீட்டை விற்பதற்காக வந்திருந்தான். பேரம் எல்

லாம் முடிந்து. இன்னும் இரண்டு நாட்களில் வீடு சோடாக் கம்பெனியின் பேரில் மாற இருக்கிறது என்று கூறினான் அவன்.

வீட்டில் இருந்த சாமான்களை யெல்லாம் கூட விற்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டானாம். கெட்டிக்காரன்தான்.

''வேறு இடம் கிடைக்கிற வரைக்கும் என் வீட்டிலேயே இருக்கலாம், வாருங்கள்!'' என்று நண்பர் ரங்கராமானுஜமும் கூறியிருந்தார். ஆகவே, கஸ்தூரி வந்து கூறியதும் இடத்தைக் காலி பண்ணி விட்டேன் நான்.

சாமான்களை நான் குதிரை வண்டியில் ஏற்றுகிற பொழுது, ஆயா வாசலில்தான் நின்று கொண்டிருந்தாள். புறப்படும் நேரத்தில் அவள் எங்கே பெரிதாக அழ ஆரம்பித்து விடுவாளோ என்று எனக்குப் பயம். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. உண்மையில் எனக்குத்தான் கண் கலங்கி விட்டது.

''போய் வரட்டுமா ஆயா ?''

ஆயா சிலை போல நின்றாள். எனக்கு விடைகொடுக்கும் பாவனையில் தலையை ஆட்டினாள். உணர்ச்சிகளே அற்றுப் போன உருவாய் அவள் அப்போது நின்ற அந்தக் காட்சி என் மனத்தை என்னவோ செய்தது.

அதன் பிறகு ஒரு மாதத்துக்கு மேல் ஓடி விட்டது. பெரிய தெருவில் ஓர் இடம் பார்த்துக் கொண்டு நான் குடியேறி விட்டேன். முன்பிருந்த பழைய வீட்டின் பக்கம் போக வேண்டிய அவசியமே ஏற்படவில்லையாதலால் ஆயாவை அப்புறம் நான் சந்திக்கவேயில்லை.

ரங்கராமானுஜத்தின் மூலம்; அந்த வீட்டைச் சோடாக் கம்பெனிக்காரன் வாங்கி, இடித்துக் கட்டும் வேலைகூட ஆரம்பமாகி விட்டது என்று தெரிந்து கொண்டேன். கஸ்தூரி ஊருக்குப் போய்ச் சேர்ந்திருப்பான். அவனையும் அப்புறம் நான் பார்க்கவில்லை. ஆனாலும் ஆயாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மட்டும் மனத்தின் அடித்தளத்தில் இலேசாகப் புகைந்து கொண்டிருந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

ஹோட்டலில் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே வந்தேன். என்னவோ தோன்றியது. 'ஒரு வேளை ஆயா அநேகமாக அந்த வீட்டுக்குப் பக்கத்தில்தான் சுற்றிக் கொண்டிருப்பாள். போய்த்தான் பார்ப்போமே !'

கால்கள், என்னை மேலே யோசிக்க விடாமல், நான் முன்னர் குடியிருந்த வீட்டை நோக்கி என்னை இட்டுச் சென்றன.

தூரத்தில் வரும் போதே காம்பவுண்டுச் சுவர் இடிந்து கிடப்பது கண்ணில் பட்டது. 'விற்றதுதான் விற்றானே, யாராவது குடித்தனக்காரருக்கு விற்றிருக்கக் கூடாதா ?' — என்று தோன்றியது எனக்கு. கம்பெனிக்காரனுக்கு விற்றதனால்தானே, அவன் இதை இடித்துத் தகர்த்து மாற்றிக் கொண்டிருக்கிறான் !

பாவம், ஆயா ! இதைப் பார்த்து எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறாளோ ?

''பாவம் ஆயா !''

நான் நினைத்ததை யாரோ வாய்விட்டு அருகே கூறக் கேட்டுத் திரும்பினேன்.

சந்தையிலிருந்து கரிகாய் வாங்கிச் செல்லும் இரண்டு பேர் பேசிக்கொண்டு போனார்கள்....

''பாவம்! பழைய காலத்து உத்திரம் விழுந்தால் தாங்குமா....? அவ்வளவுதான் !''

எனக்கு ஏனோ உள்ளம் பரபரத்தது.

''என்ன அப்பா, சமாசாரம்?'' என்று கேட்டு விட்டேன்.

''அந்த வீட்டை இடிக்கச் சோடா பாக்டரி கட்டறாங்களில்லே! அங்கே ஒரு ஆயா கூலி வேலை செய்துக்கிட்டு இருந்ததாம். என்ன தலையெழுத்தோ....? உத்திரம் தலையிலே விழுந்து செத்துக் கிடக்கு....!''

என் தலையில் அந்த உத்திரம் விழுந்து விட்டதைப் போல ஒரு வலி !

ஓடினேன்......!

கூட்டமாகக் கூடி நின்றார்கள். இடிந்தும் சரிந்தும் விழுந்த சுவர்களும் தூண்களும்.... ஜனக் கும்பலும் தலை சுற்றியது.

'' இந்த வூட்டிலேதாங்க அது பழியாக் கிடக்கும்! என்ன தலையெழுத்தோ — ? இப்படி உத்திரம் விழுந்து சாகவேண்டாம்!''

கூட்டத்தை விலக்கிக் கொண்டு, பார்க்கப் போன என் கால்கள் தயங்கின. முடியாது! அந்தக் கோரத்தை என்னுடைய கண்களால் காண முடியாது.

நீர் முட்டிய என் கண்களுக்குள், நான் சாமான்களைக் குதிரை வண்டியில் ஏற்றுகையில் எனக்கு விடை கொடுத்து அனுப்பிய ஆயாவின் உணர்ச்சியற்ற சிலை உருவம் தெரிந்தது !

'கடைசியில் ஆயா தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டாள்' என்று எண்ணமிட்டவாறே திரும்பி நடந்தேன். கும்பலின் கூச்சல் மெள்ள மெள்ளத் தேய்ந்து தூரத்தில் கரைந்து போயிற்று.

வட்ட மேஜை

- அற்புத சிருஷ்டி
- பேஷாக அமைந்தது!
- கறுப்புச் சந்தையில் கல்கி!
- மூன்று ரத்தினங்கள்

வெள்ளி விழாப் பரிசு நாவலாகிய 'கல்லுக்குள் ஈரம்' கதையை ரசனையுடனும், ஒருவிதமான பக்தி உணர்வுடனும் படித்து வரும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். சுதந்திரப் போராட்ட காலத்தைக் கண்ணுறக் கொடுத்து வைக்காத என்னைப் போன்ற இளந்தலைமுறையினர் மெய்சிலிர்க்கும் வண்ணம் எழுதுகிறார் ஆசிரியர் திரு நல்லபெருமாள் அவர்கள். கல்கி பத்திரிகை மூலமாக வெளிவந்த மற்றுமோர் அற்புத சிருஷ்டி இது.

மணக்கால்
15–7–67 எம். ஜே. ராமன்

16–7–67 கல்கி இதழில் ர. சு. நல்லபெருமாள் அவர்கள் எழுதும் கல்லுக்குள் ஈரம் என்னும் தொடர்கதையில் கதாநாயகன் ரங்கமணி, கதாசிரியர் வருணனைப்படி சூட்டும் கோட்டும் அணிந்துள்ளார். ஆனால் ஓவியர் அவரை வேட்டி சட்டையோடேயே விட்டு விட்டார். ஏன் இப்படி? கல்கியில் இப்படிப்பட்ட பிழைகள் நிகழ்வதற்கு வருந்துகிறேன்.

சென்னை — 18
14–7–67 க. நித்யா

[இந்த இதழ் அச்சாகிக் கொண்டிருக்கும் போதே தவறு உணர்ந்து திருத்தப்பட்டது. - ஆசிரியர்]

ஐயா ஸ்வாமின்னு.
ஆதென கீர்த்தனாரம்பத்திலே (பலபீமா...பலபீமா - கல்கி 9-7-67) ரொம்ப பேஷா அமைஞ்சூட்டதான்னு. ஹாஸ்யம் கசத்தியாய், பரிஹாஸம் பரிணமிப்பதாய், நையாண்டி நைஸாய், எல்லாமே பரம ஸௌக்கியமாயும், ஸௌலப்யமாயும் ஏற்பட்டுட்டது. வெறும் நமஸ்காரம்.

புதுதில்லி தங்கள் விதேயன்
8-7.67 கட்புடு

எல்லா இடங்களிலும் கல்கி 40 பைசாவுக்குக் கிடைக்கும். ஆனால் எங்கள் கல்லூரி ஆசிரியர் சங்க வாசிப்புச் சாலையில் வரும் கல்கியின் விலை மட்டும் கூடுதல்! காரணத்தைச் சொல்லி விடுகிறேன். வாசிப்புச் சாலையில் ஆங்கில இதழ்கள் சிலவும், இந்தி, மலையாளம் இதழ்கள் சிலவும் வருகின்றன. தமிழில் ஒரு பத்திரிகை வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்தேன். காரியதரிசி தயங்கினார். ஏனென்றால், எல்லாப் பத்திரிகைகளையும் ஏலத்தில் விடுவார்கள். ஒவ்வொரு ஆசிரியரும் போட்டி போட்டுக் கொண்டு பிடிப்பார்கள். வாசிப்புச் சாலைக்குப் பத்திரிகைகள் குறைந்த தொகைக்கு வருகின்ற நிலை ஏற்படும். தமிழ்ப் பத்திரிகையைத் தமிழ் தெரியாத பெரும்பான்மையான ஆசிரியர்கள் வாங்க யோசிப்பார்கள். கழகம் அதற்குரிய முழுச் செலவை ஏற்க வேண்டி நேரலாம். இந்நிலையில் காரியதரிசியிடம், ''கல்வி கழகத்தின் செலவில் வரட்டும். வாசிப்பது மூன்று பேரானாலும் தமிழ்ப் பத்திரிகை யொன்று இருக்க வேண்டும்'' என்று மலையாள ஆசிரியர்களே கூறிவிட்டனர். ஏல நாள் வந்தது. பல பத்திரிகைகளை 75, 80, 90, 100 சதவீதத்துக்குப் பிடித்தனர். கடைசியில் கல்கி ஏலத்துக்கு விடப்பட்டது. முதலில் ஒருவர் 10 சத விகிதத்துக்குக் கேட்டார். பின் 25 ஆயிற்று. 75 என்று ஒருவர் கூப்பிட்டார். என் நண்பர் எழுந்தார். நூறு என்று விளித்தார். அங்கத்தினரிடையே சிரிப்பு. 100 மூனுதரம் என்று சொல்ல ஆரம்பிக்கு முன் 105 என்று பேராசிரியர் ஒருவர் கூப்பிட்டார். எல்லாருக்கும் அதிசயம். 25 சத விகிதத்துக்குப் போகுமென்று நினைத்த கல்கி சங்கத்துக்கு லாபத்தைக் கொடுக்க ஆரம்பித்து விட்டது! பேராசிரியருக்குத் தமிழ் நன்றாகத் தெரியாது. ஆனாலும் தமிழ்ப் பத்திரிகையின் மீது ஓர் ஆவல். அவருக்குத்தான் கல்கி கிடைக்கும் என்று எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் அவரையும் நான் மிஞ்சி விட்டேன். 110 சத விகிதம் என்று கூப்பிட, எல்லாரும் அதிசயமாகப் பார்க்க, இப்பொழுது ஒவ்வொரு இதழுக்கும் 44 பைசா கொடுத்து வாங்கிச் சங்கத்துக்குக் கல்கியை அளிக்கின்றேன். காரியதரிசி இப்பொழுது கூறுகிறார்: ''எத்தனை தமிழ்ப் பத்திரிகை வேண்டுமானாலும் வரவழைக்கலாம்.''

சித்தூர், பாலக்காடு ஆர்.எச்.எஸ்.மணி
15-7-67 விரிவுரையாளர், அரசினர்கல்லூரி

16–7–67 கல்கி இதழில் ராஜாஜி அவர்களின் கருத்துக்களைப் படித்தேன். கதர் பற்றிய அவர் கூற்றும், ராஜமானியம் விஷயத்தில் வாக்கைக் காப்பாற்றிவிட வேண்டிய கடமையைக் காட்டிய விதமும், ஜனநெரிசல் காரணமாகக் குடும்பக் கட்டுப்பாடு பற்றி நினைப்பவர்களுக்குக் கொடுத்த புள்ளி விவர இடியும், மூன்றுவித ரத்தினங்கள்.
ஊதவேண்டிய சங்கைத் தக்க தருணங்களில் அவர் ஊதிக் கொண்டுதான் இருக்கிறார். கேட்கும் காதுகள் செவிடாக இல்லாமல் இருக்க வேண்டுமே!

பவானி
13–7–67 எழிலன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 ச
தபால் செலவு தனி